
Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් ஜூன். 08 - 14, 2006

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 665




## கிழக்கு முஸ்லிம்களை அச்சுறுத்தும் தாக்குதல் முஸ்தீபுகள்!





## ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்த நகர்வு என்ன?

## அதிகரிக்கும் படுகொலைகளும் ஏற்படப்போகும் ஆபத்துகளும்!

## அரவாணிகள் எதிர்கொள்ளும் சமூகச் சவால்கள்!





## துளி - போவோம்! ரசிப்போம்!




சூடு பறக்கும் விறுவிறு போட்டிகள்!

FIFA WORLD CUP GERMANY 2006

## உள்ளம் பெருங் கோயில்!

## ஆன்மீகம்



"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயமாம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்."

என்னும் திருமூலரின் அருள் வாக்கிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதென்ன? உள்ளத்தால் மெய்ப் பொருளைக் காண வல்லவர்க்கு (அருள் உணர்வு உடையவர்க்கு) உடம்பே ஆலயமாகி விடுகிறது. "கருணையே வடிவான இறைவன் நல்ல உள்ளத்திலேயே குடிகொண்டிருக்கிறான்" என்பது திருமூலரின் கருத்தான போதிலும் இறைவனை உள்ளத்தில் அமர்த்துவதற்கு ஏற்ற சூழல் அமையவேண்டியது அவசியமாகின்றது. அத்தகைய ஒரு சூழல் அமைவதற்கு ஏற்கனவே அத்தகைய சூழலை அமைத்துக் கொண்டு அதை வளர்க்க முற்பட்டவர்களின் வழிகாட்டலில் உருவானதுதான் வேதம். அதாவது ஆன்மீக நெறி எனத் துணியலாம். உள்ளத்தில் கருணையற்றவர்களின் வேண்டுதலானது வெறும் 'காமிய' வழிபாடாகவே அமைந்துவிடும். அதனால் அருளுடைமை மேலோங்குவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே, அருளுடைமையை நோக்கிய ஆன்மீகமே சிறந்ததெனக் கொள்ளலாம்.

-என்.எஸ்.ராஜா, தம்பலகாமம்.

## இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை

"எனது மகிமையின் செல்வங்களின் நிமித்தம் உனது தேவைகளை நிறைவு செய்வேன்" (பிலிப்பியர் - 4:15).

ஆண்டவர் கூறுவதைப் பாருங்கள்! எமது தேவைகளை நிறைவேற்ற எவ்வளவு ஆவலுடன் காத்திருக்கிறார் என்பதை. எம்மைப் படைத்ததோடு மட்டும் விட்டு விடவில்லை. இறைவனின் கட்டளைகளை நம் அன்றாட வாழ்வில் நாம் அனுசரித்து நடக்கும் போது, அவர் எம்மோடிருந்து எம்மை அரவணைத்து தனது மகிமையின் செல்வங்களால் எம் தேவைகளை நிறைவேற்றுவார். துன்பம் என்ற சொல்லுக்கே இடமிராது.

"உனக்குப் பலமளிப்பவரான என் மூலமாக நீ அனைத்தையும் செய்யமுடியும்" (பிலிப் - 4:13).

இயேசுவின் நிறைவான அன்பும் ஆசீர்வாதமும் எமக்கிருக்கும் போது நாம் செய்யும் காரியங்கள் அனைத்துமே வெற்றியைத்தான் தரும்.

கஷ்டங்கள், வேதனைகள் இவ்வுலகில் அனைவருக்கும் ஏற்படுவதுண்டு. நாம் இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால், எம் கரங்களால் அவரின் பாதங்களை அரவணைத்து எம் உள்ளங்களிலிருந்து கண்கள் வாயிலாகக் கொட்டும் கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவும் போது, எம் கஷ்டங்கள், வேதனைகள் நொடிப் பொழுதில் எம்மை விட்டு அகன்று விடும்.

இறைவா! உமக்கு நன்றி!

-ஜோசப் அருள்சாமி, இரஜவெல்ல.

## ஷைத்தானின் செயல்

ஒரு மனிதன் ஏழையாக இருக்கும் போது அவன் உள்ளத்தில் ஷைத்தான் ஊடுருவி, நீ ஏழையாக இருப்பது அல்லாஹ்வின் செயல் என்று நினைக்கின்றாயா? இதில் என்ன நீதமிருக்கிறது?

பாவங்கள் செய்யும் பாதகனுக்கும், கொடுமைகள் புரியும் கொடும் பாவிக்கும் அளவுக்கு அதிகமாக அல்லாஹ் பணத்தைக் கொடுக்கின்றான். ஆனால் உன்போன்ற ஒன்றுமில்லா ஏழைகளுக்கு ஒரு காசும் கொடுக்காமல் பசியால் அவன் உன்னைச் சாகடிக்கிறானே.


உன் தேவைகள் என்னவென்று தெரிந்திருந்தும் அல்லாஹ் இப்படிச் செய்கிறான் என்றால் அவனுடைய பரந்த அளவில் ஏதோ குறையிருக்கிறது.

மறுமையில் நன்மை கிடைப்பதற்காக இவ்வுலகில் அவன் ஒன்றும் உனக்குக் கொடுக்கவில்லை என்றால், இங்கு பசியையும், வறுமையையும் கொடுக்காமலே மறுமையில் உனக்கு அவன் நன்மை கொடுப்பதற்கு சக்தி படைத்தவன்தானே? ஏன் அவன் கொடுக்கவில்லை?" என்று ஷைத்தான் அவனை வழிகெடுக்கிறான்.

இது ஷைத்தானின் செயல் என்று எவனுடைய உள்ளத்தில் இறை விசுவாசத்தின் உறுதி மிகைத்திருக்கிறதோ அவனை ஷைத்தான் வழிகெடுக்க முடியாது. அல்லாஹ் அவனை பாதுகாப்பான்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.662




பரிசுக்குரிய கவிதை

### அலைகிறேன்

இந்த
உதிரிப் போர்கள்
எந்நாள் உதிரும்?
என் உறவுகளை- நான்
எந்நாள் அடைவேன்?
உறவுகளைத் - தேடி
அலைகிறேன்
இக்குப்பை மேடுகளில்!!!

-எம்.ஐ.மார்சூக், ஏறாவூர்.

## கவிதைப் போட்டி இல.665



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.06.2006.

கவிதைப் போட்டி இல.665
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### குப்பையான வாக்குறுதி

போர்நிறுத்த
ஒப்பந்தம் என்கிறீர்கள்!
நிஜமான சமாதானம்
என்கிறீர்கள்!
அத்தனை
வாக்குறுதி
குப்பைகளை
நாங்கள்தான்...
அள்ள வேண்டியிருக்கு...

-இரா.புஷ்பகாந்தன், புல்மோட்டை.

### ஏக்கம்!

கண்ணிலோ பரிதாப
ஏக்கம்!
நெஞ்சிலோ தீராத
பாரம்!
எங்கள் வறுமை பற்றி
எவருக்கும் கவலையில்லை.

-சி.பவித்திரா, பத்தரமுல்லை.

### எச்சரிக்கை!

தாயின் மானம் பறித்தீர்!
பொறுத்துக் கொண்டேன்!
தந்தையின் உயிர் எடுத்தீர்!
சகித்துக் கொண்டேன்!
அநாதையென்றீர்...!
அகதியென்றீர்...!
ஊமையானேன்!
என் பசிக்கு சோறு போடும்
இந்தப் பணியையும்
பறிக்க நினைத்தீர்...!
இனியும் நான்
என்ன செய்யட்டும்.

-அன்ஸா அல்.ஆஸாத், ஏறாவூர் - 06.

### வேண்டுகோள்

அநாதையான எனக்கு
அன்றாடம்
அரைசாண் வயிறு தான்
நிறைகிறது
ஆயுதப் பயிற்சியென்று
என் பிஞ்சு வயிற்றில்
அடித்து விடாதே!!

-ஜெ.ராஜேஸ், தவசிக்குளம்.

### கூட்டு

குப்பையைக் கூட்டி
அள்ள முடிகிறது
குழப்பிப் போயிருக்கும்
மனிதர்களைக்
கூட்டமுடியவில்லையே
கூட்டு வாழ்க்கை
இன்னுமிருப்பது
மிருகங்களிடம்தானே.

-தாமரைமகன், திருமலை.

### குப்பை

மனக்குப்பை
நீங்கும் வரை
தெருக்குப்பை
குறையாது - தம்பி.

-இரா.இராமகிருஷ்ணன், பொகவந்தலாவை.

### தனிமை

யுத்தம் தொடர்ந்ததனால்
பெற்றோரை
பறிகொடுத்தும்
இயற்கை அனர்த்தத்தால்
இருப்பிடத்தை இழந்தும்
அகதிகளாய்
அலைந்ததனால்
அருங்கல்வியை
தொலைத்தும்
தனிமையில் தவித்து நிற்க
தலைவிதிதான் காரணமா?

-மொகிதீன் எம்.சரீப், திருகோணமலை.

### இனி எங்கே?

வீடிழந்து அன்னை
தந்தையை இழந்து
வீதி வழி வந்தேன்
என்னைப் பெற்ற
தாயின் வித்துடலை
இனி எங்கே
காண்பேன்.

-ஏ.எஸ்.எம்.ரவூர், கொழும்பு - 15.

### எதைத் தேடுகிறாய்...?

நம் நாட்டின்
குப்பையில்
வீசி எரியப்பட்ட
சமாதானத்தையா?
இல்லை
குப்பையில்
கிடக்கும் - உன்
உறவுகளையா?

-அஜ்ஹத் எம்.ஜே., சீனக் குடா.

### பெரும்பாடு

கூப்பாடு
போடும்
வயிற்றுக்கு
சாப்பாடு
தேடும்
சாதாரணங்கள்
நாங்கள்.

-காமீமம் செய்னுலாப்தீன், கிண்ணியா - 05.



# வாசகர் சாலை

எனது அன்பின் முரசிற்கு!
கடல் கடந்து வெகு தொலைவில் இங்கு நான் இருந்தாலும், காலம் தாழ்த்தி நீ என் கை வந்து சேர்ந்தாலும், ஒவ்வொரு முறையும் நீ கிடைக்கும் போது நான் அடையும் பூரிப்பு அளவிட முடியாதது. நீ நெட்டில் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்.

-பி.சுரேஷ், யூ.எஸ்.ஏ.

இனிய தினமுரசே!
உன் உள்ளடக்கங்களைப் பார்த்து என் நெஞ்சினுள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்கின்றன. எப்படித்தான் நீ இவ்வளவு காலமும் உன் பணியைச் சிறப்பாக செய்கின்றாயோ? என்றென்றும் புதுப்பொலிவுடன் வந்து என் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகின்றாய். என்றும் உன் பணி தொடர என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

-கே.நந்தினி, வவுனியா.

அன்பின் முரசே!
உனது ஆக்கங்களே தனிச்சுவை. அதிலும் எந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் காணாத புதிய செய்திகளைத் தருவது நீதான். உன் ஆக்கங்களுக்கு என் பாராட்டுக்கள். நீ நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

-இ.சித்திரா, பொலிஹேன்கொட.

### 'தின'முரசாகட்டும்!

வாரமலர் தினமுரசு!
தினமும் வரும் முரசாக வாசகர் உள்ளங்களை வசப்படுத்துமா? 649 அற்புத முரசுகளை அழகாக அரங்கேற்றி அசத்தி விட்டீர்கள். அனுதினமும் வெளியிட்டு வாசகர்கள் ஆவலைத் தீருங்கள். பெயருக்கு ஏற்றாப்போல பொருத்தமானதாக்குங்கள். எதிர்காலம் வளமாக அமைய முரசுக்கு வாழ்த்துகள்.

-சின்னராஜி, காரைதீவு.

### சுவை தொடரும்

யாசிக்கிறேன் முரசே!
வாரந்தோறும் காத்திருந்து உனை வாசிக்கும் ஒரு வாசகன். எப்போதும் உனை விரும்பியே படிக்கிறேன். உனது ஒவ்வொரு ஆக்கமும் எனக்குப் பயனுள்ளதாக உள்ளது. தொடர்ந்தும் உன் வீர சேவை தொடர வேண்டும். எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

-ஏ.எம்.அகிலா, இராஜகிரிய.

### விழி தரும் சுவை

விழிகள் தரும் சுவை
வாரம் தோறும் கிடைக்கும்
வரம்
இதயம் மகிழும் இன்பம்
இத்தனையும் தினமுரசு!
இந்த அதிசய உலகில் - எம்
கவிதைத் துளிகள் துள்ளி
விளையாடும் தேன் கிண்ணம்
நீ!
என்றென்றும் நீ வாழ
எம் வாழ்த்துக்கள்...
உந்தன் வாழ்வில் தான்
எங்கள் மலர்வுகள்...
கமழும் சிந்தியாவால்
சிரிக்கும் நாங்கள்...

-பதியா, சங்குவேலி.

# உங்கள் பக்கம்

## புகையிரத அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

**நான்** அண்மையில் மலையகப் பகுதியில் இருந்து கிழக்கு மாகாணமான மட்டக்களப்புக்குச் சென்றிருந்தேன். அவ்வேளையில் நடந்த உண்மைச் சம்பவங்களே இவை.

அநேகமான புகையிரத நிலையங்களில் தமிழ் மொழி பாவிப்பதைக் காணவே முடியவில்லை. ஏன் இந்தப் பாகுபாடு என்று தெரியவில்லை.

இவ்வாறான சின்னச் சின்ன செயல்களினால் தான் நம் அழகிய நாடு ஒற்றுமை நீங்கி போர் நிலைமைக்குச் சென்றுள்ளது என்பதை பொறுப்புவாய்ந்தவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேவேளை கோட்டையில் இருந்து மட்டக்களப்புக்கு என்று 4ஆம் இலக்க மேடையில் இருந்து ஒரு புகையிரதம் புறப்பட்டது காலை 8.45க்கு. நாங்கள் பெற்ற டிக்கட்டும் மட்டக்களப்புக்கு என்று தான். ஆனால் தொடர்ந்து சென்ற புகையிரதம் கல்லோயா என்ற இடத்தில் மாறி, மட்டக்களப்புக்குப் போக வேண்டியது தொடர்ந்து திருகோணமலைக்குச் சென்றது. இந்த ஜதார்த்த நிலைமைக்குத் தெளிவாக மும்மொழிகளிலும் விளக்கமாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க வேண்டிய நிலைய ஊழியர்களும் கவனமெடுப்பதில்லை. விசேடமாக தமிழ் மொழி பாவிக்காத காரணத்தால் சுமார் 21 பயணிகள் சின்னஞ் சிறார்களுடன் திருகோணமலை போய், மட்டக்களப்புக்குத் திரும்ப வேண்டி வந்தது. இதனால் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ஏன் இந்த நிலைமை பயணிகளுக்கு? இவற்றை எல்லாம் கவனம் செலுத்தித்தானே பயணச் சீட்டுக்கான கட்டணம் அறவிடப்படுகிறது?

எனவே பொறுப்பான அதிகாரிகளே, இவ்வாறான மொழிப் பிரச்சினையும், இட மாற்றப் பிரச்சினையும் இனியும் ஏற்படாமல் செய்வதுடன் மட்டக்களப்பு புகையிரதத்தை, மட்டக்களப்புக்கே செல்ல வழிசமைக்கப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஆவன செய்யுமாறு தினமும் பயணம் செய்யும் பயணிகள் சார்பில். அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

-ஜே.ஜேசுதாஸ், வெலிஓயா, ஹட்டன்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளின் அலுவலகங்களுக்கு மூடுவிழா

## முக்கியஸ்தர்கள் பலர் தலைமறைவு; மேலும் பலர் தேடப்படுகின்றனர்

வன்னியிலுள்ள புதுக்குடியிருப்பில் பத்தாயிரம் மக்களுக்கு தற்காப்புப் பயிற்சி வழங்கியதாகக் கூறி, புலிகள் பேரணியொன்றை நடத்திய அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்கா விலிருந்து புறப்படுவதற்கு முன்தினம் புதுக் குடியிருப்பில் இந்தத் தற்காப்பு பேரணி நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. தலையில் சிகப்புப் பட்டி கட்டியவாறு மாதிரித் துப்பாக்கிகளையும் கொட்டன் பொல்லுகளையும் கொண்டு இந்தப் பேரணி நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. அன்றைய தினம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பிரான்ஸின் தலைநகரான பாரிஸிலுள்ள புலிகளின் அலுவலகம் பொலிஸாரின் முற்றுகைக்கு இலக்கானது. ஆவணங்கள் பல சோதனையிடப்பட்டதோடு கிருபாகரன், அரவிந்தன் ஆகிய இருவரும் பிரெஞ்சுப் பொலிஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. புலிகளின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் கிருபாகரன் ஈடுபட்டுவந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஆறு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான ஜேர்மனி, பெல்ஜியம், லக்ஸம்பேக் ஆகிய நாடுகளிலிருந்து புலி உறுப்பினர்கள் சிலர் தலைமறைவாகி இருப்பதாகவும் தெரியவருகிறது. அயர்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் இரகசியப் பொலிஸார் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இந் நாடுகளில் புலிகள் இயக்கத்திற்காக நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சில நபர்கள் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பிரிட்டனிலுள்ள நன்கொடை ஆணையாளரின் அலுவலகம், புலிகளின் வெண்புறா அமைப்பு தொடர்பான மேலதிக விபரங்களைக் கோரியுள்ளதோடு, இலங்கைத் தமிழர்களின் பேரில் இயங்கும் சமூக, சமய ஸ்தாபனங்கள் மீது தமது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இதேவேளை புலிகளின் ஆட்கடத்தல் நடவடிக்கைகள், போதைவஸ்து கடத்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு ஓர் இடைத் தங்கல் இடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததாக கூறப்படும். எஸ்தோனியா, சுலோவோனியா ஆகிய நாடுகளின் அரசுகளும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக தீவிர கண்காணிப்புகளைச் செலுத்தும்படி அதிகாரிகளைப் பணித்துள்ளனர். கனடாவிலும் பிரிட்டனிலும் வன்செயல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 17 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## வெலிசறைத் தாக்குதல்: 12 பேர் கைது


வெலிசறை, மகாபாகே என்ற இடத்தில் கடந்த ஆறாம் திகதி நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதல் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் பன்னிரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யூ.பி. பிரதாப்சிங்கா தெரிவித்தார். இவர்களில் சிலர் அப்பாவிகளாக இருக்கலாமென்றும் ஆனால் சந்தேகத்துக்கிடமானவர்களைப் பாதுகாப்பின் நிமித்தம் கைது செய்து விசாரணை நடத்த வேண்டியிருப்பதாகவும் அவர் சொன்னார். விசாரணையின் பின்னர் நிரபராதிகள் விடுவிக்கப்படுவார்களென்றும் அவர் கூறினார். வடக்கு - கிழக்கில் படையினரைக் குறிவைத்து நடத்தப்பட்டு வந்த கிளைமோர் தாக்குதல்கள் இப்போது கொழும்புக்கும் வந்துவிட்டதால் நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

## இந்தியாவின் நிலைப்பாடு

இலங்கையின் இன்றைய நிலைமை கொந்தளிப்பாக இருக்கின்ற போதிலும் அவ் விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லையென்று இந்திய பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். இருந்தாலும் எமது அண்டை நாடான இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கத் தயங்காது என்றும் அவர் சொன்னார். இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு பாதிக்கப்பட்டால் அது இந்தியாவுக்கும் ஆபத்தாக முடியுமென்றும் அவர் சொன்னார்.

## இலங்கை தொடர்பான இந்திய அரசின் கொள்கையே தமிழக மாநில அரசின் கொள்கையுமாகும்

### -மு.கருணாநிதி



கலைஞர் கருணாநிதி

இலங்கை தொடர்பாக இந்திய மத்திய் அரசு கொண்டிருக்கும் கொள்கையே தமிழக மாநில அரசின் கொள்கையுமாகுமென்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்தார். புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கையும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதியாகச் சென்னையில் என்னைச் சந்தித்த ஆறுமுகன் தொண்டமானிடமும் இதனையே தெரிவித்தேன்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அண்மைய வன்செயல்கள் காரணமாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தமிழகம் வந்து சேர்ந்திருக்கிறார்களே பிரதமரிடமும் சோனியா காந்தியிடமும் நான் தெரிவித்திருக்கிறேன் என்றும் அவர் சொன்னார்.

கடந்த மாதம் தமிழக முதல்வராக கலைஞர் கருணாநிதி பதவியேற்ற பின்னர் இந்தியப் பிரதமரையும் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசியது இதுவே முதற்தடவையாகும்.

## நீர்கொழும்புச் சிறை மரணம்

### விசாரணைக்கு உத்தரவு

நீர்கொழும்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சுகந்தினி என்ற யாழ்ப்பாணம், உரும்பிராயைச் சேர்ந்த இளம் பெண், ஆஸ்த்மா நோயால் மரணமடைந்தாரென்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். ஐந்து மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பெண், சிறையதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் மரணமடைந்தாரென்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாகவே விசாரணை நடத்தி உண்மை நிலையைக் கண்டறியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

## கம்போடியாவில் சட்ட விரோத ஆயுதக் கொள்வனவுக்குத் தடை

கம்போடியாவிலிருந்து ஆசியாவிலுள்ள பயங்கரவாத இயக்கங்களுக்கு சட்ட விரோதமாக ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு அந்நாட்டு அரசாங்கம், அதிகாரிகளை உஷார்படுத்தியுள்ளது. மூன்று தசாப்த காலமாக உள்நாட்டு யுத்தம் நடத்திய அந்த நாட்டிலிருந்து புலிகள் இயக்கமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருவதாக அண்மையில் இலங்கை அரசாங்கம் அந்நாட்டு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தது. விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட சக்தி வாய்ந்த ஆயுதங்களை பயங்கரவாத அமைப்புகளுக்கு கம்போடியாவிலுள்ள ஆயுத வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனரென்று அண்மையில் சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போல் தெரிவித்திருந்தது. கடந்த வருடம் கம்போடியாவில் கைப்பற்றப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் ஆயுதங்கள் அழிக்கப்பட்டனவென்று கம்போடியப் பிரதமர் ஹன்சென் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளவத்தை ஹோட்டலில் கொலைத் திட்டம்

கடந்த வருடம் கொழும்பிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பான விசாரணைகளில் முக்கிய தகவல்கள் கிட்டியிருப்பதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளவத்தையிலுள்ள ஹோட்டலொன்றில் பல நாட்கள் தங்கியிருந்த கொலையாளிகள், அங்கிருந்தே திட்டங்களைத் தீட்டியதாக இரகசியப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். அதிநவீன உபகரணங்களைப் பயன்படுத்தி வெளியுலகத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## உலகில் 50 இலட்சம் சட்ட விரோத சிறு ஆயுதங்கள்

உலகில் ஐம்பது இலட்சம் சட்ட விரோத சிறு ஆயுதங்கள் மற்றும் மென்ரக ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பதாக ஐ.நா.வுக்கான இலங்கைப் பிரதிநிதி பிரசாத் காரியவாசம் தெரிவித்தார். இவ்வாறான 35 ஆயிரம் சட்ட விரோத சிறு ஆயுதங்கள் தற்போது இலங்கையில் புழக்கத்தில் இருப்பதாகவும் இருபதுக்கு மேற்பட்ட பாதாளக் குழுக்கள் இன்னமும் இயங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இராணுவத்திலிருந்து கிட்டத்தட்ட எழுபதாயிரம் பேர் தப்பியோடியுள்ளனரென்றும் இவர்களில் சிலர் பாதாளக் குழுக்களில் அங்கம் வகிக்கின்றனரென்றும் அவர் கூறினார்.

இச் சட்ட விரோத சிறு ஆயுதங்களை அழிப்பது தொடர்பான ஐ.நா.மாநாடு விரைவில் நடைபெறவிருக்கிறது. அதற்கு இலங்கைப் பிரதிநிதி பிரசாத் காரியவாசம் தலைமை தாங்கவுள்ளார்.

## ஒஸ்லோவிலும் பிசுபிசுப்பு!

யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளின்படி இலங்கைக் கடற்பரப்பில் பயணம் செய்ய புலிகளுக்கு அனுமதியில்லை என்பதால் இது தொடர்பாக அவர்களுக்கு விசேட சலுகை எதுவும் வழங்கப்படமாட்டாதென்று ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொண்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். எனவே புலிகள் கோருவது போல் அவர்களின் படகுகளில் எமது கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் பயணம் செய்யப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கப் படையினரின் கடல் பயணங்களின் போது நாம் பிரசன்னமாயிருப்பது குறித்து எமக்கு எச்சரிக்கை விடுப்பதற்குப் புலிகளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. நாம் இரு தரப்பினரையும் மோதல்களில் ஈடுபடாமல் தடுக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகிறோம். எத்தரப்பினருக்கும் பக்கச் சார்பாக நடந்து கொள்ளவில்லையென்றும் அப் பேச்சாளர் மேலும் சொன்னார். இருந்த போதும் பல்வேறு தரப்பினர் ஒஸ்லோவில் முன்வைத்த கருத்துக்களை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

## தடை தாண்டியும் தமிழகம் செல்லும் அகதிகள்

தலைமன்னார் பேசாலைப் பகுதியிலிருந்து படகுகள் மூலம் அகதிகளாக தமிழகம் செல்பவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கைக் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ள போதிலும் இவற்றையும் மீறி அண்மைய சில நாட்களில் 200க்கும் மேற்பட்ட அகதிகள் வந்து சேர்ந்திருப்பதாகத் தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர். திருகோணமலையில் இனக் கலவரம் ஒன்று ஏற்படலாமென்ற பதற்றம் நிலவுவதால் அங்கிருந்தே பெருமளவு மக்கள் தமிழகம் செல்ல முயற்சிகளை மேற்கொள்கின்றனர். திருமலையிலிருந்து தலைமன்னாருக்குச் சென்று அங்கிருந்தே இந்த அகதிகள் படகுகள் மூலம் செல்ல முயற்சிக்கின்றனர். இவ்வாறு செல்ல முயன்ற 400க்கும் மேற்பட்டவர்களை திருகோணமலைக்கு திரும்பிச் செல்லுமாறு வடக்குக் கிழக்கு ஆளுநர் உத்தரவிட்டிருந்த போதிலும் அவர்கள் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டனர்.

தம்மைத் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தினால் தற்கொலை செய்யப் போவதாக பலர் அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றனர். திருகோணமலையின் கரையோரப் பகுதி மீனவர்களே பெரும்பாலும் இவ்வாறு வெளியேற முனைகின்றனரென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## பிரபாகரனின் மகள் துவாரகாவுக்கு சந்திரிகா உதவி செய்யவில்லை

பிரபாகரனின் மகள் துவாரகா அயர்லாந்திலுள்ள டப்ளின் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்று வருகிறார். 20 வயதான இந்த மாணவிக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத் தந்தாரென்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தி அப்பட்டமான பொய்யென்று முன்னாள் ஜனாதிபதியின் பத்திரிகைத் தொடர்பு அலுவலகம் தெரிவித்தது. கடந்த நான்காம் திகதி துவாரகா தனது பிறந்த நாளை லண்டனில் கொண்டாடினார். இதற்கு முன்னாள் ஜனாதிபதி, வாழ்த்துச் செய்தியொன்றினை அனுப்பி வைத்தாரென்று வெளியிடப்பட்ட செய்தியும் பொய்யானதென்று அந்த அலுவலகம் மறுத்துள்ளது. துவாரகாவின் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்கு புலி இயக்க முக்கியஸ்தர்களோ அல்லது அந்த இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களோ அழைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. பிரபாகரனின் மனைவி மதிவதனியும் மகன் சார்ள்ஸ் அன்ரனியும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனரென்பது குறிப்பிடத்தக்கது.

## வட - கிழக்கு தொண்டர் ஆசிரியர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

வடக்கு, கிழக்கில் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக இப்போதும் இருந்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. சகல தராதரங்களும் இருந்தும் கற்பிப்பதற்குப் பொருத்தமான பாட நெறிகள் இல்லாத காரணத்தால் நிரந்தர நியமனம் வழங்கப்படாத 744 ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குமாறு வடக்கு, கிழக்கு கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் காரியதரிசி ஆர்.தியாகலிங்கத்துக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாகக் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் அமீர் அலி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் எஸ்.தவராசா மற்றும் கல்வியமைச்சின் உயரதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இந்த முடிவெடுக்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் ஆறாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டுக் கணிசமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மீகுதியாகவுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## புதிய துணை வேந்தருக்கும் எச்சரிக்கை

யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தராக மேற்படி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தராக ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த பேராசிரியர் ரட்னஜீவன் கூலுக்கு, புலிகளின் முகவரமைப்புகளும் அவர்களின் ஆதரவாளர்களான மாணவர்கள் சிலரும் விடுத்த மரண அச்சுறுத் தலையடுத்து, அவர் குடும்பத்தினருடன் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டார். பதில் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட மற்றொரு பேராசிரியருக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து அவரும் தம் பதவியைப் பொறுப்பேற்க மறுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. புதிய பதில் துணைவேந்தர் புலிகளின் முகவரமைப்பான சர்வதேச தமிழ் மாணவர் பேரவையின் ஆலோசனைப்படி நடக்கத் தவறினால் பேராசிரியர் கூலைப் போன்றே நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## ஒஸ்லோ மாநாடு இறுதியா? ஆரம்பமா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**இம்மாதம்** 8ஆம், 9ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறும் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களின் பணி தொடர்பான மாநாட்டில் இலங்கை அரச பிரதிநிதிகளும் புலிகளும் பங்கு கொண்டிருந்த போதும் இரு தரப்பிற்குமிடையில் எதிர்கால சமாதான முயற்சிகள் தொடர்பில் எவ்விதமான முன்னேற்றகரமான சமிக்ஞைகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படவில்லை. இரு தரப்பும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையற்றவர்களாக வெவ்வேறு நிலைகளில் இருக்கும் போது அவர்களை பார்வையாளர்களாக வைத்துக் கொண்டு கண்காணிப்பாளர்களைப் பற்றியும், அவர்களின் பணி பற்றியும் பேசுவது அர்த்தமற்றதாகவே இருக்கும்.

யுத்த நிறுத்தத்தை மதித்து நடப்போம் என்ற உத்தரவாதத்தைத் தர முடியாத புலிகள் மீதும், தமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்புக் குறித்த அச்சங்களை இல்லாது செய்யக் கூடிய உத்தரவாதத்தைத் தரமுடியாத அரசு மீதும் அழுத்தத்தை பிரயோகிக்க முடியாத சர்வதேசம், யுத்த நிறுத்த மீறல்களையும், படுகொலைகளையும், ஏனைய வன்முறைகளையும் கண்காணிக்க குழுவை பணியிலமர்த்தி வைத்திருப்பதில் என்ன பிரயோசனம் இருக்க முடியும். இதேவேளை ஒஸ்லோவில் நடக்கும் இம்மாநாடு குறித்து யாரும் அதீத எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்க வேண்டாமென நோர்வே தெரிவித்திருப்பதானது. நோர்வேயின் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான நம்பிக்கையீனத்தையும் இயலாத்தனத்தையுமே வெளிக்காட்டியிருக்கிறது. சர்வதேச நாடுகள் புலிகளைத் தடைசெய்திருப்பதால், புலிகள் அத்தடைகளை நீக்கச் செய்வதற்கு ஏதுவான வகையில் செயல்பட வேண்டுமென கூறுவதைவிடுத்து இனி யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று புலிகளை யுத்தத்தை நோக்கித் தள்ளிவிடுகின்றன.

நாட்டில் யுத்த நிறுத்தம் செயலிழந்து யுத்தமொன்று நடந்து கொண்டிருக்கையில் கண்காணிப்பாளர்களின் பணி எத்தகையதாக இருக்கமுடியும்? ஆகவே இது நோர்வே நடத்தும் நாடகமேயன்றி வேறொன்றுமில்லை. அரசாங்கம் சர்வசே அழுத்தத்துக்குட்பட்டு அரசியல் தீர்வு சிந்திக்கத் தலைப்பட்டுள்ள இந்தவேளையில் எதிர்க் கட்சியின் ஒத்துழையாமையும், தோழமைக் கட்சிகளின் எதிர்ப்பும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும். காலங்காலமாகவே ஆளும் அரசு இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு முடிவுக்கு வர முயற்சிப்பதும் அதை எதிர்க்கட்சியும், ஏனைய கட்சிகளும் எதிர்ப்பதுமே வழக்கமாகிவிட்டது. இத்துரதிர்ஷ்டமான நிலையைப் புலிகளும் தொடர்ந்து தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதாவது தமிழ் மக்களுக்குத் தென் இலங்கை சிங்கள அரசுகள் எப்போதுமே தீர்வொன்றைத் தரப்போவதில்லை. ஆகவே நாம் போராடித்தான் தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறி யுத்தம் ஒன்றைப் புரிவதும் தொடர்கிறது. எனினும் இதுகாலவரை புலிகள் நடத்தி வந்தபோதும் அவர்களால் அரசியல் தீர்வொன்றைக் காணமுடியவில்லை. ஆகவே யுத்தத்தின் மூலம் தீர்வென்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது நிருபனமாகிறது.

ஆகவே புலிகளுக்கு ஏட்டிக்குப் போட்டியாக இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை கையிலெடுத்து மேலும் மேலும் சிக்கலாக்கி விடாமல் தென் இலங்கை அரசியல் சக்திகள் தமக்கிடையேயான பேதங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு இனப்பிரச்சினையின் தீர்வுக்காக பாடுபட வேண்டும். அதுவே இன்னொரு பாரிய அழிவை தடுத்து நிறுத்த உதவும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அதிகரிக்கும் படுகொலைகளும் ஏற்படப்போகும் ஆபத்துகளும்

நரன்

**1983ஆம்** ஆண்டு ஆடி மாதம் தமிழர்களுக்கெதிராக அன்றைய அரசாங்கத்தினதும் ஆயுதப் படைகளினதும் அனுசரணையோடு கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர வன்செயல்கள், சுமார் 350 தமிழர்களைப் பலியெடுத்ததாக அன்றைய அரசின், உத்தியோகபூர்வ அறிக்கை குறிப்பிட்டது. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் பாதுகாப்பும் தஞ்சமும் தேடி இடம்பெயர்ந்தார்கள். இந்த மக்களுக்காக 25 அகதி முகாம்கள் திறக்கப்பட்டனவென்றும் அன்று அரசாங்கம் கூறியது. ஆனால் கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் தொகை மிக அதிகமாக இருக்குமென்று தமிழர் தரப்புகள் தெரிவித்தன. வீதிகளில் அடித்தும் குத்தியும் கொல்லப்பட்டவர்கள், உயிரோடு பெற்றோல் ஊற்றிக் கொளுத்திக் கொல்லப்பட்டவர்கள், வீடுகளுக்குள் வைத்து அடித்துக் கொல்லப்பட்டவர்கள், எரியூட்டப்பட்டவர்களென்று இந்த இனவெறிச் சங்காரத்தில் பலியான தமிழர்களின் மரணங்கள் சர்வதேச சமூகத்தின் இதயத்தை உலுப்பியது.

இனவெறியர்களால் உயிர்ப் பலியெடுக்கப்பட்ட இந்தத் தமிழர்கள் வடக்கு - கிழக்கு இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு உரமாகி, உந்து சக்தியானார்கள். ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசின் இன ஒடுக்குமுறையை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியதோடு கண்டன அறிக்கைகளையும் வெளியிட்டது. ஐரோப்பிய நாடுகள், தஞ்சம் தேடிச் சென்ற இலங்கைத் தமிழர்களுக்கு தமது வாசல் கதவுகளைத் திறந்து விட்டன. அண்டை நாடான இந்தியா, ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு தஞ்சமளித்துப் பராமரித்தது. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்குச் சர்வதேச அந்தஸ்துக் கிட்டியது. இலங்கை வாழ் தமிழ் மக்களும் தமிழக சகோதரர்களும் ஏகோபித்த ஆதரவும் வழங்கினார்கள். இலங்கையில் இடம்பெற்ற ஓர் இனப் படுகொலையின் பின்விளைவு இது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் அவ்வப்போது தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த இன ஒடுக்கு முறையின் உச்சக் கட்டமாக 1983ஆம் ஆண்டின் இன சங்காரம் உச்சம் பெற்றதையடுத்தே ஆயுதங்களோடு தமிழ் இளைஞர்கள் அரசியலரங்குக்கு வந்தார்கள். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம், வேலைவாய்ப்பில் பாரபட்சம், கல்வியில் தரப்படுத்தல் போன்ற படிப்படியான சம்பவங்களே பிரச்சினைகளை ஊதிப் பெருக்க வைத்தன. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அரச வேலை வாய்ப்புகளில் கிட்டத்தட்ட 60 சதவீதத்திற்கு மேல் இடம் பெற்றிருந்த தமிழர்கள், சிங்களம் மட்டும் சட்டத்தின் பின்னர் படிப்படியாக குறைக்கப் பட்டார்கள். இவற்றின் எதிரொலியாகத்தான் ஐக்கிய நாடுகள் சபையில் கூட தமிழீழக் கோஷம் எழுப்பப்பட்டது. இங்கிலாந்தில் கல்வி கற்ற கிருஷ்ணா வைகுந்தவாசன் என்ற பாரிஸ்டர் 1978ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் அரங்கிலேறி தமிழீழம் வாழ்கவென்று கோஷமிட்டார். அமெரிக்காவின் மஸாசூசெட்ஸ் மாநிலம் தமிழீழத்திற்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவை கடந்த காலச் சம்பவங்கள்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயன்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகளின் மனிதக் குண்டு, தமிழ் நாட்டில் வைத்துக் கொன்றதையடுத்து தமிழர் போராட்ட வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கிச் சுழல ஆரம்பித்தது. 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூர் என்ற இடத்தில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

இந்த 15 வருட காலப்பகுதிக்குள் தமிழ் மக்களின் போராட்டம் தலைகீழாக மாறியிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்த சர்வதேச சமூகம், புலிகள் இயக்கத்தின் மீது கண்டனக் கணைகளை வீசத் தொடங்கியிவிட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகள் உட்பட மொத்தம் 31 நாடுகள் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்திருக்கின்றன. அதாவது, உலகிலுள்ள நாடுகளில் ஆறிலொரு தேசங்கள் தடை விதித்திருக்கின்றன. புலிகள் நடத்துவது விடுதலைப் போராட்டமல்ல, பயங்கரவாத யுத்தம் என்ற முடிவுக்கு அவை வந்திருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச, ரஞ்சன் விஜயரத்ன, காமினி திஸாநாயக்கா உட்பட கணிசமான சிங்களத் தேசியத் தலைமையை புலிகள் அழித்தொழித்தார்கள். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் உட்பட தமிழ் தலைவர்களிலிருந்து லக்ஷ்மன் கதிர்காமர் வரை கொன்றொழித்தார்கள். தனிநபர் பயங்கரவாதம் தமிழர்களின் போராட்டப் போக்கையே மாற்றியமைத்திருக்கிறது.

சூடானைப் போல், சோமாலியாவைப்போல், ஈராக்கைப்போல் படுபயங்கரமான, மிலேச்சத்தனமான ஆயுதக்கலாசாரமொன்று இலங்கையின் வடக்குக் கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. மனிதர்களின் தலைகளைக் கொய்து விட்டு முண்டங்களை அநாதரவாக வீசுமளவுக்கு கொலைக் கலாசாரம் வளர்ந்திருக்கிறது. அரசாங்கங்கள் அரசியல் தீர்வுக்கு வரமுனையும் போது, புலிகள் ஆயுதத் தீர்விலேயே நாட்டங் கொண்டிருக்கிறார்கள். குற்றங் குறைகளிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றினையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டது. இதனைப் பயன்படுத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பத்தைப் புலிகள் மீண்டும் தவற விட்டு விட்டார்கள். யுத்த நிறுத்த காலத்திலேயே மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை சுட்டுக் கொன்று வந்த புலிகள் கடந்த டிசம்பர் பிற்பகுதியில் படைகள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

புலிகள், மீதோ அப்பாவித் தமிழ் மக்கள் மீதோ படையினர் ஆரம்பத்தில் தாக்குதல்களை ஆரம்பிக்கவில்லை என்பதே இங்கு முதலில் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். தொடர்ச்சியாகப் படைகள் மீது கிளைமோர் குண்டுத் தாக்குதல்களை நடத்திக் கொண்டே படையினரை பதிலடி கொடுக்க வேண்டாமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஒரு தரப்பு யுத்தத்தை ஆரம்பித்தால், மறுதரப்புத் துப்பாக்கிகள் மௌனித்துக் கிடக்குமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. மாற்றுக் கருத்துக்கொண்ட தமிழ் இளைஞர்களை வீடுகளிலிருந்து கடத்திச் சென்று அவர்களின் கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் கட்டிப் போட்டு விட்டு, நெற்றிப் பொட்டுகளில் வேட்டுகள் தீர்த்த குரூர கலாசாரத்தின் பிதாமகர்கள் புலிகள் தான். இதற்காக படைத்தரப்பினரை சுத்தமான சூசையப்பர்கள் என்றழைக்க முடியாது.

திருகோணமலை கடற்கரையில் ஐந்து தமிழ் மாணவர்கள் குரூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த மாணவர்கள் கொண்டு வந்த குண்டுகள் வெடித்ததாலேயே இவர்கள் கொல்லப் பட்டனரென்று முதலில் கூறப்பட்டது. பின்னர் படையினரைத் தாக்க முனைந்தபோது பதில் தாக்குதலில் இவர்கள் இறந்தார்கள் என்று கூறப்பட்டது.

ஆனால், அருகிலிருந்து பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி, இவர்கள் மிக அருகிலிருந்து தலைகளில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று அறிக்கையில் தெரிவித்தார். இது தொடர்பாக இரு பொலிஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணை விபரங்களோ, முடிவுகளோ இதுவரை வெளிவர வில்லை.

புத்தூர் வாதரவத்தையில் ஏழு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். நெல்லியடியில் இரு முச்சக்கர வண்டிகளில் சென்று கொண்டிருந்த எட்டுத் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மந்துவில் அம்மன் கோவிலில் தங்கியிருந்த எட்டுத் தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள் என்று கூறப் பட்டது. அல்லைப்பிட்டியில் ஒரே வீட்டில் வைத்து ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். வெலிக்கந்தையில் 12 சிங்கள மக்கள் வரிசையாக நிறுத்திச் சுட்டுக்கொள்ளப்பட்டனர். இவை தவிர கிழக்கில் கருணா அணிக்கும் பிரபா அணிக்கும் இடையிலான மோதலில் அண்மைய மாதங்களில் மட்டும் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டுள்ளனர். இக் கொலைகள் தொடர்பாக பரஸ்பரம் குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாகச் சொன்னால் இந்த மோதல்களில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே. இவை தவிர அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களையும் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இந்தப் படுகொலைகள் மீண்டும் சர்வதேச சமூகத்தை உலுக்கியிருக்கிறது. இப்போது அவை புலிகள் இயக்கத்தின் மீது தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றன. வன்செயல்களைக் கைவிட வேண்டுமென்று புலிகள் இயக்கத்தை வலியுறுத்தியிருப்பதோடு, இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வொன்றினை முன்வைக்குமாறும் அரசாங்கத்தையும் கோரி இருக்கின்றன.

அரசு, அரசியல் தீர்வு என்கிறது. புலிகள் யுத்தப் பேரினை முழக்கம் செய்கிறார்கள். அரசு தனது ஒற்றையாட்சித் தீர்வு முயற்சியிலிருந்து சமஷ்டிப் பொறிமுறையொன்றினைக் காண முன்வருவதன் மூலமே தமிழ் மக்களின் ஆதரவை வென்றெடுக்க முடியும். புலிகளின் சொல்லும் செயலும் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லையென்பதையே எடுத்துக் காட்டுகிறது.

"எனது வாழ்நாளில் தமிழீழத்தைக் காண்பதே எனது இலட்சியமாகும். இல்லையேல் அடுத்த சந்ததியாவது அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று தமிழீழத்தைக் காண வேண்டுமென்பதே எனது இலட்சியமாகும்" என்று பிரபாகரன் கூறியதாக அனிதா பிரதாப் என்ற இந்தியப் பத்திரிகையாளர் 'இரத்தத் தீவு' என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ராஜீவ் காந்தியைக் கொன்று, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மிதித்துப் பின்னரும் தமிழீழமென்று பேசுவது வெறும் சுடலை ஞானமாகும். அடுத்த தமிழ் சந்ததியையே அழித்தொழிக்கும் நடவடிக்கையாக இது அமையும். புலிகளின் படுகொலைப் போக்கு தொடருமானால் பாதிக்கப்படப்போவது தமிழ் மக்கள்தான். சர்வதேசத்தின் கிடுக்குப்பிடி இறுகுமானால் அது புலிகளை 'சாவீரர்கள் துயிலும் இல்லத்திற்கே' கூட்டிச் செல்லும். ■

## ஊரிலிருந்து....



வாக்குப் போடுங்கோவெண்டு வாய்கிழியக் கத்திக் கொண்டு திரிஞ்சவையையும் காணயில்லை வாக்குகளை வாங்கிக் கொண்டு எம்.பி யாகிப் பாராளுமன்றத்துக்குப் போனவையையும் காணயில்லை. போன எலக்‌ஷனக்கு ஆக்களைக் கண்டது. கொழும்புக்குப் போனவை அங்கேயே குடித்தனமாயிட்டினம். ஊரில படுகொலையும் பதற்றமுமாமே எண்டு செய்திகளைக்கேட்டுப் போட்டு அறிக்கை விடுறவை எங்களின்ர பிரதிநிதிகள் இல்லையுங்கோ. தனக்கு ஆபத்து இருக்குதெண்டு தெரிஞ்சும் தன்ர கடமையை சரியாச் செய்ய வேணுமெண்டதுக்காக இத்தனை நெருக்கடிகளுக்குள்ளையும் யாழ்ப்பாணத்துக்கு வந்து மக்களைச் சந்திச்சு பிரச்சனைகளை தீத்து வைக்கிற ஒரே மனுசன் எங்கட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தானுங்கோ. உதை இப்ப தெரிஞ்சு கொண்ட தாங்கள் எட்டுப் பேரிண்ர விஷயத்தில தவறு செய்து போட்டம் எண்டு சொல்லுதுகள். அடுத்த முறையாவது உந்தத் தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கோவன்

## வரலாற்றுடன் சங்கமித்த இரத்த ஆறுகள்!

**இலங்கையின் வரலாற்றில் இரத்தத்தாலும் கண்ணீராலும் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் அனந்தம். இனக் கலவரங்கள், மதக் கலவரங்கள் ஆகிய இத்தியாதி அக்கிரமங்கள் எத்தனையோ அரங்கேறியிருக்கின்றன. கடந்த நூற்றாண்டு பதிவு செய்து கொண்ட முதலாவது பாரிய சம்பவம், பௌத்த இஸ்லாமிய சமயக் கலவரமாக வெடித்தது. சிங்கள - முஸ்லிம் கலவரமாக வர்ணிக்கப்படும் இந்த மோதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. கேவலம், ஒரு சமயம் சார்ந்தவர்களின் வணக்க ஸ்தலங்களுக்கு முன்னால் மற்றச் சமயத்தைச் சார்ந்தவர்களின் ஊர்வலங்கள் சென்றதே பிரச்சினைகளைப் பூதாகரமாக வெடிக்க வைத்தது. ஏற்கனவே குமுறிக் கொண்டிருந்த மத வைராக்கியம், இங்கிலாந்தில் பிரிவிக் கவுன்சில் உட்பட நீதிமன்றப் படிகளிலும் ஏறிக்கொண்டிருந்த வேளையில்தான் 1915ஆம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி கண்டியில் சென்ற மத ஊர்வலமொன்று, மதம் கொண்டவர்களின் கலவரத்துக்கு வித்திட்டது. கண்டி, கம்பளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கொழும்பு போன்ற பகுதிகளுக்கும் மதக் கலவரம் பரவி, மனித உயிர்களைப் பலியெடுத்தது. ஆட்சியிலிருந்த பிரிட்டிஷ் அரசு, இராணுவச் சட்டத்தை ஜூன் இரண்டாம் திகதி பிரகடனப்படுத்தி, பஞ்சாபித் துருப்புகளின் துணையோடு தன் பங்குக்கும் மனித வேட்டையாடியது. ஆகஸ்ட் 30ஆம் திகதிவரை இந்த இராணுவச் சட்டம் அமுலிலிருந்தது. ஒரு தரப்பால் மதவெறியனென வர்ணிக்கப்பட்ட எட்வர்ட் ஹென்றி பெட்ரீஸ், மறு தரப்பினரால் தியாகியாகவும் தேசிய வீரனாகவும் போற்றப்பட்டார். 1915ஆம் ஆண்டு பெட்ரீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார். சிங்கள மக்கள் சார்பாக இங்கிலாந்து சென்று வாதாடி, சிங்கள மக்களுக்குச் சார்பாக வெற்றியீட்டிக் கொழும்பு திரும்பிய சேர்.பொன் இராமநாதனை, சிங்கள மக்கள் வண்டியிலேற்றி இழுத்துச் சென்று கௌரவித்தனரென்று வரலாறு கூறுகிறது. பிரிட்டிஷ் துரைகளிடம் சேர் பட்டம் பெற்றுக் கொண்ட பொன்.இராமநாதன், தான் நிர்மாணித்த சைவ ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களென்று கூறி ஒதுக்கப்பட்ட மக்களுக்கு இடமளிக்க மறுத்தாரென்பதும் கவனத்துக்குரிய விடயம். ஆண்டவன் தரிசனத்துக்காக இரத்தம் சிந்தி ஆலயப் பிரவேசப் போராட்டம் நடத்திய அண்மைக் கால வரலாறுகளும் வடக்கே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருக்கின்றன. சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம் போன்ற இன்னோரன்ன ஒடுக்குமுறைகளும் கண்ணீர் சிந்தும் கறுப்பான சம்பவங்களுக்கு வித்திட்டிருக்கின்றன. சிங்களம் மட்டும் சட்டம் 24 மணித்தியாலத்துக்குள் கொண்டுவரப்பட்ட 1956ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டின் ஜூலை இன சங்காரம் வரை, நாட்டின் பல பகுதிகளில் தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட ஆறு பாரிய நிகழ்வுகளும் அரங்கேறியிருக்கின்றன. தமிழ் மக்களின் விடுதலையை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட புலிகளும் தமது பங்குக்கு, அப்பாவிகளின் உயிர்களை இரத்தக் காணிக்கை செலுத்தியிருக்கிறார்கள். கொலை செய்வதில் புலிகள் பாரபட்சம் பார்ப்பதில்லை. தமிழர், சிங்களவர், முஸ்லிம்களென மூவினத்தைச் சேர்ந்த முப்பதாயிரம் பேர்களையாவது ஆகக் குறைந்தது பலியெடுத்திருக்கிறார்கள்.**

## நாடுகளின் சம்மேளனம் (CONFEDERATION OF STATES)

**நாடுகளின்** சம்மேளனம் (Confederation of States ) என்பதைத் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது. அது தனிநாட்டுக் கோரிக்கையல்ல. சீனப் பெருநிலப்பரப்பின் பிரிக்க முடியாத ஒரு பகுதியே ஹொங்கொங். பிரிட்டிஷ் ஆட்சியாளரிடம் நூறு வருட குத்தகைக்கு யுத்தப் பிரபுக்களால் கையளிக்கப்பட்ட ஹொங்கொங், 1996ஆம் ஆண்டு மக்கள் சீனத்திடம் கையளிக்கப்பட்டது. மக்கள் சீனத்தின் ஆளுநர் ஆட்சியே அங்கு நிலவுகின்றது. சமூக, அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்காக சீனாவின் ஆளுநரினால் ஹொங்கொங் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

1950களின் முற்கூற்றில் ஆறு ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பே இன்று 25 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த ஒன்றியம், யூரோ என்ற பொதுவான நாணயத்தை புழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறது. பொதுவான வங்கி, பொதுவான கடற்படை , பொதுவான அரசியலமைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதாவது நாடுகளை பொதுவான நோக்கில் ஐக்கியப்படுத்தும் முயற்சியே இது. பிரிக்கும் முயற்சியல்ல.

# கிழக்கு முஸ்லிம்களை அச்சுறுத்தும் தாக்குதல் முஸ்தீபுகள்

அலசுவது
**- மதியூகி -**

பேரினவாதத்துக்கு எதிரான போராட்டம் ஒருபுறமிருக்க, சிறுபான்மையினருக்கிடையில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்கள், கவலைகள் என்பவற்றை நிவர்த்திப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக இல்லை. மாறாக சிறுபான்மை இனங்களுக்கிடையில் மேலும் மேலும் மோதல்களை ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது. மொழியால் ஒன்றுபட்டிருந்த போதும் தமிழ் - முஸ்லிம் இனங்கள் தனித்தனியே ஒரு தேசிய இனங்கள் என்பதை இன்று சர்வதேச சமூகம் புரிந்துகொண்ட அளவுக்கு நாம் புரிந்து கொள்ளவில்லையோ என்ற குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன.

முஸ்லிம் மக்களின் தலைமைகள் ஒற்றுமையாக இல்லை. ஆகையால் தான் அந்த மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது என்று தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஊடகங்களில் தெரிவிக்கும் கருத்துக்கள் நொண்டிச் சாட்டானவை. அந்த மக்களின் தலைவர்கள் ஒற்றுமையாய் இல்லை என்று கூறுவதற்கு கூட்டமைப்புக்கோ, புலிகளுக்கோ அருகதையில்லை. முதலில் அவர்களுக்குள் ஒற்றுமை வரட்டும். தமிழர்களே தமிழர்களைப் படுகொலை செய்கின்ற பாதகச் செயல் முதலில் முடிவுக்கு வரட்டும் என்று கூறும் முஸ்லிம் தலைமைகளின் கருத்திலும் உண்மையில்லாமல் இல்லை.


தேசிய இனங்களின் தலைமைகள் என்று பார்க்கும் போது, தென்னிலங்கையில் இருக்கக்கூடிய சிங்களத் தலைமைகள் என்றாலும் சரி, தமிழ் மக்களின் தலைமைகள் என்றாலும் சரி, முஸ்லிம் மக்களின் தலைமைகள் என்றாலும் சரி, அவரவர் வகுத்துக் கொண்ட பாதையில் பயணிக்கும் போது, பாதைகள் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால் இலக்கு தாம் சார்ந்த மக்களுக்குரியதாக இருக்கும்.

அதற்காக சுதந்திரக் கட்சியும், அதன் தோழமைக் கட்சிகளும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தோழமைக் கட்சிகளையும் துரோகிகள், ஒட்டுண்ணிகள் என்று படுகொலை செய்யவில்லை. அவர்கள் சுதந்திரமாகக் கருத்துச் சொல்லத் தடையாக இருக்கவில்லை. துவக்குகளைக் கொண்டு மிரட்டிப் பயமுறுத்தவோ, பணிய வைக்கவோ இல்லை. அதுபோல் முஸ்லிம் கட்சிகள் தாம் வகுத்துக் கொண்ட பாதையில் பயணித்தபோதும் தம்மிலிருந்து பிரிந்தவர்களை நோக்கியோ, எதிர்த்தரப்பை நோக்கியோ படுகொலையையோ, வன்முறையையோ பிரயோகிக்கவில்லை. அவரவர் ஏற்றுக் கொண்ட பாத்திரத்திற்கு அமைவாகப் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகள், தலைமைக்குள் மட்டும்தான், நான் ஒரே தலைவன், மற்றவன் துரோகி என்றெல்லாம் சர்வாதிகாரப் போக்குக் காணப்படுகிறது. இதற்குக் துணையாக தாளம் போட்டுக் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் எவருக்கும் முஸ்லிம்கள் பற்றியோ, முஸ்லிம் தலைமைகள் பற்றியோ விமர்சிக்க துளியளவு அருகதையும் இல்லை என்ற முஸ்லிம்களின் ஆதங்கத்தையும் நியாயத்தையும், ஜனநாயகத்தையும், அரசியல் பன்மைத்துவத்தையும் மதிக்கும் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும்.

**வடக்கிலிருந்து முஸ்லிம்கள் ஒரே இரவோடு விரட்டப்பட்டதைப் போல், கிழக்கில் வாழும் முஸ்லிம்களை விரட்ட முடியாது. அவர்கள் தமிழ் மக்களோடு நெருங்கி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தவிரவும், தமக்கான அரசியல் பலத்தைக் கொண்டிருப்பவர்கள்.**

ஆக, தலைமைகளை விமர்சித்துக்கொண்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநியாயங்களையும், அராஜகங்களையும் கண்டு கொள்ளாமலிருக்கவோ நியாயப்படுத்தவோ முடியாது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் ஒரே இரவோடு விரட்டப்பட்டதைப் போல், கிழக்கில் வாழும் முஸ்லிம்களை விரட்ட முடியாது. அவர்கள் தமிழ் மக்களோடு நெருங்கி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தவிரவும், தமக்கான அரசியல் பலத்தைக் கொண்டிருப்பார்கள். அதையும் விட நிலப்பரப்பு இருப்பிடம் தொடர்பான விடயங்களிலும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பவர்கள். வடக்கு முஸ்லிம்களுக்கு நடந்த வரலாற்றுத் துரோகத்தை ஒரு பாடமாகவும், வடுவாகவும் கொண்டிருப்பவர்கள்.

இந்த உண்மைகளை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் ஒட்டுமொத்தமாக விரட்ட முடியாததால் இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கும் விதமாக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதும், படுகொலை செய்வதும், சொத்துக்களை சூறையாடுவதும், வரி, கப்பம் கேட்டு அச்சுறுத்துவதும் முஸ்லிம் மக்கள் மத்தியில் புலிகளின் போக்கு குறித்த அச்சத்தையும், நம்பிக்கையீனத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. தமிழர்களின் தேசிய இன விடுதலைக்கான போர் என்றால்,



அது இன்னொரு சிறுபான்மை தேசிய இனத்தை அடக்குவதாகவோ, அதனிடம் அடித்துப் பறிப்பதாகவோ இருக்கக் கூடாது. காணிகளைப் பறிமுதல் செய்வது, வரி கேட்பது என்பன போன்றவை இதற்குள் அடங்கும், நியாயமான அதாவது பேரினத்துக்கு எதிரான சிறுபான்மையினத்தின் போராட்டம் என்றால், கிளர்ந்தெழும் சிறுபான்மையினமானது ஏனைய சிறுபான்மையினங்களையும் அரவணைத்துச் செல்வதாகவும், அவர்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொண்டதாகவும் தன் போராட்டத்தை நடத்தினால் அது விரைவான வெற்றிக்கு வழிவகுக்கும். அப்படியானதொரு சூழலில் வரி, கப்பம் என்பவற்றைக் கூட கட்டாயப்படுத்தல் இல்லாமல் எல்லா மக்களும் விரும்பியே வழங்குகின்ற நிலை உருவாகும்.

இலங்கையில் நடப்பது இதற்கு முற்றிலும் எதிர்மாறனதாகும். தவிரவும், முஸ்லிம் மக்களை அவர்களின் பூர்வீக மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவதும், படுகொலை செய்வதும், அச்சுறுத்துவதுமே நடந்துவருகிறது. முஸ்லிம்களுக்குள் எதிர்ப்புக் காட்டக் கூடிய ஒரு சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக ஒட்டுமொத்த முஸ்லிம் இனத்தையும், 'ஜிகாத்' என்ற பெயரைச்சூட்டி, அவர்களை ஒரு வன்முறையாளர்களாகக் காட்டும் முயற்சியும் இனங்களுக்கிடையேயான பிளவுக்கே வழிவகுக்கும்.

முஸ்லிம்கள் தமது விடுதலை, தனித்த வாழிடம் என்பதற்காக அவர்களுக்குப் பிரச்சினை இல்லை என்று கருத முடியாது. இந்த நாட்டிலுள்ள இரு தேசிய இனங்கள் தமக்கான தீர்வுகளுக்கு வருகின்றபோது இன்னொரு தேசிய இனமாகவுள்ள முஸ்லிம்களுக்கும் நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். அதை எவரும் உதாசீனம் செய்ய முடியாது.

ஏகப்பிரதிநிதித்துவத்துக்குள் தமிழர்களை அடக்கிவிட முடியும் என்று நினைப்பதே மிகப்பெரும் ஜனநாயக மறுப்பொன்றாக இருக்கும்போது, அதற்குள் முஸ்லிம்களும் அடங்க வேண்டுமென்றும் எதிர்பார்ப்பதும், அதை நோக்கிக் காய் நகர்த்துவதும் மிகப் பெரும் முட்டாள்தனமாகும். ஆகவே படுகொலைகள், வரி, கப்ப அறவீடுகள், காணிச் சுவீகரிப்புகள், அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் மூலமான அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள் என்பன ஒரு தேசிய இனத்திற்கு எதிரான பயங்கரவாதச் செயலாகும். அண்மையில் மூதூரில் நடந்து வரும் சம்பவங்கள் முஸ்லிம் மக்களை நோக்கிய நேரடித் தாக்குதல்களாகும். "தமிழீழ தாயக மீட்புப் படை" என்ற பெயரில் விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரமானது கிழக்கு முஸ்லிம்களின் மனதைப் புண்டுபடுத்தவதாக அமைந்துள்ளது. இதற்கான முழுப் பொறுப்பையும் புலிகளே ஏற்க வேண்டும். அடக்குமுறையிலிருந்து விடுபடத் துடிக்கும் தமிழினம் இன்னொரு இனத்தை அடக்குவது முறையாகாது என்பதை செயல்வடிவப்படுத்தி முஸ்லிம்களை அரவணைக்க ஒவ்வொரு தமிழ் மகனும் உறுதி எடுக்க வேண்டும். ◎

---

## அதிரடி அய்யாத்துரை



**இனப்** பிரச்சினைக்குத் தீர்வு ஒற்றையாட்சிக்குள்ள ஒரு நாளும் காணமுடியாதெண்டது காலங்காலமாக அறிஞ்ச விசயமாக இருக்கேக்க, உந்த சிகப்புச் சட்டைக்காரர் ஒற்றையாட்சிக்குள்ள தான் தீர்வுகாண வேணும் எண்டு ஒற்றைப் பிடியா இருக்கினம். சரி, ஒற்றையாட்சி எண்டுறவை தாங்கள் முன்வைக்கக் கூடிய தீர்வு என்ன எண்டதையும் முன் மொழியினமில்லை. சர்வகட்சிகளும் கூடி ஒரு அரசியல் தீர்வுக்கு வழிகாண வேணுமெண்டு ஒரு முடிவுக்கு வரேக்க - அதுகூட நடக்குமோ, இல்லையோ எண்டு தெரியாமல் இருக்கேக்க - ஆடு அறுக்க முதல் எதையோ அறுத்த கதையாக உந்த சிவப்புச் சட்டைக்காரர் தாம் தூம் எண்டு குதிக்கினம். உந்த மாதிரி எதிர்ப்பும், தடையும் தென் இலங்கை பொலிடிக்ஸுக்குள்ள காலம் காலத்துக்கு தொடருற படியாத்தான் உந்தப் பிரச்சினை இழுபட்டுக் கொண்டு போகுது. பிறகு உதையே பிடிச்சுக் கொண்டு கொஞ்சப் பேர் வயிறு கழுவிக் கொண்டிருக்கினம். இனியாகிலும் உதுக்கு ஒரு முடிவு காண வேணும் எண்டு யாரும் ஒண்டும் செய்ய முடியாமல் கிடக்கு. உந்த சப்ஜெக்ட்டை எடுத்தாலே சண்டிக்கட்டோடை மல்லுக்கு நிக்கினம். சரி, ரெண்டெழுத்தாருக்கு குடுக்கக் கூடாதெண்டது சரியெண்டாலும், தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் குடுத்துத்தாத்தானே ஆக வேணும். உதை சிகப்புச் சட்டைக்காரர் புரிஞ்சு கொள்ளுவினமோ.

**கண்காணிப்புச்** செய்யிறவையின்ர எதிர் கால நடவடிக்கைகள் பற்றியும், அவையின்ர பாதுகாப்புப் பற்றியும் கதைக்க ஒஸ்லோவில கூட்டம் நடக்குதெல்லோ. அதில அதிகாரத் தரப்பும் ரெண்டெழுத் தாரும் பங்குகொண்டிருக்கினம்.

உந்தக் கட்டுநாயக்கா ஊடாக ஜெனிவாவுக்குப் போறதுக்கு தங்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்குதெண்டு மறுத்தவை, இப்ப மட்டும் எப்புடிப் போயிருக்கினம் எண்டது ஒரு பக்கமிருக்கட்டும். கண்காணிப்புக்காரரின்ர பாதுகாப்புப் பற்றி கதைக் கினமெல்லோ, அப்புடியெண்டால் அன்றாடம் சாகிற அப்பாவி சனத்தின்ர பாதுகாப்புப் பற்றி யார், எங்க கதைக்கப் போகினம்? வெள்ளைக்காரரின்ர அம்மா அம்மா தான்; மற்றவையின்ர அம்மா எண்டால் சும்மா எண்ட கதையாவெல்லோ கிடக்கு. பாவம் சனங்கள். அவை அவை தங்கட தங்கட பிரச்சினைகள் பற்றியும், பாதுகாப்புகள் பற்றியும் வாய் கிழியக் கத்தினம். சனத்தைப் பத்தி யாரும் அலட்டிக் கொள்ளினமில்லை. அப்பப்ப சும்மா சனத்தை இழுத்து தங்களுக்கு ஒரு கவரேஜ் பண்ணினம். சனம் வாங்கி வந்த சாபமாக்கும்.

**பத்துமினி** பத்தாத மினியையெல்லாம் கூத்தமைப்பு எம்.பி.யாக்கினதில யாழ்ப்பாணத்துச் சனம் என்ன பலனைக் கண்டுச்சினமோ தெரியாது. ஆனால் அவை பலனுக்கு மேல பலனை அனுபவிக்கினம்.

டூரிஸ்ட் வீஸாவில எலிசபெத் ராணியின்ர நாட்டுக்குப் போய் கணக்கு வழக்குகளின்ர விபரங்களை ரெண்டெழுத்தார் சொன்னமாதிரி உரியவையைச் சந்திச்சு கலக்ட் பண்ணிக் கொண்டு ஒருவேளைக்கு ஒரு இடம் எண்ட ஷெடுலில விருந்து சாப்பிட்டுக் கொண்டு திரியிறாவாம்.

உந்த பத்துமினியின்ர மிஸ்டர் சித்த பிரமை நாதனே ஊரை அடிச்சு உலையில போடுற மனிசனே! அவரை எப்பிடி நம்பிச்சினமெண்டு உங்க லொண்டனில தாங்கதான் பழங்காய்கள் எண்டு சொல்லிக் கொள்ளுறவை கேட்டாலும், தாய்க்குலம் எண்டதாலை யாரும் டவுட் பண்ணமாட்டினம் எண்டு தான் அவவை உந்த டூரில ரெண்டெழுத்தார் அனுப்பிச்சினமெண்டு தன்னிலை விளக்கமும் குடுக் கினமாம்.

சித்த பிரமை நாதனுக்கு தாய்க்குலத்தாலை அடிச்சிருக்குது சான்ஸ், அவர் என்ஜோய் பண்ணுறார். அவர் கொள்ளையடிச்சால் என்ன? கொடி பிடிச்சால் என்ன? நமக்கேண்டாப்பா ஊர் வம்பு...

**மண்ணை** விட்டு ஓடினாலும் பத்தி எழுத்தாளர் எண்ட விதத்தில எழுதின அவரின்ர கை சும்மா இருக்காமல் எதையாவது எழுதிக் கொண்டிருந்தது. பல நேரங்களில நாட்டில என்ன நடக்குது எண்டது தெரியாமலே கிடைக்கிற செய்தியை வச்சுக் கொண்டு ஊகத்தில அந்த செய்திக்கு கண்ணு, மூக்கு, காது எல்லாம் வச்சி பக்கம் பக்கமா எழுதிக் கொண்டு தன்னை ஒரு பத்தி எழுத்தாளராகக் காட்டிக் கொண்டிருந்த டி.பி.எஸ்.ஜெயமான ராஜாவை அண்மைக்காலத்தில காணமுடியல்லை.

ரூபாயா நாட்டிலயே குடுங்கோ இல்லாட்டில் டொலராக எக்கவுண்டில போடுங்கோ எண்டாரோ தெரியல்லை. ஆனால் யாரிட்டையோ கவ்விப் போட்டார் எண்டது மட்டும் கன்போமாத் தெரியுது. ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டால் கொஞ்ச நாளா, முள்ளந்தண்டு உடைஞ்சவர் போல பேனையை நேராப் பிடிச்சாலும் அவர் வரி வரியா எதிலையோ சாஞ்சு கொண்டுதான் எழுதிக் கொண்டிருக்கிறார். தான் கனடாவில எயா கண்டிசனுக்குள் இருக்கிறன் எண்டதுக்காக கேட்டதையெல்லாம் கண்டபடி எழுத ஏலாதெண்டதை புரிஞ்சு கொண்டு எழுதினார் எண்டால் பழைய ஜெயமான ராஜா திரும்பவும் வாசகர்களுக்குக் கிடைப்பார் எண்டு வாசிக்கிறவை சொல்லினமாமுங்கோவ்....

**தலைநகரில** இருக்கிற தங்கட நெருங்கின ஒட்டு உறவுகளை ஒண்டில் வெளிநாட்டுக்குப் போங்கோ; இல்லாட்டில் உங்க வன்னிக்கு உள்ளுக்க வாங்கோ எண்டினமாம் ரெண்டெழுத்தார்.

ஏனப்பு எங்களை அங்கையும் இங்கையும் அலக்கழிக்கிறியள். உங்கயிருந்து நிம்மதிக்காக வந்து இருக்கிறம். இங்கயிருந்தும் ஓடச் சொல்லுறியளே எண்டு பொறுப்பான ஒருவரின்ர தகப்பனார் கேட்டதுக்கு, முன்னம் எண்டால் நீங்கள் சொன்னது சரி. இப்ப எங்கட பெடியள் கிட்டத்தட்ட நானூறு பேர் தலைநகருக்கு அனுப்பப்பட்டிருக்கினம். நாளைக்கே சண்டை துவங்குச்சுதெண்டால் இதால நகரில தான் பல பேரின்ர தலை உருளப் போகுது எண்டதாலதான் உங்களை வரச் சொல்லுறன் எண்டாராம் பொறுப்பானவர்.

சிங்களவரோடை இருந்தாலும் இருப்பம். உங்களை மாதிரி கொலை வெறி சீக்குப் புடிச்சவங்களோடை இருக்கமாட்டம் எண்டிட்டுத் தானே தலைநகருக்கு வந்து சேர்ந்தம். இங்கையும் குண்டு வைக்கப் போறம், கொலை செய்யப் போறம் எண்டுறியளே எண்டு தலைநகரில இருக்கிற சனம் ரொம்பவும் சலிச்சுக் கொள்ளுதுகளாம். இளகின இரும்பைக் கண்டால், அவன் அதைத் தூக்கித் தூக்கி அடிப்பான் எண்டுவினமே! அது எங்கட சனத்துக்கும் பொருந்துமோ...

**தொட்டதுக்கெல்லாம்** துண்டுப் பிரசுரமெண்டது வடக்கு, கிழக்கில ஒரு ஸ்டைலாக மாறிப்போயிட்டு தெண்டு முன்னமும் ஒரு தடவை சொன்னனான். இப்ப மூதூரில முஸ்லிம் சனத்தை விரட்டுமாப் போலை ஒரு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டிருக்குது.

அதில நாலாவது போராட்டம் ஸ்டார்ட் ஆகிட்டுது எண்டும், முதலில் மூதூரை மீட்பதுதான் ஆரம்பம் எண்டும் குறிப்பிட்டு இருக்கினம். உது ரெண்டெழுத்தாரின்ர துண்டுப்பிரசுரமெண்டு ஊர் உலகத்துக்கே தெரிஞ்சு போச்சுது. ஆனால் அதை தாங்கள் விடயில்லை எண்டு எழிலானவர் தமிழோசையில மறுத்த விதமிருக்குப் பாருங்கோ. அதுதான் அவர் திருவாணமலைக்கு அவையின்ர பொலிரிக்ஸ் துறைப் பொறுப்பாளராக நீடிக்கிறதுக்குக் காரணம் எண்டினம். மூதூர் மக்கள் "பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும்" எண்டுவினம். உது என்னடாவெண்டால் பொருந்துதோ இல்லையோ சூப்பரா பொய் சொல்ல வேணுமெண்டதுதான் அவையின்ர மேலதிகத் தகைமையெண்டு ஆகிப்போயிட்டுது.

அப்புடிப் பாத்தால் நமக்கெல்லாம் பொலிரிக்ஸ் வேலை பொருத்தமில்லாத தொழிலுங்கோ...

# துளி!

**இப்படியொரு** தலைப்பை இந்த வாரம் நான் எழுதிக் கொடுத்ததுமே பலருக்கு புருவம் உயரத் தொடங்கியது. துளியைப் பற்றி என்ன எழுத முடியும் என்றுகூட எண்ணியிருக்கலாம்.

துளியைப் பற்றி நான் சிந்திக்கும்போது நீர் நிலைகள் எல்லாமே நினைவுக்கு வந்து விடுகிறது. பூமிப் பந்தில் 71 வீதமாக இருக்கும் கடல், துளிகள் சேர்ந்ததுதான் என்பதை எவ்வளவு இலகுவாக மறந்து விடுகிறோம், அதுமட்டுமா, மழையின் ஒரு துளி சிப்பிக்குள் விழுந்து முத்தாகிறது. உயிருள்ள ஒரு துளி விந்தில் மனிதன் ஜனனிக்கிறான். ஒரு துளி கண்ணீர் எல்லா மனப் பாரங்களையும் வடியச் செய்துவிடுகிறது. பூமிக்குப் புல்லரிக்குமளவுக்கு முதல் முத்தமிடுவது முதல் மழைத்துளிதான்.


துளி என்பது ஒரு அளவு. காதுக்கு மருந்து விடுவதாக இருந்தாலென்ன, கண்ணுக்கு மருந்து விடுவதாக இருந்தாலென்ன, மூக்குக்குள் மருந்து விடுவதாக இருந்தாலென்ன, துளிகளை எண்ணிக் கொண்டு விடுகிறோமே, எப்போதாவது துளியைப் பற்றி சிந்தித்திருப்போமா? இல்லையே!

ஆயுர்வேத வைத்திய நிலையங்களிலே அவசியமான அங்கங்களின் மேல் எண்ணெயை அல்லது தண்ணீரைத் துளியாக விழச் செய்வது ஒரு இணங்கப்பட்ட வைத்திய முறை. அதற்கு தியான நிலையும் இருக்கவேண்டும்.

துளியைப் பற்றிய ஒரு குளிர்ந்த அனுபவம் எனக்குள் என்றும் பசுமையாய் - பனி விழும் காலத்தில் விளையாட்டு மைதானங்களுக்கு எத்தனை பேர் போவீர்களோ தெரியாது. நான் அப்படியான




பொழுதுகளில் பார்க்கும் போதெல்லாம் மிகச் சொற்பமானவர்களே காணப்படுகிறார்கள். புல்களின் நுனியில் பனித் துளிகள்




தொங்கிக் கொண்டிருக்கும் அழகே தனியழகுதான். சூரியக் கதிர்கள் அந்தப் பனித் துளிகளைத் துளைத்துக் கொண்டு ஒளிவீசும் போது, பனித் துளி காட்டும் வர்ண ஜாலம்... அதை ரசிக்க ஆயிரம் கண்கள் கூடப்போதாது போகும். வெயில் கடுமையாக கடுமையாகப் பனித் துளிகள் ஆவியாகிப் போவதும் புல்லின் நுனியிலிருந்து வேருக்கு இறங்குவதும் இயந்திரங்கள் இல்லாத விஞ்ஞான மாற்றங்கள். பனித் துளிகள் தொங்கிக் கொண்டிருக்கும் புல்தரையில் காலடி வைத்து நடந்தால் கால்படும் இடத்தில் மட்டும் பனித்துளி உதிர்ந்து புல்வெளி பாதத்தின் அளவுக்கு பச்சையாக வண்ணம் காட்டும். சப்பாத்துகளோடு நடப்பவர்களுக்கு அதுவெறும் ஈரம். வெறும் கால்களைப் பதித்து பனித் துளிகள் கால்களை சன்னம் சன்னமாக நனைக்க நனைக்க, அனுபவித்து நடக்கும் போது ஒருவருக்கு எத்தனை வயசாக இருந்தாலும் ஏழு வயசுக்கு வயதை இறக்கிப்போடும் மகிமை பனித் துளிகளுக்கு உருவாகும்.

பேனையிலிருந்து வழுக்கி ஒரு துளி 'மை' சட்டைப் பையில் ஒட்டிக் கொண்டால் கலர் சட்டைகளுக்கே கசக்கும்; வெள்ளைச் சட்டைகளுக்கு கேட்கவே வேண்டாம். ஒரு பேனையைச் சுமந்து திரியும் எவரும் ஒரு துளி மையை சட்டைப் பையில் சுமந்து கொண்டு திரிவதில்லை.

மண்ணுக்குப் புல்லரிப்பது போல் மண்ணுக்கு கர்வமும் கௌரவமும் வருவது விவசாயியின் வியர்வைத் துளி மண்ணில் சிந்துகின்ற போதுதான்.

நெல் விளைச்சலைப் பற்றியோ, அதற்காக ஒரு விவசாயி - வெயிலில் குளித்து வியர்வை சிந்தி உடல் உழைப்பைக் கொண்டுவருவது பற்றியோ, சில பட்டணத்துக் காரர்களுக்கு எதுவும் தெரியாத கதைகளும் உண்டு. அவர்களுக்காக நாம் கவலைப் படுவோம். கண்ணீர்த் துளியின் பெறுமதி பற்றி இரண்டு விதமாகப் பார்க்கிறேன். அதிலும் சந்தோஷம் மேலிடலால் மகிழ்ச்சியும் திருப்தியும் பொங்கி, கண்கள் கலங்கி, கண்மடல்களிலிருந்து எட்டிப் பார்க்கும் கண்ணீர்த் துளிகளின் பெறுமதி அதிகமானது. அது ஆனந்தக் கண்ணீர்த்துளி. அதே போல் துக்க மேலிட்டால் துயரம் தொண்டையை அடைத்து கண்கள் கலங்கிப்போகும். அது வெறும் கண்ணீர்த் துளி. நாம் எப்போதுமே மகிழ்ச்சியை ஏற்றுக்கொண்டு துக்கங்களை ஏற்க மறுக்கிறோம். இன்பத்தையும் - துன்பத்தையும் சமாந்தரமாகப் பார்ப்பவர்கள் உலகத்து வாழ்க்கையில் சுகபோகிகள்; அவர்கள் அவதாரமெடுத்தவர்கள் அவர்கள் அழுவதில்லை.

வறுமையின் கழுத்து நெரிப்பில் கண்கலங்கும் குடும்பத் தலைவனுடையதோ, குடும்பத் தலைவியுடையதோ கண்ணீர்த்துளி பூமிமீது விழும்போது அது பாசத்தின் உருவாகத்தான் காய்ந்து போகிறது, கட்டணம் செலுத்தி தண்ணீர் உபயோகிக்கும் நகரத்துக் காரர்களிடம் கேட்டால் தெரியும், சரியாகப் பூட்டப்படாத குழாய்களிலிருந்து ஒவ்வொரு துளியாக விரயமாகும் தண்ணீர்பற்றிய கவலை அவர்களுக்கு இருக்கும். கற்பனை அதிகமிருக்கக்கூடிய ஒரு கலைஞனுக்கும் ஒவ்வொரு துளியும் நிலத்தில் பட்டு சிதறிப் போகும் அந்தக் காட்சியும் சப்தமும் ஒரு அற்புதமான படைப்பு. கலையோடு பார்ப்பவருக்கு ஒரு துளி - ஒரு சமுத்திரம். இல்லாதவருக்கு ஒரு துளி - வெறும் ஒழுக்குதான்.

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**





# தவறான செய்தி

**தினமுரசு** 25-31-05.2006. "உங்கள் பக்கம்" பகுதியில் வெளியிடப்பட்ட "புதுக்குடியிருப்பு ஆயுள்வேத மருந்தக ஊழியர்களின் பரிதவிப்பு" என்று தலைப்பில் வெளியான செய்தித் தொடர்பில் மேற்படி வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களாகிய நாம் கடுமையான அதிருப்தியடைந்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு மாவட்ட வைத்தியசாலை என்ற வகையில்; பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது வைத்தியசாலையை மாவட்டத்திலேயே முதல்தர வைத்தியசாலையாகக் கொண்டுவரும் உயர்ந்த நோக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பான்மையுடனும் கடமை புரியும் எம்மை, இழிவுபடுத்துவதாக இச் செய்தி அமைந்துள்ளது. எனவே இந்தச் செய்தி முற்றிலும் தவறு என்பதை வலியுறுத்துவதுடன், இச்செய்தியைத் தங்களுக்கு அனுப்பிவைத்த "மட்டக்களப்பு மக்கள்" எனப்படுபவர்கள் முடிந்தால் எங்களுடன் கைகோர்த்து இவ்வரிய பணியில் இணையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*-உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*
*-மட்/மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு.*





# மலையாள மாந்திரீக சக்தியின் வெற்றிகள்

இலங்கையில் மாந்திரீகத் துறையில் சுடர்விட்டு நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம் என்றால் அது எமது நிறுவனம் மட்டுமே! வாங்கும் பணத்திற்கு பற்றுச் சீட்டு வழங்குவது என்றால் அது நாம் மட்டுமே! காரணம் தெட்டத் தெளிவான திடமான மாந்திரீக சித்தமே!

இதையொட்டி தினமும் எல்லா தினசரி பத்திரிகைகளிலும் தொலை காட்சியிலும், வானொலியிலும் விளம்பரம் செய்வதென்றால் எமது சேவையே! என்பதற்கு எடுத்து காட்டாக எல்லா வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் எத்திசையில் வசித்தாலும் கடல் கடந்து செயல்படும் வண்ணம் அவரவர் முகவரியில் நாம் நேரடியாக மூன்றே நாளில் மாந்திரீக பொதிகளைக் கையளிப்பது என்பது எமது நிர்வாகத்தின் சிறப்புத் தன்மையே!

நான் வெளிநாட்டுக்குச் செல்லாமலேயே அனைத்து உலக மக்களுக்கும் தொலை பேசியில் என்னுடன் தொடர்புகொள்பவர்களுடன் அவரவர்க் குறைகளைக் கேட்டறிந்து ஏனோ, தானோ என்று இல்லாது தெட்டத் தெளிவான சேவை செய்வதாலேயே எமது நிறுவனம் நம்பிக்கை வாய்ந்த ஒரு வரையறுக்கப்பட்ட (Liability) கம்பனி நிறுவனமாக திகழ்கிறது. எத்தனை பேரிடம் பரிகாரம் செய்தாலும் கடைசியில் என்னிடம் வருவது என்பது நான் கண்ட உண்மையே! என்னிடம் வருவதற்கு உங்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவியின் தேவ சித்தமும் அவசியமே! நான் ஒரு வேலையைப் பாரம் எடுக்கும் போது, அவர்களின் ஜாதகத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பரிசீலனை செய்த பின்பே வேலைகளை ஆரம்பிப்பேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஒப்ப நீரிழிவு நோயில் இருந்து பூரணமாக விடுதலை பெற, ஆண்கள் - பெண்கள் இரு பாலாரும் ஆஸ்த்மா நோயிலிருந்து விடுபட, மூல ரோகம் தீர, இளம் நரை போக்க, கூந்தல் அடர்த்தியாக வளரச் செய்ய, விசேடமாக ஸ்திரி - புருஷ வசியம், மூன்றே நாளுக்குள், விட்டுப் பிரிந்த கணவன் - மனைவி ஒன்று சேர, ஓடிப்போனவர் தேடி வர, கணவன் மனைவி தாம்பத்திய உறவு குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய, ஆண்மை குறைபாட்டில் இருந்து சந்தோஷம் பெற, தாமதிக்கும் திருமணம் தங்கு தடையின்றி நடக்க, திருமண தோஷம் அகல, குழந்தை பாக்கியம் கிட்ட, பூதம் காத்த காணி பூமி தோஷம் அகன்று, காணிகளை விற்பனை செய்ய, கல்வியில் சித்தி பெற, வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க, வெளிநாட்டில் நிரந்தர வதிவிட வசதி கிட்ட வேளாண்மை செழிக்க, குடும்பத்தில் ஒற்றுமை நிகழ, தன் பிள்ளைகள் தாய் தந்தை பேச்சைக் கேட்டு திருந்தி வாழ, குபேர வாழ்வு பெற, லட்சுமி கடாட்சியம் கிட்ட, ஞாபக சக்தி பெற, மனம் விரக்தியடைந்தவர்கள் மனப் படபடப்பு, பதற்ற நிலை, கை, கால் நடுக்கம், இரவில் பயந்து எழுதல், மனப் பேதம் தீர, சூனியம் அகற்ற, மருந்தீட்டல் அகலப்பண்ண அத்துடன் அருள் வாக்கு பெற, அருள் ஞானத்தில் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. நடப்பது, நடக்கப்போவது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, எந்த மாதம் நீங்கள் எண்ணிய எண்ணங்கள், எண்ணியபடி சரிவரும் என்று தெரிந்து அறிந்து செயல்பட இந்த அருள் ஞான சித்த வாக்கு கை கொடுக்கும்.


எமது ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் மாதம் தோறும் மாதக் கடைசியில் நடைபெறும் அக்கினி குண்டல யாக பூசையில் கலந்து கொண்டால் சகல பாவ தோஷ விமோசனம் கிட்டும்.

"என்னிடம் தீய வேலைக்கு இடமில்லை"
நல்லதை நினைப்போம். நல்லதையே செய்வோம்;
ஓம் சக்தி - சக்தி - சக்தி

தேவையான நேரத்தில் தேவைப்படுபவர் -
உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி.
பேராசிரியர் டாக்டர் P.K.சாமி J.P.
(J.D.G.A.N)
Malaiyala Manthireeka Uchada Peedam.
162, Kotahena St, Colombo - 13.
T.P. 0112 342463 - 0112 3424464
0112 270615 - 0112 449110
0114 4613127
Fax - 0112 344831
E-mail - drpksamy@sltnet.lk

கிளை -
Sri Durkadevi Alayam,
No 33, Daily Fair, Nuwaraliya
T.P.052 2222508
052 2235097, 052 4490031, 052 4490035
052 2223093
Fax - 052 2223093
இன்னும் விபரங்களுக்கு எமது வெப் தளத்தை நாடுங்கள் :-
www.drpksamy .com





## நவசித்தர் மாந்தீரிகம்

ஓம் குருவே நம : கர்மவினைகளினால் தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத துன்பதுயரங்கள். வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை. தொழில் முன்னேற்றம் வெளிநாட்டு பிராயணத்தடை காதல் பிரச்சினை. காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய. பிரிந்தவர் ஒன்று சேர கணவன் மனைவி பிரச்சினைகள் தீர. வேண்டாதவரைப்பிரிக்க. கிரகதோஷ நிவர்த்தி செய்து. வீட்டில் லெட்சுமிகரம் ஏற்பட. வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அறிக்ககூடியவாறு விஷேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அனேககாரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹாசக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்தீரிக விஷ மருத்துவர்.

Dr. T. Murukuppillai (S.A.M.P),Main Street, Pandiruppu - 01, Kalmunai. (Sri Lanka) Tel : 067- 2224077. வெளிநாடு : 0094672224077

## இன்னொருவர் பார்வையில்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்த நகர்வு என்ன?

**"ஐரோப்பிய ஒன்றியத் தடையும் அடுத்த நடவடிக்கையும்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் கே.கொடகே எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகிறது. இந்தக் கட்டுரை 'த ஐலன்ட்', 'டெயிலி மிரர்' ஆகிய இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளிலும் கடந்த முதலாம் திகதி பிரசுரமாகியிருந்தது.**

**ஐரோப்பிய** ஒன்றியம் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இப்போதுதான் முதல் தடவையாக அர்த்தமுள்ள விதத்தில் செயற்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்ட போதோ அல்லது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கிட்டத்தட்ட கொலை செய்யப்படும் நிலையை எட்டிய போதோ அது எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டபோது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த பயணத் தடை, ஒரு மென்மையான குட்டுப் போலவே அமைந்தது. இந்தத் தடை, பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்குப் புலிகள் இயக்கம் மேலும் நெருங்கி வரச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டு மக்களின் துன்ப துயரங்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களின் துயரங்களுக்கு இத்தடை முடிவு கட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.


புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருக்கும் தடை, இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய சந்தர்ப்பமொன்றினைத் திறந்து விட்டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அரசாங்கங்கள், புலிகளினதும் அவர்களுக்குச் சார்பான அமைப்புகளினதும் சொத்துக்களை முடக்க முடியும். பொருளாதார ரீதியிலும் அவர்களை முடமாக்க முடியும். அத்துடன் புலிகள் இயக்கத்தைச் சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தியும் விடும். யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளைப் பயன்படுத்தி, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய பகுதிகளுக்குள் ஊடுருவி, நிர்வாகத்தைக் கைப்பற்ற புலிகளால் முடிந்துள்ளது. சர்வதேச ரீதியில் ஓரளவு முன்னேற்றகரமான சட்டபூர்வ அந்தஸ்தைப் பெறுவதற்கும் தனியான அரசொன்றின் தலைவர்களாகத் தமது கீர்த்தியை முன்தள்ளுவதற்கும் புலிகள் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தியுள்ளனர். புலம்பெயர்ந்து வாழும் தமது ஆதரவாளர்களை அணி திரட்டுவதற்கும் அவர்கள் இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியுள்ளனர். எனவே, புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டாலும், அவர்களிடம் பலமான புலம்பெயர்ந்தவர்களின் அமைப்பொன்று உண்டென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசாங்கங்கள், என்றுமே கண்டும் காணாதவை போல் இருப்பவை. ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தின்படி புலிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால், அவர்களால் பல்வேறு போர்வைகளின் கீழ் செயற்பட முடியும். இப்போது வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதிகாரத்தைப் பகிர்வதற்குத் தேவையான நம்பிக்கை தரக்கூடிய யோசனையொன்றினை முன்வைக்கத் தவறினால் அவர்கள் அதனைத்தான் செய்வார்கள். அடுத்த நடவடிக்கையை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

1984ஆம் ஆண்டு, அதாவது 22 வருடங்களுக்கு முன்னரேயே ஐரோப்பியப் பாராளுமன்றமும் ஐரோப்பிய அமைச்சரவையும் முதன் முதலாக இலங்கைப் பிரச்சினை தொடர்பாகத் தீர்மானங்களை நிறைவேற்றியதோடு, அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தன. எத்தனையோ தடவைகள் அவர்கள் புலிகள் இயக்கத்துக்கு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்கள். ஆனால், சில காரணங்களுக்காக இந்த எச்சரிக்கைக்கு அப்பால் ஐரோப்பிய ஒன்றியம் செல்லவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுத்தவரை, இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாதமை ஒரு காரணம். எம்மிடம் பெற்றோலிய வளமோ அல்லது எரிவாயு வளமோ இல்லாதது மற்றொரு காரணமாகும். மூன்றாவதாக, தேயிலைப் பெருந்தோட்டங்கள் போன்ற வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமான நலன்களை நாம், தேசியமாக்கி வீட்டோம். ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலாக மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்னவென்றால், அரசாங்கமும்கூட எவ்வித இணக்கத்துக்கும் வராதென்றும் தமிழர்களின் நலன்களையோ அல்லது தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளையோ அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாதென்றும் அவர்கள் கருதியதேயாகும். அத்துடன் எந்தவொரு ஆதரவையும் பெறுவதற்கு நியாயமே இல்லாத மிக மோசமான பாசிஸ, பயங்கரவாதக் குழுவே புலிகள் இயக்கம் என்பதும் ஒரு காரணமாகும். இரு தரப்புகளுக்குமே இந்த நெருக்கடி தேவையானதென்றும் அவர்கள் கருதினார்கள். தீர்மானங்களை மேற்கொண்டு, அறிக்கைகளை விடுவதற்கு அப்பால் ஐரோப்பிய ஒன்றியம் வேறொன்றும் செய்ய விளையாததற்கு இவையே காரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத் தடையை நாம் அர்த்தபுஷ்டியானதாக்க வேண்டுமானால், இலங்கை அரசு எவ்வித இணக்கத்துக்கும் வரப் போவதில்லையென்றும் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கப்போவதில்லையென்றும் நிலவும் அபிப்பிராயத்தை நாம் நீக்க வேண்டும். ஆம், இந்த சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கக்கூடிய நம்பகமான யோசனையொன்றினை முன்வைக்க வேண்டும். அது நியாயமானதென இந்தியாவும் சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அரசாங்கமும் செயலில் இறங்குவது போலத் தெரிகிறது. தடை விதிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை, உண்மையிலேயே சரியான திசையில் அமைந்துள்ளது. யுத்த நிறுத்தம் சம்பந்தமாகவும் சமாதானப் பேச்சுகளோடு தொடர்புபட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் தொடர்ந்து புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதென்ற தனது கொள்கையை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஆகக் கூடியளவுக்கு அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பான ஜனாதிபதியின் நோக்கத்தை வரைவிலக்கணப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்றும் ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதிகாரப் பகிர்வு வேலை ஆரம்பிக்கப்பட்ட இடத்திலிருந்து, நிபுணர்கள் குழு பணிகளைக் கையேற்று முன்னெடுக்குமென்று நாம் நம்புகிறோம்.



டோக்கியோவில் கடந்த முப்பதாம் திகதி நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் அமெரிக்க, ஜப்பானிய, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டபோது எடுத்த படம்.

அதாவது, 13ஆவது அரசியலமைப்புத் திருத்ததிலிருந்து இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு, மேலும் முன்னெடுக்கப்படுமென்று நம்புகிறோம். வடக்கு, கிழக்கிலுள்ள சமூகங்களுக்கு மட்டுமல்ல, நாட்டின் ஏனைய பகுதிகளின் நிர்வாகத்தையும் மீளமைக்கக் கூடியதாக அதிகாரப் பகிர்வைச் சாத்தியமாக்கும் வகையிலான அரசியல் உறுதிப்பாடும் பலமும் இந்த நிபுணர் குழுவுக்கு இருக்குமெனவும் நம்புகிறோம். சமஷ்டியா அல்லது ஒற்றையாட்சியாவென்ற லேபல்களில் புனிதம் எதுவும் இல்லையென்பதை, தனது சக கட்சியினருக்கு அல்லது கூட்டணியிலுள்ள அங்கத்தவர்களுக்கு ஜனாதிபதி நம்பிக்கையூட்ட வேண்டும்.

முன்னுரிமைக்குரிய விடயங்களை அரசாங்கம் சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தெற்கில் மிகத் தேவையான இணக்கப்பாட்டினைக் காண்பதற்காக, அரசாங்கம் தனது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்ய வேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்பப் பாரியதொரு நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்வதோடு தனது கட்சி உறுப்பினர்கள் அரசியல் விளையாட்டில் ஈடுபடாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். மாநகர சபை அரசியல் போன்ற சில்லறை விடயங்களையும் ஐ.தே.க. அங்கத்தவர்களைக் கவர்ந்திழுக்கும் விடயங்களையும் இன்னொரு நேரத்துக்கு வைத்துக் கொள்ளலாம். தேசிய இணக்கப்பாடொன்றினைக் கட்டியெழுப்புவதே, முதன்மைக்குரிய முன்னுரிமை விடயமாகும்.

நாட்டிலுள்ள இரண்டாவது மிகப் பெரிய அரசியல் கட்சி ஐ.தே.க. என்பதால், குறிப்பாக அதன் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும். இதேவேளை, ஜே.வி.பி.யினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் அச்சத்தைப் போக்க வேண்டியதும் ஜனாதிபதியின் கடமையாகும். புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்துள்ளமை அர்த்தமுள்ள முதலாவது அறிகுறியாகும். இந்த முயற்சிப் போக்கில் புலிகள் மீது மேலும் ஆழமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை ஜே.வி.பி.க்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் உணர்த்த வேண்டியதும் அதிகாரப் பகிர்வுக்கான முதன்மை விடயத்தில் இவர்கள் அக்கறைகொள்ள வேண்டுமென்றும் உணர்த்த வேண்டும்.

ஜனநாயக அமுலாக்கலும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதுமே புலிகள் இயக்கம் மிகவும் பயப்படும் விடயங்களாகும். இவற்றிற்குத் தாம் கட்டுப்பட்டு நடக்க நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதாலேயே, அதற்குப் பயந்து புலிகள் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

இந்த விடயங்களில்தான் சர்வதேச சமூகத்துடன் எம்மை நாம் இனங்காட்டிக் கொள்ள வேண்டும். இந்த இரு விடயங்களிலும் அவர்கள் எம் மீது தவறுகளைக் கண்டுபிடிக்க அனுமதிக்கக்கூடாது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை, ஒரு செய்தியைத் தருகிறது. எமக்கு அவர்கள் சந்தர்ப்பமொன்றினை வழங்கியுள்ளார்கள். அதனை பயன்படுத்த வேண்டுமென்பதே அதுவாகும். இனப்பிரச்சினை வரலாற்றில் நழுவவிடப்பட்ட மற்றொரு சந்தர்ப்பமாக இது அமையக் கூடாது. இதற்கான சந்தர்ப்பங்கள் 1958 இல் ஆரம்பிக்கப்பட்டு 1965, 1972, 1978, 1985, 1987,1997 இறுதியாக ஆகஸ்ட் 2000ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவுமே கை தவறிப் போயுள்ளன. இந்த இனப் பிரச்சினையைப் பந்தாடிய எமது அரசியல்வாதிகள் மீது இம் முயற்சிகளைத் தவற விட்டமைக்காகக் குற்றம் சாட்டமுடியும். கொலைகாரப் புலிகள் இயக்கத்தோடு இணைந்து ஆயிரக்கணக்கான எமது மக்களினதும் ராஜீவ் காந்தி உட்பட இந்தியர்களதும் மரணங்களை இத் தவறுகளே ஏற்படுத்தியிருக்கின்றன. ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பழி வாங்க வேண்டுமென்று சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்.


டோக்கியோவில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் கூட புலிகளின் மீது இறுக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் தமது அறிக்கையில், அரசாங்கத்தின் மீதும் குற்றம் சுமத்தி அதனைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதால் அது எமக்கு நல்லதாக இல்லை. நாடு பிரிவினையை அவர்கள் திட்டவட்டமாக கண்டித்திருப்பதோடு அதனை அங்கீகரிக்க மாட்டோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ் மக்களின் நியாயபூர்வமான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறும் சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுக்கான தீர்வொன்றினைக் கண்டறியுமாறும் ஒஸ்லோவில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தை ஈர்த்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் இயன்றவரை கூடியளவு அதிகாரப் பகிர்வு வழங்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஜனாதிபதியின் அதே கருத்தையே அவர்களும் கூறியுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகள் மற்றும் ஜப்பான், இந்தியா ஆகியவற்றின் சார்பிலும் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை, அசட்டை செய்யப்பட முடியாதது. அவர்களின் ஆதரவை நாம் இழந்துவிட முடியாது. பூகோளமயமாக்கப்பட்ட இந்த உலகத்தில், வார்த்தை ஜாலங்கள் ஆடுவது அர்த்தமற்றுப் போய் விட்டதால், அவற்றை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். எமது நாட்டு மக்களுக்கு சமாதானமும் சுபிட்சமும் வழங்கப்பட வேண்டும்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

'என் படங்களுக்கு வாலிதான் பாட்டு எழுத வேண்டும் என்று எம்.ஜி.ஆர்., தயாரிப்பாளர்களுக்குக் கட்டளையிட்டபோதே, என் தலையில் கொம்பு முளைத்திருக்க வேண்டும். முளைக்கவில்லை; நான் முளைக்கவும் விடவில்லை. இது, ஆண்டவன் தீர்ப்பு என்று அமைதி காத்தேன். இந்த மனப்பக்குவம் ஒன்றே இன்றளவும் எல்லோருக்கும் பிரியமானவனாக



என்னை வைத்திருக்கிறது. வெற்றியில் விறைப்பதும், தோல்வியில் துவளுவதும் எனக்கு ஒவ்வாத விஷயங்கள்.

என் திரையுலக வாழ்க்கையில், எத்துணையோ முறை தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம், கடவுள் பக்தி ஒரு கவசம் போல் என்னைக் காத்து நின்றிருக்கிறது. இறைவன் எவரையேனும் அனுப்பி, என்னைக் கைதூக்கிவிடச் செய்திருக்கிறான்.

என் புகழைப் பனிப்படலம் மூடியிருந்தபொழுது, அதை ஒரு நொடிப்போதில் நீக்கி - என்னை மீண்டும் வெளிச்சத்தில் நிறுத்தியவர், என் இனிய நண்பரும், இயக்குநருமான திரு. ஏ.சி. திரிலோக்சந்தர் அவர்கள்.

அவர் தயாரித்து இயக்கிய 'பாபு' திரைப்படம் மூலமாகத்தான் நான் புனர்வாழ்வு பெற்றேன்.

அந்தக் கறுப்பு வெள்ளைப் படம், பல வண்ணப் படங்களை விழுங்கி வெற்றி உலா வந்தது.

தன்னுடைய படங்களுக்கு நான்தான் பாடல் எழுத வேண்டுமென்று முன்மொழிந்த இயக்குநர்கள் இருவர். ஒருவர் திருவாளர் கிருஷ்ணன் பஞ்சு; மற்றொருவர் திரு. திரிலோக்சந்தர்.

திரிலோக்சந்தர் சொந்தமாகத் தயாரித்து இயக்கிய படங்களைத் தவிரவும் - அவர் பிறருக்காக இயக்கிய பெருவாரியான படங்களுக்கும் என்னையே பாட்டெழுதப் பணித்தார்.

நான் ஒன்றும் அவருக்கு நெருங்கிய நண்பனலல. இருப்பினும் அவர் ரசனைக்கு ஒத்த எழுத்தாளனாக, என்னை அவர் இனங்கண்டு கொண்டார்.

திரிலோக்சந்தர் தரமான படங்களை இயக்கி, இமாலய வெற்றி பெற்றவர் எம்.ஜி.ஆர். படத்தைக்கூட, தான் நினைத்தபடி வடிவமைத்தவர் அவர். எம்.ஏ. பட்டதாரியாயிருந்தும், ஆங்கில நாவல்களையே பெரிதும் நேசித்துப் படித்துப் புளகாங்கிதம் அடைபவராக இருந்தும் - தமிழ்ப் பாடல்களின் நயங்களை வெகுவாக ரசித்துப் பாராட்டும் தேர்ந்த ரசனை அவரிடத்தில் இருந்தது.

பாட்டுக்குத் தேவையான விவரங்களைச் சொல்லிவிட்டு, படைப்பாளியின் சிந்தனைக்கு முழு சுதந்திரம் கொடுத்துச் செயல்படும் அவரது பாங்கைப் பக்கம் நின்று பார்த்தவன் நான்.

அவர் உள்ளமும், அவர் உருவத்தைப் போல் உயரமாகவே இருந்தது. வெற்றியை அவர் தோளோடு நிறுத்திக் கொண்டாரேயல்லாது, தலைக்குக் கொண்டு செல்லவில்லை.

"உங்க பாட்டு, நம்ம படத்தோட வெற்றிக்கு ஒரு முக்கியக் காரணம்" என்று உளமார உலகறியக் கூறுவார். என் உச்சி அவரால் எத்துணையோ முறை குளிர்ந்து போயிருக்கிறது.

வேறு சில இயக்குநர்களைப் போல், படத்தின் வெற்றிக்குப் பாடலும் ஒரு காரணம் என்பதை ஜீரணிக்க முடியாமல் - தனக்குப் பின்னால் - தானே ஓர் ஒளிவட்டத்தை வரைந்து கொண்டு அவர் தான்தோன்றித்தனமாக அலைந்ததில்லை. பாட்டின் துணை கொண்டு புகழேணியில் ஏறிவிட்ட பிறகு - 'என் படத்திற்கு பாட்டு இருப்பது, ஒரு சடங்கு போல...' என்றெல்லாம் நாத்தழும்பேறப் பேசி நெஞ்சைப் போலியாக நிமிர்த்தி நின்ற நாலாந்தர இயக்குநர்களை நான் அறிவேன். இவர்களெல்லாம், தாய்ப்பாலிலேயே தண்ணீர் கலந்திருந்தது என்று கூசாமல் சொல்லக்கூடிய குறை மதியாளர்கள். திரு.திரிலோக்சந்தர், இந்த அபத்தங்களுக்கெல்லாம் அப்பாற் பட்டவர். வெற்றியை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளும் விசால மனம் படைத்தவர். (தொடரும்......)







(Three) 'த்ரீ' திரைப்படத்தின் முதற்காட்சி அண்மையில் பிரித்தானியாவில் காட்டப்பட்டது.

இத்திரைப்படத்தின் ஹீரோயினாக நடிப்பவர் கெலீ ப்ரூக். திரைப்படத்தின் ஆரம்ப விழாவின் போது இவர் தனது காதலன் பிலி சேனுடன் வருகை தந்திருந்தார்.

இவர்கள் இருவரும் இத்திரைப்படப்பிடிப்பின் போதுதான் முதன்முதலில் சந்தித்துள்ளனர். குறுகிய காலத்துக்குள் இவர்கள் காதலர்களாகிவிட்டனர்.

இந்தக் காதல் எத்தனைக் காலம் நீடிக்கும் என்பது பற்றியே இப்போது சக நடிகர், நடிகைகள் பேசிக் கொண்டிருக்கின்றனர்.


## தயாராகும் தாய்!

பிரபலப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் பாடியுள்ள 'பேபி வன் மோ டைம்' என்ற பாடல் இவரது இரசிகர்களை ஈர்த்த பாடலாகும்.

இப்பாடலை தற்போது இவர் தனது நிஜ வாழ்க்கையிலும் பாட ஆரம்பித்துள்ளார்.

அதாவது தனது இரண்டாவது குழந்தைக்கும் தான் தயாராக உள்ளதாக இவர் அண்மையில் அறிவித்துள்ளார். இதனை அவர் ஒரு தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவரிடம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த டேவிட் லெட்டர்மன் பிரிட்னியைப் பார்த்து ஒரு சிரிப்பை உதிர்த்தார். இந்தச் சிரிப்புக்கு பதில் அளித்த பிரிட்னி "பயப்பட வேண்டாம் டேவிட். இந்தக் குழந்தை அதாவது பிறக்கப்போகும் குழந்தை உங்களுடையதல்ல" என்பதாகும்.



## மறந்த ஆடை!

ஆடை அந்தளவுக்குத் தேவையில்லை என்பதையே அடிப்படைத் தேவையாகக் கருதும் "ப்ளேபோய்" சஞ்சிகை பொதுவாகவே ஆடைகளைப் பற்றி கவலைப்படாத பெண்களின் புகைப்படங்களையே தனது அட்டைப்படங்களாக வெளியிடும்!

அண்மையில் ஜெசிக்கா எல்பாவின் புகைப்படம் இச்சஞ்சிகையின் அட்டைப்படமாக வெளிவந்திருக்கிறது. இப்படம் எப்படி அச்சஞ்சிகையில் வந்தது? என்பது எல்பாவின் கேள்வியாகும். இதில் அவர் குளியல் உடையுடன் காணப்படுகிறார். இவ்வாறான ஆடையுடன் அவர் "In to the Blue" திரைப்படத்துக்காகக் காட்சி தந்தது அவருக்கு ஞாபகமாம்! இதனால் கோபம் கொண்டுள்ள ஜெசிக்கா எல்பா தனது நிர்வாணத்தை அட்டைப்படமாக்கிய "ப்ளே போய்" சஞ்சிகையை நீதிமன்றத்தில் நிர்வாணமாக்கப் போவதாகக் கூறியுள்ளார்.



## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....


இதற்கு பிரிட்டிஷார் சொன்ன விளக்கம் வேடிக்கையாக இருந்தது. கிராப் கடலுக்கடியில் நீந்திச் சென்று ஆராய்ச்சிகள் செய்வதை பொழுது போக்காகக் கொண்டிருந்தார் என்றும் சோவியத் கப்பல் போர்ட்மவுத் துறைமுகத்தை வந்தடைந்தபோது தற்செயலாக அவரும் நீருக்கடியிலிருந்து தன்னுடைய ஆராய்ச்சிகளை செய்திருக்கலாம் என்றும் விளக்கம் சொன்னார்கள்.

இதைவிட சுவையான விஷயம் என்னவென்றால் போர்ட்மவுத் துறைமுகத்தில் கடலுக்கடியில் எதிரிநாட்டு கண்ணிகள் எதுவும் இருக்கிறதா என்பதை கண்டுபிடிக்க பிரிட்டிஷார் ஒரு அமைப்பை வைத்திருந்தார்கள். அந்த அமைப்பின் நடவடிக்கைகளை கண்காணிக்க ரஷ்ய உளவாளிகளும் அங்கிருந்தார்கள்.

கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு கணவனும் மனைவியும் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் கனடா நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்கள் அனைத்தும் அவர்களிடம் இருந்தன. உண்மையில் அவர்கள் ரஷ்ய உளவாளிகள். போர்ட் மவுத் துறைமுகத்தில் புத்தகக்கடை ஒன்றை அவர்கள் நடத்தி வந்தார்கள்.

அவருடைய கடையை சோதனை இட்டபோது அங்கே செய்திகளை அனுப்பும் ரேடியோ கருவி இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் கருவி தங்களுக்குச் சொந்தமானது அல்ல என்றும் தங்கள் இருப்பிடத்தை அவ்வப்போது பயணிகளுக்கு வாடகைக்கு விடுவது உண்டென்றும், அவ்வாறு வந்து தங்கி இருந்த யாரோ ஒருவர் அந்தக் கருவியை அங்கேயே விட்டுவிட்டுப் போயிருக்க வேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களும் அவர் இருப்பிடத்தை வாடகைக்கு விடுவது உண்மைதான் என்று உறுதி செய்தார்கள். அந்தத் தம்பதிகள் முடிவில் தண்டிக்கப்பட்டார்கள் என்றாலும் குற்றங்கள்




சரியாக நிரூபிக்கப் படாததால் விசாரணை பல ஆண்டுகள் நீடித்துக் கொண்டே போயிற்று. இதனால் அவர்களோடு தொடர்புடைய மற்ற உளவாளிகள் தப்பிப்பது சுலபமாயிற்று. இதில் வசதி என்னவென்றால் அந்த நிறுவனத்தின் சார்பாக தாங்கள் வேலை பார்க்கும் நாடுகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளோடு எவரும் சந்தேகப்படாதவாறு தொடர்புகளை உண்டாக்கிக்கொள்ள முடிகிறது. சர்வதேச ரீதியில் இந்த அடிப்படையின் பல அமைப்புகள் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில அமைப்புகள் உளவு பார்த்தலை பகுதி நேர வேலையாகச் செய்கின்றன. வேறு சில அமைப்புகள் உளவு பார்த்தலை முழு நேர வேலையாகவே செய்து கொண்டிருக்கின்றன.

இம்மாதிரி அமைப்புகளில் வேலை செய்கின்ற சிலருக்கு, தாங்கள் செய்கின்ற வேலை உளவு வேலை என்றுகூடத் தெரியாது.

அந்த ஸ்தாபனத்தின் சார்பாக சில பணிகளைச் செய்வதாகவும் தகவல்கள் சேகரிப்பதாகவும்தான் அவர்கள் எண்ணிக்கொண்டு இருப்பார்கள். மிக கேந்திரமான இடங்களில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் நோக்கம் தெரியும். இம்மாதிரியான அமைப்புகளை உளவாளிகளின் பாஷையில் Front Or ganisations என்றழைக்கிறார்கள். இவை Cover Or ganisatio ns -லிருந்து சற்று மாறுபட்டவை.

இடை மனிதர் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை. தலைமை உளவாளிக்கும் அவருடைய கையாட்களுக்கும் மத்தியில் தொடர்பு மனிதர்கள் உண்டு. இவர்களை "Cut Out" என்று சொல்லுகிறார்கள். ஒரு நாட்டில் இன்னொரு நாடு தங்களுயுடைய கையாட்களை உருவாக்க Cut Out என்றழைக்கப்படும் இந்த இடை மனிதர்கள் பெரிதும் உதவியாக இருக்கிறார்கள்.

ஒரு உளவாளி இன்னொரு உளவாளிக்கு தகவல்களை விட்டுச் செல்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட சில இடங்கள் உண்டு. இந்த இடங்களை Dead Drop என்று சொல்லுகிறார்கள். சங்கேதத் தகவல்களை விட்டுச் செல்லும் இடங்களையும் Dead Drop என்று குறிப்பிடுவதுண்டு. இரண்டு உளவாளிகளுக்கு மத்தியில் செய்திகளைச் சுமந்து செல்லுகின்றவன் Live Drop என்றழைக்கப்படுகிறான்.

(தொடரும்......)

(நன்றி : நர்மதா)



## நூறில் ஒருவர்

உலகப் புகழ்பெற்ற "டைம்" சஞ்சிகை வருடந்தோறும் உலகில் பலம் பொருந்திய நூறு பேரைத் தெரிவு செய்து வருகின்றது.

கலைஞர்கள், விஞ்ஞானிகள், உலகத் தலைவர்கள் உட்பட பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இதில் அடங்குகின்றனர். இம்முறை இந்த நூறு பேரில் ஹொலிவுட் நடிகையும் பாடகியுமான ஜெனிபர் லோபஸும் அடங்குகின்றார்.



## ஆடலுடன் பாடலும்

ஹொலிவுட் திரைப்பட நடிகைகளில் கவர்ச்சிக் கென்றே பெயர் போன பெமலா என்டர்சன் தற்போது ஒருபாடகியாகவும் வலம் வர ஆரம்பித்துள்ளார்.

ரொக் இசைத் துறையில் பிரபலப் பாடகராக விளங்கும் பிரையன் டெம்ஸூடன் "டுயட்" பாடலொன்றைப் பாடியுள்ளார் பெமெலா.

"பேவொச்" தொலைக்காட்சி தொடரின் மூலம் புகழ் பெற்றவர் பெமெலா. ' வென் யுவர் கோன்' என்ற பாடலையே பெமெலா பிரையனுடன் பாடியுள்ளார். இந்தப் பாடலை ஏற்கனவே 1998ஆம் வருடம் ஸ்பைஸ் கர்ல்ஸ் இசைக் குழுவின் பாடகியான மெல்சியுடன் பிரையன் பாடியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# உலகிலேயே பயங்கர விபத்து : போபாலில் விஷ வாயு தாக்கி 2,500 பேர் பலி
## ஆயிரக்கணக்கானவர்கள் பார்வை இழந்தனர்

**நெஞ்சை** உறைய வைக்கும் ஒரு பயங்கரச் சம்பவம் 03.02.1984ஆம் ஆண்டு மத்திய பிரதேச மாநிலம் போபால் நகரில் நடந்தது. விஷ வாயு தாக்கி 2500 பேர் இறந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் கண் பார்வை இழந்தார்கள்.

### பூச்சி மருந்து தொழிற்சாலை

போபால் நகரில் பூச்சி மருந்து தயாரிக்கும் "யூனியன் கார்பைடு" என்ற தொழிற்சாலை இருந்தது. இந்த தொழிற்சாலையில் பூமிக்கு அடியில் "மெதில் ஐசோ சயனைடு" என்ற வாயு

பலியானவர்களின் சடலங்கள்



சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

இது சக்தி வாய்ந்த விஷ வாயுவாகும். பூச்சி மருந்து தயாரிக்கப் பயன்படுவதாகும்.

### வாயு கசிவு

03.12.1984 நள்ளிரவு 1 மணி அளவில் விஷ வாயு சேமிப்பு தொட்டியை மூடியுள்ள வால்வு, தொட்டிக்குள் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக உடைந்தது. இதனால், விஷ வாயு கொஞ்சம் கொஞ்சமாகக் கசிந்து வெளியேறியது.

சிறிது நேரத்திலேயே அங்கிருந்த அதிகாரிகள் இதனைக் கண்டுபிடித்தார்கள். 40 நிமிட நேரத்தில் கசிவு நிறுத்தப்பட்டது.

### நகருக்குள் பரவியது

என்றாலும், "அதுவரை கொஞ்சம் கொஞ்சமாக தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய விஷ வாயு நகரத்திற்குள்ளும், 40 சதுர கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்திற்குள்ளும் பரவியது.

அந்தப் பகுதியில் வசித்தவர்களை விஷ வாயு தாக்கியது. இதனால் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மயக்கம் போட்டு விழுந்தார்கள். அவர்களுக்கு மூச்சு திணறல், கண் எரிச்சல் ஆகியவையும் ஏற்பட்டன.

### 2500 பேர் சாவு

இந்த விஷ வாயு தாக்குதலுக்கு உள்ளானவர்களில் சுமார் 300 பேர் அன்றைய தினமே பரிதாபமாக மரணமடைந்தனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த ஆயிரக்கணக்கானவர்களை பஸ், லாரி, டெம்போ, கார், ஸ்கூட்டர் என்று எது கிடைத்ததோ, அதில் ஏற்றி ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு போனார்கள்.

ஆஸ்பத்திரிகளில் தாங்க முடியாது கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆஸ்பத்திரியில் சேர நீண்ட கியூ வரிசை நின்று கொண்டிருந்தது.

ஒரே நாளில் 6 ஆயிரம் பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் ஏராளமான பேர் வந்த வண்ணம் இருந்தார்கள். சிகிச்சை அளிக்க முடியாமல் டாக்டர்கள் திணறினார்கள்.

இது பற்றிய தகவல் கிடைத்ததும் டெல்லியில் இருந்து விமானங்களில் டாக்டர்களை அனுப்ப பிரதமர் ராஜீவ் காந்தி உத்தரவிட்டார். உடனே டாக்டர்கள் விமான மூலம் போபால் விரைந்தனர். இராணுவத்தைப் சேர்ந்த டாக்டர்களும் அழைக்கப்பட்டார்கள்.

விஷ வாயுவுக்கு இறந்தவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே சென்றது. ஐந்தே நாட்களில் சாவு எண்ணிக்கை 2,500 ஆக உயர்ந்தது.

50 ஆயிரம் பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கண் பார்வை இழந்தார்கள்.

### குவியல் குவியலாகப் பிணங்கள்

விஷ வாயு தாக்கி மரணம் அடைந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் பணியில் அரசு அதிகாரிகள் ஈடுபட்டனர். போபால் நகரில் உள்ள பல்வேறு மயானங்களுக்குப் பிணங்கள் லாரிகள் மற்றும் டாக்சிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. அங்கு குவியல், குவியலாகப் பிணங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

மயானங்களுக்கு பிணங்கள் கொண்டு செல்லப்படுவது தெரிந்ததும், மரணம் அடைந்தவர்களின் உறவினர்கள் அங்கு விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள்.

பிணமாகிவிட்டவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தும் போது, கதறி அழுதனர். எல்லா மயானங்களிலும் கூட்டம் அதிகமாக இருந்தது.

மரணம் அடைந்தவர்களில் குழந்தைகள்தான் அதிகமாகும். குழந்தைகளின் உடல்களை வெள்ளைத் துணியால் மூடி மயானத்துக்கு கொண்டு வந்து அடக்கம் செய்தனர்.

### ஊரே காலியானது

ஊருக்குள் விஷ வாயு பரவி விட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், உயிர் தப்புவதற்காக கலர் ஊரை காலி செய்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

ஊரில் உள்ளவர்களை எல்லாம் தாக்கிய விஷ வாயு, தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் யாரையும் பாதிக்கவில்லை. இதனால் தொழிலாளர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. தொழிற்சாலைக்கும் சேதம் ஏற்படவில்லை.



கண் பறிபோன குழந்தை ஒன்றின் சடலம்

விஷ வாயு தாக்குதல் காரணமாக போபால் நகரில் அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள், கடைகள், ஓட்டல்கள் அனைத்தும் மூடப்பட்டன. மருந்து கடைகள் மட்டுமே திறந்து இருந்தன.

இந்த விபத்தை தொடர்ந்து யூனியன் கார்பைடு தொழிற்சாலையை மூட உத்தரவிடப்பட்டது.

உயிர் இழந்தவர்கள் குடும்பத்துக்குத் தலா ரூபா 5 ஆயிரமும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபாயும் உதவிப்பணம் வழங்க மாநில அரசு உத்தரவிட்டது. மேலும் பிரதமர் ராஜீவ் காந்தி ரூபா 40 லட்சம் வழங்க உத்தரவிட்டார்.

### அமெரிக்க நிறுவனம்

விபத்து ஏற்பட்ட இந்த யூனியன் கார்பைடு தொழிற்சாலை அமெரிக்க நிறுவனமாகும். இதன் தலைமை நிறுவனம் அமெரிக்காவில் வெஸ்ட் லெர்சினியா மாநிலத்தில் தன்டிரி நகரில் உள்ளது.

விபத்து குறித்து அந்த நிறுவனத்தின் சுகாதார பிரிவு நிபுணர் ஜாக்சன் கூறியதாவது:-

கடந்த 2 ஆண்டுகளாக இந்த வாயுவை தயாரித்து சேமித்து வைத்து பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்து வருகிறோம். விபத்து ஏற்பட்டது எப்படி என்பதை ஆராய அமெரிக்காவில் இருந்து நிபுணர் குழு போபால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்துக்கு எந்த அளவில் உதவி செய்வது என்பது பற்றி இந்திய அரசுடன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### ராஜீவ் காந்தி நேரில் விசாரணை

ஆந்திராவில் தேர்தல் பிரசாரம் செய்து வந்த பிரதமர் ராஜீவ் காந்தி டெல்லி திரும்பும் வழியில் போபால் சென்றார். யூனியன் கார்பைடு தொழிற்சாலைக்கு சென்று பார்வையிட்டார். விஷ வாயு கசிந்து வெளியேறிய விவரங்கள் கேட்டறிந்தார்.

பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களைப் பார்த்து ஆறுதல் சொன்னார். ஏராளமான குழந்தைகள் சிகிச்சை பெற்று வந்தனர். அந்த குழந்தைகளை அழைத்து பேசினார். ஆஸ்பத்திரிகளில் இடை விடாது பணிபுரிந்த டாக்டர்கள், ஊழியர்களை ராஜீவ் காந்தி பாராட்டினார்.

பின்னர் ராஜீவ் காந்தி நிருபர்களிடம் கூறியதாவது:-

### நெஞ்சை நெகிழ வைத்தது

இப்படிப்பட்ட பயங்கரமான தொழிற்சாலை நகரின் மையப்பகுதியில் இடம் பெற்றது தவறு. இனிமேல் இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அமைக்கும்போது, தேவையான பாதுகாப்பு முறைகள் கடைபிடிக்கப்பட்டு உள்ளதா என்று கண்காணிக்கப்படும்.

பெரும்பாலும் அபாயத்தை விளைவிக்கும் தொழிற்சாலைகள் நகரின் மையப்பகுதியில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும்.

அதற்கு ஏற்ப விரைவில் சட்டங்கள் கொண்டு வரப்படும்.

விஷ வாயு தாக்கி ஆஸ்பத்தியில் சிகிச்சை பெறும் குழந்தைகளைப் பார்த்தேன். அது நெஞ்சை நெகிழ வைக்கும் நிகழ்ச்சி. அந்தக் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை இழந்து அனாதைகளாக நிற்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்வது, எப்படி வளர்ப்பது என்பது பற்றி விரைவில் முடிவு எடுத்து அறிவிக்கப்படும்.

இவ்வாறு ராஜீவ்காந்தி கூறினார்.

இந்த விபத்து பற்றி விசாரணை நடத்த மத்திய பிரதேச ஜகோர்ட் நீதிபதி என்.கே.சிங் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது.

### தொழிற்சாலை அதிபர் கைது

அமெரிக்காவைச் சேர்ந்த தொழில் அதிபர் லாரன் ஆண்டர்சன் என்பவர்தான் யூனியன் கார்பைடு தொழிற்சாலையின் நிர்வாக போர்டு தலைவராக



கம்பனியின் உரிமையாளர்

இருந்தார். அவர் அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் போபால் நகருக்கு வந்தார்.

விமான நிலையத்தில் வந்து இறங்கியதுமே அவரை பொலிஸார் கைது செய்தனர். அவருடன் வந்த 2 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டார்கள்.

இதுவரை யூனியன் கார்பைடு தொழிற்சாலையின் இந்திய நிர்வாக அதிகாரி கேசவ மகேந்திரா, மானேஜிங் டைரக்டர் வி.பி.கோகலே ஆகியோரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த சம்பவம் நடந்த உடனேயே தொழிற்சாலை ஜெனரல் மானேஜர் உட்பட 5 அதிகாரிகள் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர்.

கவனக்குறைவு காரணமாக பலர் பலியானதற்கு காரணமாக இருந்ததாகவும், கண் பார்வை இழத்தல் போன்ற கொடூரமான சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்ததாகவும் இவர்கள் அனைவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கோர்ட்டுகளில் பல ஆண்டுகள் விசாரணை நடந்து முடிந்த பிறகே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கிடைத்தது.

---





**வந்து** குவிந்த அமெரிக்கப் படையினர் தென் வியட்நாமின் எல்லையிலிருந்து வட வியட்நாமை நோக்கி நகரத் தொடங்கினர். இதை அறிந்த வட வியட்நாமியர்கள் கெரில்லாத் தாக்குதல்களில் ஈடுபட்டனர். மக்களோடு ஒளிந்திருந்து இத்தாக்குதலை வட வியட்நாமியர்கள் நடத்தியதால், அமெரிக்க



ஜனாதிபதி
கென்னடி

இராணுவம் இத்தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறியது. அமெரிக்கர்களின் பக்கத்தில் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்படவே, இனிமேலும் பொறுக்க முடியாது; நேரடியாகவே தாக்குவதுதான் சிறந்தது என்று ஜனாதிபதி ஜோன்சன் முடிவுசெய்தார்.

அதனால் விமானத் தாக்குதல் நடத்த முடிவு செய்தனர். இவ்விமானத் தாக்குதலுக்கு 'ஒபரேஷன்



ஜெர்மனி நாட்டு தயாரிப்பான இத் துப்பாக்கியை இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனி தான் முதன்முதலில் பாவித்தனர். இது சாதாரண கைத்துப்பாக்கி வகையைச் சார்ந்தது. இதன் தோட்டாக்கள் 38 மி.மீ. நீளமுடையதாகும். இதில் ஒரே நேரத்தில் 6 தோட்டாக்களை நிரப்பலாமாம்.

மிகக் குறுகிய சுடுதூரமுடைய இத்துப்பாக்கி ஆரம்பத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


ரோலிங் தண்டர்' (Operation Rolling Thunder) எனப் பெயரிட்டனர் அமெரிக்கத் தரப்பினர். தென் வியட்நாமின் ஜனாதிபதியான ஜோன்சன் அடுத்த 3 மாதங்களில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 5 இலட்சமாக அதிகரித்தார்.

அமெரிக்கப் படையினை தலைமை தாங்கிச் சென்ற இராணுவத் தளபதிகள் வித்தியாசமான இராணுவத் தாக்குதலை சந்தித்தனர். இத் தாக்குதலை சில நேரங்களில் தங்களால் சமாளிக்க முடியாமல் இருப்பதாக அமெரிக்கத் தளபதிகள் தங்கள் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தனர். மறைந்திருந்து தாக்கும் யுக்தியான கெரில்லாப் போர்முறையில் தலைசிறந்து விளங்கிய தேசிய விடுதலை முன்னணி (NLF) மக்களோடு மக்களாக இருந்தே இத் தாக்குதலை நடத்தி வந்தனர்.

வியட்நாமியர்களின் மக்கள் படையின் தாக்குதல் சற்று வித்தியாசமாகவே இருந்தது. வியட்நாமியர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். இவர்கள் தங்கள் நிலங்களில் எப்பொழுதும் பாடுபட்டுக் கொண்டு இருப்பார்கள். மக்கள்படையில் அநேக விவசாயிகள் அடங்குவர். அமெரிக்க இராணுவம் வட வியட்நாமுக்குள் முன்னேறும் போது விவசாயிகள் போல் இருக்கும் மக்கள் படையினர், தங்கள் ஆயுதங்களை பள்ளம் ஒன்றில் மறைத்து வைத்திருப்பார்கள். வேளைவரும் போது அவ்வாயுதங்களை கொண்டு கெரில்லாத் தாக்குதலை நடத்திவிட்டு ஆயுதங்களை மீண்டும் அதே இடத்தில் மறைத்து விட்டு சாதாரண ஒன்றும் அறியாத விவசாயிகள் போல் தங்கள் வேலைகளில் ஈடுபடுவார்கள். அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடந்த இடத்தில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது சாதாரண விவசாயிகளையே காண்பார்கள். அவர்களை மிரட்டிக் கேட்டால் ஒரு குழுவொன்று ஆயுதம் ஏந்தி வந்தனர் என்றும் அவர்கள் ஓடிச் சென்று விட்டதாகவும் கூறுவார்கள். அதனால் அமெரிக்க இராணுவத்திற்கு தாக்குதல் படைகள் யார்? சாதாரண மக்கள் யார் என்று அடையாளம் காண முடியாமல் இருந்தது. இதனால் அமெரிக்கப் படைச் சிப்பாய்கள் முன்னேறப் பயந்தனர். தாக்குதல் எந்நேரத்தில் எங்கிருந்து வரும் என்று தெரியாமல் தவித்தனர். ஆயினும் வட வியட்நாமைக் கைப்பற்றியே தீருவது என்ற ஜனாதிபதி ஜோன்சனின் கொள்கை மட்டும் மாறவில்லை.

அநியாயமாக அமெரிக்கப்படைகள் உயிரிழப்பதைக் கண்ட இராணுவத் தளபதி அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் அவர், தன்னால் தமது இராணுவச் சிப்பாய்களின் உயிரிழப்பைத் தடுக்க முடியாமல் இருக்கிறது என்றும் போரை தயவு செய்து முடித்துவிடும் படியும். போருக்கு எந்தவித காரணமும் இங்கு இல்லை என்றும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். இக் கடிதம் கென்னடிக்கு கிடைக்கும் முன்னதாகவே கடிதம் அனுப்பிய செய்தியும் அதில் உள்ள அனைத்து விடயங்களும் ஜனாதிபதி ஜோன்சனுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும் அவர் சிறிதும் அஞ்சவில்லை. அவருக்குப் 'போருக்கான காரணம் என்று இங்கு எதுவும் இல்லை' என்ற கருத்து மட்டும் ஏதோ நெருடியது. எப்படியும் இக்கடிதம் கென்னடிக்கு கிடைத்தால் போர் முடிவுக்கு வந்துவிடும் என்றும், தனது பதவிக்கு ஆபத்து என்றும் உணர்ந்த அவர், போருக்கான காரணத்தை உருவாக்க சதித்திட்டங்கள் தீட்டினார். இது கொலை செய்யும் அளவுக்கு கொண்டு வந்து விட்டது. உண்மையில், காரணம் ஒன்றும் இல்லை என்பது அவருக்கும் தெரியும். கடிதம் கிடைத்தவுடன் கென்னடி ஜோன்சனை உடனடியாக வாஷிங்டனுக்கு அழைத்தார். இந்த சமயத்தை தான் ஜோன்சன் எதிர்பார்த்திருந்தார்.

ஒன்றும் அறியாதவர் போல் வொஷிங்டனுக்குச் சென்ற அவர் ஜனாதிபதி கென்னடியைச் சந்திக்க முன் தன்னுடைய நெருங்கிய சகாக்களுக்கு இராணுவத் தளபதியை கொன்று விடும் படியும் அக் கொலையினை வியட்நாமியர்கள் மேல் போடும் படியும் கட்டளையிட்டு



ரஷ்ய நாட்டின் தயாரிப்பான இத்துப்பாக்கி, 1947ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் போது பாவிக்கப்பட்டது. இது AK 47 என அழைப்பட்டது. இதன் நிறை 4.5 கி.கிராம். இதில் 30 தோட்டாக்களை நிரப்பலாம். இதன் சுடுதூரம். 1.5 கி.மீ. இது கிட்டத்தட்ட 0.3 மீட்டர் நீளமுடையதாம்.

அநேகமாக இராணுவத்தினர் தற்போது இதனையே பாவித்து வருகிறார்கள்.

விட்டு கென்னடியைச் சந்திக்க வெள்ளை மாளிகைக்கு சென்றார். அங்கு அவர் கென்னடியுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போதே இராணுவத் தளபதி கொல்லப்பட்டார். இத் தகவல் இராணுவத் தொலைபேசி மூலம் ஜனாதிபதி கென்னடிக்கு அறிவிக்கப்பட்டது. அச்செய்தியை கூறுகையில் வியட்நாமியர்களின் விசேட படையணியினரால் தான் இராணுவத் தளபதி கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் பெரிதும் குழம்பிப் போன ஜனாதிபதி கென்னடி என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தார். இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஜோன்சன் உள்ளூரச் சிரித்துக் கொண்டார்.

ஜோன்சனின் போருக்கான காரணம் சரியானது தான் என்று கென்னடி நினைத்தார். இவரின் யூகத்தை இன்னும் நம்ப வைத்தது. NLF யின் மறுப்பறிக்கை இன்மையுமாகும். இவற்றையெல்லாம் அவதானித்த கென்னடி போரை இன்னும் உக்கிரப்படுத்த உத்தரவிட்டார். தண்டனைக்கு என்று வாஷிங்டன் அழைக்கப்பட்ட ஜோன்சன் வரும் பொழுது புதிய ஆயுதங்கள் மற்றும் புதிய இராணுவப் படையணிகள் என்பவற்றுடன் வந்திறங்கினார்.


இவருடன் முதன்முதலில் வியட்நாம் மண்ணுக்கு அமெரிக்க உளவு நிறுவனமான CIA யும் வந்திறங்கியது. CIA வந்ததால் ஜோன்சன் சிறிது கலங்கினார். தமது குட்டு உடைபட்டு விடும் என்று பயந்த அவர், தமது நெருங்கிய சகாக்களைத் தலைமறைவாக்கினார்.

இராணுவத்தினரை ஊக்கப்படுத்துவதற்காக ஜோன்சன் பல நடவடிக்கைகளை எடுத்து வந்தார். இதற்காக இராணுவத்தினர் மத்தியில் அடிக்கடி உரையாற்றுவார். இதைவிட முக்கியமாக இராணுத்தினரின் பழைய ஆயுதங்களை களைந்து புதிய ஆயுதங்களை வழங்கினார். அதாவது ஆரம்பத்தில் இராணுவச் சிப்பாய்கள் பயன்படுத்திய AK 47 துப்பாக்கிகளை வாங்கி விட்டு M - 16 துப்பாக்கிகளை வழங்கினார்.


*(தொடரும்)*



வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட - வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம் பாடப் - பாட்டின்
தாடுங் காளீ! சாமுண் டீ கங் காளீ!
அடிபடு பொருளின் அடிபடு கூடக் - களிக்
- சுப்பிரமணிய பாரதியார்



# ஐடியா!



ராஜபுரி காட்டின் மன்னன் சிங்கத்திற்கு கிழடு தட்டி விட்டது. எனவே, வலிமை குறைந்து விட்டது. முன்புபோல ஓடியாடி விலங்குகளை வேட்டையாட இயலவில்லை. அதனால் சிங்கத்திற்கு வயிறார உணவு கிடைக்கவில்லை. உணவுக்காக சிங்கம் ஒரு ஐடியா செய்தது. தனக்கு உடல்நிலை சரியாக இல்லையென்றும் மரியாதை நிமித்தம் ஒவ்வொரு விலங்கும் தன்னை வந்து சந்தித்து நலன் விசாரிக்க வேண்டும் என்றும் உத்தரவு போட்டுவிட்டு தனது குகைக்குள் படுத்துக் கொண்டது சிங்கம். சிங்கத்தின் அறிவிப்பை உண்மை என நம்பிய வன விலங்குகள் ஒவ்வொன்றாக சிங்கத்தின் நலன் விசாரிப்பதற்காகச் சிங்கத்தின் குகைக்குள் சென்றன.

குகைக்குள் வந்த விலங்குகளை ஒவ்வொன்றாக அடித்துக் கொன்று தின்று ஆனந்தமாகக் காலம் கழித்து வந்தது சிங்கம்.

ஒரு நாள் சிங்கத்தின் நலன் விசாரிப்பதற்கென்று சிங்கத்தின் குகை வாயிலை அடைந்தது நரி. குகை வாசலில் தென்பட்ட விலங்குகளின் காலடிச் சுவட்டைக் கண்ட நரிக்கு அச்சமாக இருந்தது. விலங்குகளின் காலடிச் சுவடுகள் குகைக்குள் சென்ற அடையாளத்தைக் காண்பித்தனவே தவிர, திரும்பி வந்த அறிகுறி புலப்படவில்லை. சிங்கத்தின் தந்திரத்திற்கு ஏராளமான விலங்குகள் பலியான விஷயத்தை நரி யூகித்துக் கொண்டது. குகை வாசலில் நின்றவாறே "சிங்க அரசே! தங்களது உடல்நிலை எவ்வாறு இருக்கிறது?" என உரத்த குரலில் நரி வினவிற்று.

குகைக்குள் இருந்தவாறே சிங்கம் உரத்த குரலில், "நரியாரே, என் உடல்நிலை மிகவும் மோசமாகிப் படுத்த படுக்கையாக இருக்கிறேன். ஏன் வெளியே நிற்கிறீர்? உள்ளே வாரும், என அழைப்பு விடுத்தது. "அரசே! குகைக்குள் சென்ற எந்த விலங்கும் திரும்பி வராததிலிருந்தும், தங்களது கம்பீ ரமான குரல் வளத்திலிருந்தும் தங்களது உடல் நலம் நன்றாக இருக்கிறது என்பது விளங்குகிறது. ஆகவே நான் சென்று வருகிறேன்," என்று கூறியவாறு ஓட்டம் பிடித்தது நரி.

நரியின் உஷார் நடவடிக்கையைப் பார்த்தீர்களா குட்டீஸ்? என்ன புத்திசாலித்தனம். இந்த மாதிரி புத்திசாலித்தனம் இருந்தால்தான் இன்றைய உலகை ஜெயிக்க முடியும். சரியா?

பாப்பா முரசு சிறுகதை

# ஆத்திசூடி

## பேதமை அகற்று

நீ மூடத்தனமான செயல்களையும் சிந்தனைகளையும் அறவே நீக்கிவிடு.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# குயிலே கூவி வா!



குயிலே குயிலே கூவி வா
குழந்தைகளோடு பாட வா!

மயிலே மயிலே ஆடி வா
மழலைகளோடு ஆட வா!

கிளியே கிளியே கொஞ்சி வா
கிள்ளைகளோடு கொஞ்ச வா!


முயலே முயலே ஓடி வா
முல்லைகளோடு ஓட வா!

பசுவே பசுவே மேய்ந்து வா
பால்தர மடியைக் கொண்டுவா!

காகமே காகமே கரைந்து வா
காலைப் பொழுதைக் கொண்டு வா!

# அதிசய உலகம்

## ஏமாறும் மயில்!



இந்தியா, மியான்மர், இலங்கை ஆகிய நாடுகளில் மட்டுமே மயிலினம் உண்டு. மயிலினத்தின் பரம விரோதி பூனை. புலி, சிறுத்தைக்கு மயில் இறைச்சி என்றால் ரொம்பவும் பிரியம். புலி, சிறுத்தை போன்ற விலங்குகள் வண்ணத் தோகை கொண்ட மயில்களைப் பார்த்ததும் அவைகளின் விழிகளையே இமை கொட்டாமல் பரிவுடன் பார்த்தே வசியப்படுத்திவிடுமாம். மயில் சுயநினைவை இழந்து சிலை போல் நின்றபடியே இருக்கும்போது அவை மயிலைப் பாய்ந்து கடித்து ருசி பார்த்துவிடும்.


## தண்ணீர் குடிக்காத மக்கள்!



பராகுவே நாட்டில் கைபிமெண்டி என்னும் பள்ளத்தாக்கில் வாழும் சென் என்னும் பழங்குடி இன மக்கள் தண்ணீர் அருந்துவதே இல்லை. காரணம் இங்குள்ள ஏரியில் உள்ள தண்ணீர் அதிக உப்பாக இருப்பதுதான்.

தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக இங்கு பயிராகும் சோளத்தில் இருந்து பீர் தயாரித்து அதையே தண்ணீருக்குப் பதிலாக அருந்துகிறார்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.06.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 647**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 645

**பரிசுக்குரியவர்:**
ராகுலன், தரம் - 06, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு - 15.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொட்டிகாவத்த. | எல்.பாரத், 122ஏ, ருவன்புர, ஹட்டன். |
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | எம்.ஷாம், 440/1/எச், ரமிவீர மாவதை வேலேவத்த, வெல்லம்பிடிய. |
| கி.சர்தசன், 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன். | கே.பிரசாந்தி, 89, பாபா பதி இல்லம், ரொசிட்ட வீடமைப்பு திட்டம், கொட்டகலை. |
| சாஜிதா நசார், பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12. | எஸ்.தேவிகா, கண்டி வீதி, குருநாகல். |
| திவாணி நவககுமார், தரம்3, 92ஏ, வட்டாரந்தன்னை வீதி, கண்டி. | செ.ருசாந்தினி, இல.28பி, குருமண்காடு, வவுனியா. |


# சில விடுகதைகள்

1. தாய் இனிப்பாள். மகள் புளிப்பாள். பேத்தி மணப்பாள். அவர்கள் யார்?
2. தொடாமல் தொடுவான்; காணாமல் காண்பான். அவன் யார்?
3. தொப்பித் தலையன், சுருக்கென்று குத்துவான். அவன் யார்?
4. பார்த்தால் பார்க்கும்; சிரித்தால் சிரிக்கும்; குத்திப் பார்த்தால் சிதறிப்போகும். அது என்ன?
5. சட்டையைக் கழற்றியதும் சட்டென்று உள்ளே போகும். அது என்ன?
6. பூவும் இருக்கும், பூவும் காயக்கும் - பூவை இருக்கப் பூங்கொம்பில்லை. அது என்ன?
7. நளனுக்குத் தூதானவர் நடைக்கு உவமையானார். அவர் யார்?
8. இருந்த இடத்தில் நகர்ந்தபடி இரவும் பகலும் சொல்வான். அவன் யார்?
9. உயர்ந்த மரத்தின் உச்சாணிக் கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுவான். அவன் யார்?
10. சின்னப்பூ, வண்ணப்பூ வாசத்தால் நாகத்தையே வரவழைக்கும் பூ. அது என்ன?

**விடைகள்**

1. பால், தயிர், நெய்
2. காற்று
3. முள்
4. கண்ணாடி
5. வாழைப்பழம்
6. நெற்கதிர்
7. அன்னம்
8. கடிகாரம்
9. அணில்
10. தாழம்பூ





**சீனாவில்** நடைபெற்று வரும் கான்ட் சினிமா விருது வழங்கும் நிகழ்ச்சி கடந்த வாரம் ஆரம்பமானது. இதில் பிரதம அதிதிகளை வரவேற்க, விரிக்கப்பட்டிருந்த சிவப்பு கம்பளத்தை புகைப்படக் கலைஞர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கும் போது திடீரென எங்கிருந்தோ அநாதையாக்கப்பட்ட சின்னஞ் சிறிய பருந்து ஒன்று பறந்து வந்து அக் கம்பளத்தில் தானும் ஒரு பிரதம அதிதி போல கலந்து கொண்டதாம். பிரதம அதிதிகளைப் புகைப்படம் எடுப்பதை விட்டு விட்டு, அப்பருந்து குஞ்சினையே புகைப்படக் கலைஞர்களின் கமராக்கள் நோக்கியதாம்.




**ருமேனியாவில்** இருக்கும் பிரதான ஆறு ஒன்றில் திடீரெனப் பெருகிய வெள்ளப்பெருக்கினால் பலர் உயிரிழந்தனர். இதனால் இந்த ஏரி மாசுபடுத்தப்பட்டது. படத்தில் இருக்கும் இருவரும் இறந்த தம் சொந்தங்களைத் தேடி அவ் ஆற்றில் செல் கிறார்கள்.




**உலகம்** முழுவதும் மர நடுகை தினத்தை நினைவு படுத்துமுகமாக பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. இங்கோ இத்தாலியின் பாரம்பரிய சங்கீத குழு வொன்று மர நடு கையை ஊக்குவிக்கு முகமாக குதிரை வண்டியில் பூட்டப்பட்ட மிக நீண்ட மரக்கட்டை ஒன்றில் உட்கார்ந்து இசைக்கருவிகளை வாசித்தபடி ஊர்வலமாகச் செல்கிறார்களாம்.




**வித்தியாசமாக** எதையாவது செய்வதில் அமெரிக்கர்கள் ஆர்வம் உடையவர்கள். அந்த வகையில் இங்குள்ளதும் அப்படி ஒன்றே. அமெரிக்காவின் மெர்லின் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு அமைப்பு வித்தியாசமாக தமது வளர்ப்பு பிராணிகளை முத்தமிடும் போட்டி ஒன்றை நடத்தினார்கள். இதில் சரியாக முத்தமிடுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது. பரிசு பெற்ற நாயும் மற்றும் அதன் வளர்ப்பாளரும் தான் படத்தில் காணப்படுகின்றனர்.

# ரசிப்பின் எல்லை

**தற்போது** அனைவரின் கனவத்தையும் சந்தேகமில்லாமல் ஈர்த்து வருவது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகளின் போக்குத்தான். அந்த வகையில் இங்குள்ள மார்ட்டின் கேத் எனும் கால்பந்து ரசிகர், தனது ரசிப்புத் தன்மையை வெளிக்காட்டியுள்ள விதமே இது. கிட்டத்தட்ட 200 மீற்றர் நீளத்திற்கு 384 கால்பந்து போட்டிகளின் போது எடுக்கப்பட்ட படங்களை அடுக்கி கண்காட்சி செய்திக்ருகிறார்.




## முகப்பில் :- பாவனா



பத்மப்ரியா
சத்தம் போடாதே

## பாவனா மோகம்

**கேரள** நடிகைகள் அவ்வப்போது தமிழ்ப்பட உலகை கலக்குவது வழக்கம். 'ஆட்டோகிராப்' மூலம் தமிழ் ரசிகர்களை ஒட்டுமொத்தமாக ஈர்த்தார் கோபிகா. அவருக்குபின் 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி'யில் நடித்த அசின் கனவுக் கன்னியானார். பிறகு 'ஐயா'வில் நடித்த நயன்தாரா பேசப்பட்டார். இப்போது 'சித்திரம் பேசுதடி' படத்தில் நடித்த பாவனா ஜுரம் கோடம்பாக்கத்தில் பரவியுள்ளது. 'கிழக்கு கடற்கரை சாலை', 'நான் கடவுள்', 'கூடல்நகர்', 'வெயில்' ஆகிய படங்கள் கிடைத்துள்ளன.


ரஜினி
சிவாஜி



## வெளியே சொல்லத் தடை -ஸ்ரேயா!

**ரஜினி** நடிக்கும் 'சிவாஜி' படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. தற்போது படக்குழுவினர் பாடல் காட்சி எடுக்க வெளிநாடு சென்றுள்ளனர். இந்தப் படத்தில் ரஜினி ஜோடியாக ஸ்ரேயா நடிக்கிறார். அவர் 'சிவாஜி' பட அனுபவங்கள் பற்றிக் கூறியதாவது :-

"ரஜினி, ஷங்கர் படத்தில் நடிப்பதால் நான் அதிர்ஷ்டசாலி. தெலுங்கில் சிரஞ்சீவி, பாலகிருஷ்ணா, வெங்கடேஷ் உள்ளிட்ட முன்னணி ஹீரோக்களுடன் நடித்துள்ளேன். ரஜினியுடன் நடிக்க விரும்பினேன். அது நிறைவேறியுள்ளது. நான் ரஜினியின் தீவிர ரசிகை. ஷங்கர் பிரமாண்ட படங்களை எடுப்பவர். அவர் படங்களைப் பார்த்து நான் ஆச்சரியப்படுவதுண்டு. அவர் இயக்கத்தில் நடிக்கவும் விரும்பினேன். இரண்டும் ஒரே படத்திலேயே கிடைத்து விட்டது. ரஜினியுடன் நடிக்கப் பயமாக இருந்தது. ஒரு பாடல் காட்சியில் ரொம்ப ஜாலியாக பாடி ஆடினார். அவரிடம் நிறையக் கற்றுக் கொண்டேன். 'சிவாஜி' படத்தின் கதை பற்றி வெளியே சொல்லக்கூடாது என்று நடிகர், நடிகைகளிடம் ஷங்கர் கூறியுள்ளார். ஷங்கர் படம் என்றால் ரகசியம் இருக்கும். இப்படத்திலும் அது கடைபிடிக்கப்படுகிறது.


'சிவாஜி' படப்பிடிப்பு ரகசியமாகத்தான் நடத்தப்படுகிறது.

நடிகைகளுக்கு கிளாமர் அவசியம். சாதாரண ரசிகர்கள் மனதில் இடம் பிடிக்க கிளாமராகத்தான் நடித்தாக வேண்டும். அது தவறு இல்லை."

இவ்வாறு ஸ்ரேயா கூறினார்.


பரத் - ஆர்யா
பட்டியல்

## சினி விசிட்



### அஜீத் 'நான் கடவுள்' படத்திலிருந்து விலகல்

**அஜீத்குமார்** நடித்த திருப்பதி படம் ரிலீஸ் ஆகி 45 நாட்களுக்கு மேல் ஆகிறது. இந்தப் படத்துக்குப் பின் டைரக்டர் பாலா இயக்கும் 'நான் கடவுள்' படத்தில் அஜீத் நடிக்க முடிவானது. இதற்காக தனது கெட்டப்பை அஜீத் மாற்றினார். தலையில் நீளமாக முடியும் வளர்த்தார். ஆனாலும் படப்பிடிப்பு தொடங்கவில்லை.

இதையடுத்து அந்தப்படத்தில் இருந்து அஜீத் விலகினார். பாலாவுக்கும் அஜீத்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் செய்தி பரவியது.

இது பற்றி அஜீத்குமாரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது :-

"'நான் கடவுள்' படத்தில் இருந்து விலகியது உண்மைதான். படப்பிடிப்பு மே 1ஆம் திகதி தொடங்குவதாக இருந்தது. ஆனால் பாலா தரப்பில் இருந்து இதுவரை படப்பிடிப்பை தொடங்குவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இனிமேலும் என்னால் காத்திருக்க முடியாது. ஆனாலும் சில பத்திரிகைகளில் வெளியாகி இருப்பது போல எங்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை. தயாரிப்பாளர் மோகன் நடராஜன் படத்தில் நடிக்க பேச்சுவார்த்தை நடக்கிறது. விரைவில் அதற்கான அறிவிப்பு வரும்."

இவ்வாறு அவர் கூறினார்.





பிரசாந்த் - பூஜா
தகப்பன்சாமி

## ஜாக்கெட் அணியாமல் அரை நிர்வாணத்தில் நடித்த ஐஸ்வர்யா ராய் படம்

**ஐஸ்வர்யா** ராய் முதல் முறையாக வங்காள மொழி படமொன்றில் ஜாக்கெட் அணியாமல் அரை நிர்வாணத்தில் நடித்துள்ளார். படத்தில் அவருக்கு இளம் விதவை கேரக்டர். படம் முழுக்க ஜாக்கெட் அணியாமல் வெள்ளைச் சேலையில் வந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியில் ரேகா, ஜீனத் அமன், ஷபனா ஆஸ்மி, மல்லிகா ஷெராவத், மேக்னா நாயுடு போன்றோர் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் ஆபாசமாக நடித்துள்ளனர். அவர்களை மிஞ்சும் வகையில் ஐஸ்வர்யா ராய் கவர்ச்சியாக இருப்பதாக பட உலகினர் ஆச்சரியப்படுகின்றனர்.

இளம் வயதில் கணவனை இழந்து விதவையாகி, பிறகு தோழியின் கணவனுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் கதாபாத்திரத்தில் வெளுத்துள்ளார். படத்தைப் பார்த்த தணிக்கைக் குழுவினர் ஐஸ்வர்யா ராயா இது என்று கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். சான்றிதழ் அளிக்கவும் மறுத்தனர்.

படத்தின் இயக்குநர் ரிதுபர்னகோஸ் போராடி டிரிபுனல் வரை சென்று தணிக்கை அனுமதி பெற்றுள்ளார். இந்தப் படத்தை வேறு எந்த மொழியிலும் வெளியிடக் கூடாது என்று ஐஸ்வர்யா ராய் நிபந்தனை விதித்திருந்தார். அதையும் மீறி இப்படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு 'ஐஸ்வர்யா ராய் ஒரு பேரழகி' என்ற பெயரில் ஜூன் மாதம் வெளியாகிறது.

ஹாலிவுட் படத்தில் மேலாடையின்றி நடிக்க மறுத்த ஐஸ்வர்யா ராய் வங்காள மொழி படத்தில் அரை நிர்வாணத்தில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


நவ்தீப் - ஷீலா
இளவட்டம்




## போரை நிறுத்தும் 'காதல் கடிதம்'

**போரில்லாத** தீவொன்று வேண்டும். அங்கு வெடிகுண்டு பூச்செண்டாய் மாறவேண்டும். இது இலங்கையில் நடக்க வேண்டும். என்பதே முகேஷின் அவா. இதற்கு அமைவாகவே இலங்கையில் எடுக்கப்பட்ட காட்சிகளில் இலங்கை தமிழர்களையும், சிங்களவர் களையும் கணிசமான அளவு இணைத்தே எடுக்கப்பட்டிருக்கின்றது. அதைப் போன்றே திரைக் கதையிலும் அரசியல் சாராமல் இலங்கையின் போர் எந்தளவு கொடுமை யானது என்பதை திரைக்கதையின் ஊடாக நேர்த்தியாகக் கூறியிருக்கின்றார்.

இந்தியத் தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் ஓர் உறவுப் பாலமாக அமையப்போகிறது 'காதல் கடிதம்' இது காதலைத் தாங்கி வரும் கடிதம் மட்டுமல்ல; ஒரு சமூகத்தின் இன்ப துன்பங்களைத் தாங்கி வரும் கடிதம். இதை 'காதல் கடிதம்' திரைப்படத்தைப் பார்ப்பதன் ஊடாக உணர முடியும்.

# சுவலட்சுமி தங்கை

**'கோக்கி'** படத்தில் கரண் ஜோடியாக வந்தவர் சஞ்சனா. திறமையாக நடித்து அழகுப் பதுமையாய் இரசிகர்கள் மனதில் நிற்கிறார். அவரது கிளைமாக்ஸ் நடிப்பு முன்னணி நடிகைகளுக்கு சவால் விடுவதாக இருந்தது. இவர் வேறு யாருமில்லை, சுவலட்சுமியின் தங்கை.



ரஜினி
சிவாஜி




ரமேஷ் - மும்தாஜ்
ஜெர்ரி

## நட்புக்காக த்ரிஷா போட்ட குத்தாட்டம்!

**நட்புக்கு** மரியாதை கொடுத்து பங்காரம் தெலுங்குப் படத்தில் ஒரு குத்தாட்டம் போட்டுள்ள்ார் த்ரிஷா. ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு திரையுலகில் உச்ச நட்சத்திரமாக இருந்தவர் த்ரிஷா. இப்போது இரண்டு ஃபீல்டிலும் சற்றே இறங்கு முகம். இருந்தாலும் த்ரிஷா கையில் வலுவான சில வாய்ப்புகள் இருக்கத்தான் செய்கின்றன.

தமிழில் தனக்குப் பிடித்த விக்ரமுடன் பீமாவிலும், தெலுங்கில் சிரஞ்சீவியுடன் ஸ்டாலின் படத்திலும் அசத்தி வருகிறார்.

இடையில் இயக்குநர் தரணியிடமிருந்து த்ரிஷாவுக்கு ஒரு போன். வர முடியுமா என்று கேட்டு. தரணி மீது அதீத மரியாதை வைத்திருப்பவர் த்ரிஷா. இருவருக்கும் இடையே நல்ல நட்பும்கூட.

இதனால் தரணியைப் போய்ப் பார்த்தாள் த்ரிஷா. அவரிடம், நான் இயக்கும் பங்காரம் தெலுங்குப் படத்தில் ஒரு பாட்டு இருக்கிறது. அதற்கு நீங்கள்தான் ஆட வேண்டும் என்று தரணி உரிமையுடன் கேட்டுள்ளார்.

இந்தப் பங்காரம் படத்தின் நாயகி யார் தெரியுமா? மினரல் வாட்டர் கேட்டு குற்றாலத்திலிருந்து ஓடிப் போனாரே நிலா... அவர்தான்.

சிங்கிள் பாட்டு, அதுவும் தன்னை விட ஜூனியரான நடிகையின் படத்தில் என்றால் நிச்சயமாக சீனியர் நடிகைகள் யாருமே ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் த்ரிஷா உடனே ஓ.கே.சொன்னாராம்.

சொன்னதோடு நிற்காமல், படு கிளாமராக அந்தப் பாட்டிற்கு ஆடியும் கொடுத்தாராம். இதனால் தரணிக்கு ரொம்பச் சந்தோஷமாம். படத்தில் நிலாவை ஏகப்பட்ட காட்சிகளில் கிளாமராக நடிக்க வைத்தும் கூட, அது போதாது என்பதால்தான் த்ரிஷாவை கூப்பிட்டு குத்தாட்டத்தில் ஆட வைத்தார் தரணி.


இவ்வளவு சிரமப்பட்டும் பங்காரம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை என்று தெலுங்குத் திரையுலகினர் முணுமுணுக்கிறார்கள்.

இப்படத்தின் உரிமையைத்தான் தமிழில் தயாரிக்க விஜய் வாங்கி வைத்திருந்தார் என்பது சைடு நியூஸ்.

இன்னொரு செய்தி : மூத்தவர் வெங்கடேஷுடன் லட்சுமி படத்தில் நடித்தார் நயன்தாரா. இதையடுத்து நாகார்ஜுனோடு இப்போது நடித்து வருகிறார்.

இதைத் தொடர்ந்து சிரஞ்சீவி, த்ரிஷா நடிப்பில் உருவாகி வரும் ஸ்டாலின் படத்தில் சூப்பர் குத்துப் பாட்டுக்கு ஆடுகிறார். படு கிளாமராக இந்தப் பாட்டை படம் பிடிக்கிறார்களாம். இந்தப் பாட்டு தனக்குப் பெரிய பிரேக்கைத் தரும் என்று பரவசமாக இருக்கிறார் நயன்தாரா.

இந்தப் பாட்டு ஹிட் ஆனால் சம்பளத்தையும் குண்டக்க மண்டக்காவாக ஏற்றி விடும் முடிவில் உள்ளாராம்.



விக்ராந் - மாளவிகா

# ஒரு ஆட்டத்துக்கு 15 லட்சம்

**'கறுப்புத்தான்** எனக்கு பிடிச்ச கலரு' என்று "வெற்றிக்கொடி கட்டு" படத்தில் ஆடிப்பாடி கலக்கிய மாளவிகா, பிறகு வாய்ப்பின்றி சும்மா இருந்தார். ஒன்றிரண்டு படங்களில் சிறு வேடங்களில் தலை காட்டினார். வருமானமும் படுத்தது.

இப்போது 'சித்திரம் பேசுதடி' படத்தில் 'வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்' பாட்டுக்கு அவர் போட்ட ஆட்டம் பட்டிதொட்டி எங்கும் மீண்டும் கலக்கி உள்ளது. மாளவிகா தொடர்ந்து ஒரு பாட்டுக்கு ஆட சம்மதித்துள்ளாராம். அதற்கு சம்பளம் பதினைந்து லட்சம் ரூபாய் கேட்கிறாராம். 'வாளமீன்' ஆட்டத்துககு இவர் வாங்கிய சம்பளம் மூன்று லட்சம்தான்.

# ரஜினிக்கு பிரபுதேவா நடன ஒத்திகை!

**ரஜினிகாந்த்** - ஸ்ரேயா நடிக்கும் 'சிவாஜி' பட சூட்டிங் தீவிரமாக நடக்கிறது. ஐதராபாத் பிலிம் சிட்டியில் முதல் கட்ட படப்பிடிப்பு நடந்தது. சென்னையிலும் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. ஏ.வி.எம்.ஸ்டுடியோவில் பிரமாண்ட செட் போட்டு சண்டைக்காட்சி எடுத்தனர். சென்ட்ரல் ரெயில் நிலையம், மீனம்பாக்கம் விமான நிலையம் பகுதிகளிலும் படப்பிடிப்பு நடந்தது.

ரகசியமாக 'சிவாஜி' படப்பிடிப்பை டைரக்டர் ஷங்கர் நடத்தி வருகிறார். கதை, காட்சி அமைப்புகள் வெளியே தெரியாதபடி பாதுகாக்கப்படுகிறது. 'பில்லா' படத்தில் இருந்ததைப் போல இளமைத் தோற்றத்தில் ரஜினி இதில் நடிக்கிறார்.

பாடல் காட்சிகளை வெளிநாடுகளில் படமாக்க முடிவு செய்துள்ளனர். முதல் கட்டமாக ஸ்பெயினில் பாடல் காட்சி படமாகிறது. இதற்காக லண்டனில் இருந்து பாலே நடனக் கலைஞர்கள் ஸ்பெயினுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். சென்னையில் இருந்தும் நடனக் குழுவினர் சென்று இருக்கிறார்கள். இந்தப் பாடலுக்கான நடனத்தை நடிகர் பிரபுதேவா அமைத்துள்ளார். ஏ.வி.எம். ஸ்டுடியோவில் ரஜினிக்கு அவர் நடன ஒத்திகை அளித்தார். பலமணி நேரம் இந்தப் பயிற்சி நடந்தது.



தனுஷ்
புதுப்பேட்டை




நவ்தீப் - அபர்னா
நெஞ்சில் ஜில் ஜில்



ரஜினி
சிவாஜி

# எடை குறைக்கும் மும்தாஜ்

**மும்தாஜ்** எடையைக் குறைத்து வருகிறார். இதுபற்றி அவரிடம் கேட்டபோது: சொன்னவை. எடையைக் குறைத்துக் கொண்டிருக்கிறேன். முன்பு எழுபது கிலோ எடை இருந்தேன். இப்போது ஐம்பத்தி ஒன்பது கிலோவாகக் குறைத்து விட்டேன். இன்னும் குறைப்பேன். அதற்காக ஜாக்கிங், வாக்கிங், யோகான்னு செய்றேன். உணவிலும் கட்டுப்பாடா இருக்கேன். இப்போது என் வயது இருபத்தைந்து. ஒரு பாட்டுக்கு ஆடறதை விட நல்ல கேரக்டர்களில் நடிக்க விரும்புகிறேன். 'ஜெர்ரி' படத்தில் நடிகையா வந்தேன். நல்ல வரவேற்பு இருந்தது. வீராசாமியில் என்ன கேரக்டர் பேசப்படும். படத்தில் கதாநாயகி நான்தான். தியேட்டரில் பிளாக்கில் டிக்கெட் விற்கிறவளா அதில் நடிக்கிறேன். என் கதாபாத்திரம் பேசும்படி இருக்கும்" என்றார் மும்தாஜ்.



மும்தாஜ்

# சிம்ரன் நீக்கம்

**நடிகை** சிம்ரன் தமிழகத்தின் தேர்தல் பிரசாரம் முடிந்த கையோடு டெல்லி திரும்பி விடுவார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் தெலுங்கு நடிகர் ராஜசேகர் தனக்கு ஜோடியாக தெலுங்குப் படத்தில் நடிக்க சிம்ரனை ஒப்பந்தம் செய்தார்.

மீண்டும் கதாநாயகியாகும் மகிழ்ச்சியில் சிம்ரன் இருந்தார். தெலுங்குப் பட உலகத்தினர் பங்கேற்க, இதற்கான பட பூஜையும் சமீபத்தில் நடந்தது. 'லயன்' என்ற மலையாள படத்தின் மறுபதிப்புத்தான இந்தப் படம். மலையாளத்தில் திலீப்பும், காவயா மாதவனும் நடித்துள்ளனா.

படப்பிடிப்பு தொடங்கும் வேளை, சிம்ரனை படத்தில் இருந்து நீக்கி விட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. சற்று குண்டாகி இருபபதால் கதாநாயகி வேடததுககு அவர் பொருததமாக இலலை என்று ராஜசேகர் கருதுகிறாராம். வேறு நாயகி தேடுகிறாகள்.



# தேன் கிண்ணம்

## கவிதையின் கண்ணீர்

ஒரு
கவிதைத் தொகுப்பு
கண்ணீர் வடிக்கிறது
நீ
முன்னுரை எழுத
முன்வராததால்...

எல்லோரும்
உறங்கும் ராத்திரியில்
என்னை மட்டும்
விழித்திருக்கும்படி
விதி எழுதப்பட்டுள்ளது!

உன் புன்னகையோடும்,
மௌனத்தோடும்
ஒப்பிட்டால்
மின்னலும், இடியும்
சாதாரணம்.

ஒரு கவலம்
உணவும்
உண்ண முடியவில்லை
கிடல்முழுவதும்
கவலைகளின்
நிரப்பத்தில்

மனம் முழுக்க
ரணம்
இப்போது...
எனக்கு அவசியம்
மரணம்.

*–சிவ்னாஸ் தௌபீக், ஹுஸைனியா புரம்.*

## நட்சத்திர நாயகி...!

விஷமம்
கக்கும்
இதலிடை
ஈரப்பதன்...!

மோகம்
கொஞ்சும்
கூந்தல்
குறுக்குவெட்டு...!

காமம்
கொள்ளும்
கருத்த +
கவிமலை...!

வீரநடை
புளகாங்கிதமாகும்
பாதப்பகு +
வதை...!

தனிமையை
கோதும்
விரல்
வீச்சருவாள்...!

வார்த்தை
தடுமாறி
வெட்கித்து
தலைகுனிந்து
கம்பனின்
பாதம்
துடைக்கும்...!

தாவணி
அசைவில்
தாஜ்மஹால்
இடிந்து விழும்...!

தேன் சுரக்கும்
தேவதை
மயக்கம்
கீழை தேசத்து
கிளியோபட்ரா -
என்
கனவுகளுக்கு
முத்தமிடுகிறாள்...!

*–நஸீம்ரூமி.*

## மரமிவன்

அவளின் பிரிவெனும்
மாடேறியென்
இன்பமெனும்
நுனிப்புல்லையல்லவா
மேய்ந்து போனது
அதனால் பிறந்த
வேதனையெனும்
ஆடுகள்
இலட்சியச் செடிகளையும்
மேய்ந்து ஏப்பமிட்டது.

முற்கள்தானே என்னாடை
தாடிதானே என் காதல்
சோகம் தானே என் சுவாசம்
வேதனைதானே என்னுலகம்.

இதயத்துடிப்பிலும்
உன்னோசை கேட்கிறதே!

எத்தனையோ ஆசைகள்
என்னுள்ளிருக்கிறது
பளிங்குப் பாத்திரமானவனை
பாராங்கல்லில் போட்டுடைத்தது
புண்ணியமா?

குண்டூசு ஒரு கண்ணில்
குத்தும் வேளையில்
உனக்காய்
ஆனந்தக் கண்ணீரில்
ஓர் கண் செயற்படும்

கனிபயக்காமரமிவன்
கல்லடி வாங்குகிறான்.

*–அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.*

## தவிப்பு

நம்பிக்கையும்
நாளை
வீண் போகக்
கூடும்!

ஒன்றாய்
இணைவோமா?
மனசில் ஐயம்
இப்படிதான் தினம்
அவதிப்படுகிறது!

சோதனைப் பெயரில்
சோகங்கள்
உருமாறி...
ஏமாற்றங்களை
நம் மீது
திணித்தப்படி!

உன்னை
நினைத்து
உள்ளம் குமுறி
எரிகிறது!
நிஜங்களை
துறந்து
கனவுகள்
சுமந்தப்படி...!!

கண்மணி...!
எனக்கென நீ
நிச்சயமா?

*–ஏ.ஆர்.எம்.நதார், ஜின்னாநகர்.*

## எப்போது கிடைப்பாள்

அவள் பார்வை ஒன்றே
போதும், மது
போதை தலைக்கு ஏறும்
பொன்னகை தோற்றுப்போகும்
அவள்
புன்னகை செய்யும் போது
பட்டு உடலைத் தொட்டால்,
மென்மை
பஞ்சும் கூட அஞ்சும், இள
மொட்டு விரியும் பருவம்,
மருவ
மோக மூட்டும் உருவம்
அவள்
வட்ட வதன அழகு, முழு
மதியைக்கூட பழிக்கும். அவள்
கட்டி முடித்த கூந்தல்
கருமேகம் தவழ்ந்த பாங்கு
அவள்
சங்கு கழுத்தில் ஒரு
தங்கச்சரடு கட்ட, எங்கே
எனக்கு அவள்
எப்போது வந்து கிடைப்பாள்?

*–கவிக்குயிலன், சேனையூர் – 06.*

## நீ என் கவிதை...!

விரட்டும் விழிகளுள் அகப்பட்டு
விலக முடியாமல்
சூரிய பார்வைபடாத மொட்டுப்போல்
தவிக்கிறேன்

உன் இம்சைக்குள் சிக்குண்டு
தள்ளாடும் என் இதயம்
மலர்களில் தைத்த முட்களாகி
விழியால் குருதி வடிக்கின்றது.

உள் உயிர்சுவடுகளில்
உயிர் வாழ்ந்து கொண்டிருந்த என்னை
ஓவியத்தில் வெளியான ரசனையாக்கி
மாற்று வித்தை செய்கிறாய்.

துன்புறுத்தும் இரவுகளில்
தாலாட்டும் உன் கனவுகளையும்
திசைமாறிப் போன இவ்வுலகில்
தடைதாண்டும் என் பயணங்களையும்
பேசும் மௌனத்தால் கொல்கிறாய்

காகிதங்களைக் கசக்கி வீசும்
என் கவிதையே
என் காதலை எப்போது எங்கே
வாழவைப்பாய்.

*–வி.முகிலன், நெடுந்தீவு கிழக்கு.*

## நான் கம்பனாயிருந்தால்

கம்பன் எழுதாத
ஆனால் கட்டாயம்
எழுதியிருக்க வேண்டிய
பெருங்காப்பியம் நீ...

மெல்லினம் பாடும்
ஒரு குற்றால ஓசையை
தாவணிக்குள்
பூட்டி வருவாய்...

உன் பெயர்
மூன்றெழுத்தாலான
ஒரு
சிலப்பதிகாரம்...

உன்
கனிவிழியைக் கண்டால்
க்வி மொழிகள்
கலவரம் செய்யும்

எட்டு உலக அதிசயங்களையும்
சம விகிதத்தில்
கரைத்தெடுத்த
அதி
அதிசயம் நீ...

உன் சுவாசத்தில்
சகவாசம் கொள்ள
சற்று
அவகாசம் கொடு...

மரணம் கூட
எனக்கொரு
ஜனனம் தான்
என
பாடப் போகிறேன்...

உனக்கொன்று
தெரியுமா...
நல்லவேளை
நான் கம்பனாகவில்லை.

ஆகியிருந்தால்
கம்பன் வீட்டு
கட்டும் தறியும்
'அவள்' பெயர் பாடும்
என்று
அச்சேறியிருக்கும்...

*–அ.ந.அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*இந்திய தமிழ் திரையுலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் திரையுலகத்தில் காலடி வைத்து தன் புகழை உயர்த்திக் கொள்ளத் துடிப்பவர்கள் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதையில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

*முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.*

## சினேகிதியே...

விடலைப் பருவம் தொடக்கம்
விட்டுப்பிரியாது இதயத்துடன்
ஒட்டி வந்த உறவு - உன்
பிரிவினால் என்னிதயம் - இங்கே
ஆற்றுவாரின்றி அழுகிறதடி...

எவ்வளவு இனிமையான நாட்கள்
நாம் பழகிய அந்தப்
பள்ளிப் பருவம்
பசுமரத்தாணிபோல் - என்
நினைவுகளில் இன்னும் இன்னும்
எங்கே சென்றாய் - உன்
நினைவுகளுடன் காத்திருக்கிறேன்
என்னை மறந்து
நீ வரும் நாளுக்காய்...

*–அனீஸா இப்றாகீம், நிந்தவூர் – 13.*

## காதல் யாகம்

அதன் காதல் மொழி
காமத்தை வரவழைக்க
இருவரும் ஓருடலாக
உயிரியல் யாகம் செய்து
இன்பத்தின் நடுவே
இறுமாப்புக் கொண்டது.

பிரசவிக்க முடியாத
யாகவேள்வியின்
நெருக்குவாரங்களில்
தமக்குள் மகிழ்ந்து பேசிய
வார்த்தைகள்
மன நிறைவைத் தந்தது என
காதல் பேசியது.

கண்ணிமைக்கும்
பொழுதுகளில்
உந்தன் முத்தான சிரிப்பழகு
என் கண்ணெதிரே தோன்றி
மறைகின்றது என காதல்
உணர்த்தியது...

என்னிதய பூமியில்
பூஜிக்கும் ஒவ்வொரு
நாளிலும் - நீ
புதிதாய் புதுப்பிறப்பெடுத்து
என்னியலைக் கவருகிறாய்
என்னவளே...!

*–டானியல், (யாழ்ப்பாணம்) கி.பல்கலைக்கழகம் இலங்கை.*

## புயலான தென்றல்

எங்கே பிறந்தாயோ
தென்றலே - இங்கும்
அங்கும் உலவுகின்ற
தென்றலே
தங்கு தடையின்றித்
தென்றலே - ஒரு
தங்கு தடையின்றித்
தென்றலே - என்னைத்
தழுவித்தாலாட்டும்
தென்றலே - கால்
இன்றித்தரையில் வரும்
தென்றலே
நுரையீரல் தழுவுகின்ற
தென்றலே
பொங்கி வரும் போது
தென்றலே - நீ
பொங்கி வரும் போது
தென்றலே - பெரும்
பங்கம் தருவதென்ன
தென்றலே.

*–இந்திரன்.*

## மழையே...

மழையே
நீ வருவாய் என
தினம் தினம்
எதிர்பார்த்து
காத்திருக்கின்றேன்!

நீ வந்தால்
என்னவள்
குதித்து
விளையாடுவாள்
அப்பொழுது ஒரு
ஓரமாய் நான்
நின்று ரசிப்பேன்
உன்னோடு
விளையாடும்
என்னவளை!

அந்த மேகமே
எனக்காகத்தான்
உன்னை
அனுப்புகின்றனவா?
நீ விழும்
ஒவ்வொரு துளியும்
என் மனக்கதவை
தட்டுகின்றது!
நீ தினமும்
வர வேண்டும்
வருவாயா?

## ஏங்குகிறேன்!

உன்னை
எப்பொழுது
கண்டேனோ
அன்று முதல்
நான்
என்னிடம்
இல்லை
உன்னால் பசி,
உறக்கம் ஏன்
நிதானத்தைக்
கூட இழந்தேன்!

எனக்குள் நானே
சிரித்துக்
கொள்கின்றேன்!
எனக்குள்ளே
ஏதேதோ
பேசுகின்றேன்
இதெல்லாம்
உன்னாலடா!


நான் எதற்கும்
ஏங்கியதில்லை
உன்னைக்
கண்ட பின்
நீ எனக்கு
கிடைக்க
வேண்டும் என
ஏங்குகின்றேனடா!

உண்மையில்
காதல் என்பது
ஒரு நோய்
அது எப்போ
வரும்,
போகும் என
புரியாது
என்னுள்
வந்துவிட்டது
அந்தநோய்!

என்னை
குணமாக்குவாயா?
நீ எனக்கு
கிடைப்பாயா?
சொல்லடா
சொல்!!!


## பெரிய புத்த கோயில்

புத்த மதம் இன்று பல நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது உண்மைதான். புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கென்று ஒரு தனித்துவ வரலாறு வைத்திருக்கிறார்களாம். அந்த வகையில் இவ்வரலாறுகள் எல்லாவற்றையும் கூறும் மிகப் பெரிய புத்த கோயில் ஜாவாத் தீவுகளில் உள்ள யோர்க்யோ கார்த்தா எனும் இடத்தில் அமைந்துள்ளதாம். இது கிட்டத்தட்ட 60,000 சதுர மீற்றர் பரப்பளவுடையதாம்.




## பெரிய சந்தைத் தொகுதி

உலகில் மிக பாரிய சந்தைத் தொகுதி எங்குள்ளது தெரியுமா? கனடா நாட்டில் உள்ள மேற்கு எட்மண்ட் சந்தையாகும். இது கிட்டத்தட்ட 492,386 சதுர மீற்றர் பரப்புளவுடையதாகும். இது கிட்டத்தட்ட கனடிய டொலர் மதிப்பில் 1.2 பில்லியன் செலவில் கட்டப்பட்டதாம். இதில் கிட்டத்தட்ட 800 கடைகள் காணப்படுகின்றனவாம். இக் கடைத் தொகுதியினை சுற்றிப் பார்க்க புதியவர்களுக்கு ஒரு நாள் முழுதும் தேவையாம்.



## பெரிய இந்துக் கோயில்


இந்துக் கோயில்களுக்கு பெயர் பெற்றது இந்தியாதான். உலகிலேயே மிகப் பெரிய இந்துக் கோயில் இந்தியாவில் தான் உள்ளதாம். எது என்று யோசிக்கிறீர்களா? இந்தியாவின் திருச்சிராப்பள்ளி பிரதேசத்தில் காணப்படும் ஸ்ரீ ரங்கநாதர் கோயிலாகும். இது கிட்டத்தட்ட 156 ஏக்கர் பரப்பளவை கொண்டதாகும்.






# இளம் பெண்களின் தொலைநோக்குப் பார்வை

**திருமண** வயதைத் தொட்டு நிற்கும் இன்றைய இளம் பெண்கள், தங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி வெறும் கனவு காண்பதோடு மட்டும் நின்று விடாமல், தம் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதைத் தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் நோக்கும் அணுகுமுறை நம்மை வியப்படைய வைக்கிறது.



படித்த இளம் பெண்கள் தம் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள்.

முன்பெல்லாம் போல் கண்ணை மூடிக் கொண்டு பெற்றோர் காண்பிக்கும் வரனை மண முடிக்க இவர்கள் தயாராக இல்லை.

அதே நேரம் பெற்றோர் என்றும் தம் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பார்கள், நமக்கு நல்லதைத்தான் செய்வார்கள் என்ற அடிப்படை எண்ணங்களுக்கு உரிய மதிப்பளிக்கவும் இவர்கள் தவறுவதில்லை.

பெரும்பாலும் உயர் கல்வி பெற்று, பன்னாட்டு நிறுவனங்களிலும் (MNC), வங்கிகளிலும் பணி புரியும் பெண்கள் இளம் வயதிலேயே உயர் பதவியையும் எட்டி விடுகிறார்கள்.

கை நிறையச் சம்பளம், பெற்றோரின் பாதுகாப்பு என்ற நிலையில் 25 வயதிற்கு முன் திருமண பந்தத்தில் ஈடுபட அவ்வளவாக விரும்புவதில்லை.

மணவாழ்க்கையை நல்ல விதமாக நடத்த, தாம் செய்யும் பணிகளிலும் ஒரு நல்ல நிலையை அடைந்த பின்புதான் திருமணம் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

தான் ஒரு நல்ல நிலையில் இருந்தால் தன் வாழ்க்கையை நல்லபடியாக நடத்தும் அதே நேரம், தேவைப்பட்டால் பெற்றோருக்கும் உதவியாக இருக்க முடியும் என்றும் நினைப்பதில் தவறில்லையல்லவா?

ஆனால் திருமணத்திற்கு முன்னால் எப்படி ஒருவரை முழுமையாக அறிந்து கொள்வது? அதற்கும் உடனே பதில் வருகிறது. உடன் பழகும் நண்பர்கள், உடன் பணிபுரிபவர்கள் என்று பலருடன் பழகும் வாய்ப்புகள் வரும் போது நம்மையறியாமல் அவர்களின் குண நலன்களைக் கவனிக்கிறோம்.

நம் எண்ணத்தைத் தெரிவிக்காமல் பழகி வரும்போது, அவர்கள் நல்லவர் போல நடித்து ஏமாற்றப் போவதில்லை. இயல்பாகவே அவர்கள் எப்படி மற்றவர்களுடன் பழகுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள் என்று பல கோணங்களில் பார்த்தபின் நமக்கும், நம் குடும்பத்திற்கும் சரியாக வருமா என்பதைக் கவனித்து, எல்லாம் சரியாக இருக்கும் என்று உள்மனதில் பட்டால், பின்னர் வெளிப்படையாகத் தெரிவித்து எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். மூடத்தனமாகக் காதல் வயப்பட்டு வாழ்க்கையை வீணடிப்பதில் பயனில்லை என்று நன்கு அறிந்துள்ளனர்.

பொதுவாகக் காதல் திருமணமானாலும், பெற்றோர்கள் பார்த்து நிச்சயிக்கும் திருமணமானாலும் கண்டிப்பாகத் தேவைப்படுவது பரஸ்பர நம்பிக்கை, ஒருவரை மற்றவர் நன்கு புரிந்து கொண்டு பின்னர் பிரச்சினை என்று வந்தால் சிறிது விட்டுக் கொடுத்துப் போவது போன்ற குணங்கள் தான் என்பதை உணர்ந்துள்ளனர்.

திருமணம் - காதல் திருமணமானாலும் சரி, பெற்றோர் நிச்சயித்ததாக இருந்தாலும் சரி, வாழ்க்கையை நல்ல விதத்தில் அமைத்துக் கொண்டு வாழ்வது என்பது கணவன், மனைவி இருவரின் கைகளில் தான் இருக்கிறது என்று நம்புகிறார்கள்.

எல்லாவற்றையும் விட மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் மண வாழ்க்கையில் ஈடுபட்டு, பின் அவை கிடைக்காத போது பெருத்த ஏமாற்றத்தால் மன அழுத்தம், வெறுப்பு, கோபம் முதலியவற்றுக்கு ஆளாவதை விட, எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொண்டு, வாழ்க்கையை யதார்த்த நோக்கில் பார்ப்பது மிகவும் அவசியம்.


காதல் திருமணத்தைவிட மற்றதில் பெற்றோர் ஆதரவு நிச்சயம் அதிகம். ஏதாவது பிரச்சினை என்றால் பெற்றோர்களிடம் மனம் விட்டுப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

காதல் திருமணம் செய்து கொண்டு பின் எதிர்பாராத சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேர்ந்தால் பெற்றோர்கள் எங்கே "நீயாகத் தேர்ந்தெடுத்த வாழ்க்கைதானே! சிக்கலையும் நீயாகவே தீர்த்துக்கொள்" என்று உதவிக்கு வராமல் இருந்து விடுவார்களோ என்று அஞ்சுவதும் நியாயம் தானே?

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் மாற்றங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. நாமும் முன்பிருந்ததைவிட எவ்வளவோ மாறியிருக்கிறோம். எண்ணங்களில் பிடிவாதமாக இதுதான் வேண்டும் என்று இருப்பதில்லை.

எனவே, வரும் வாழ்க்கையிலும் நம்மிடமே சிறிது மாற்றம் தேவைப்பட்டால் அதற்கேற்றபடி வளைந்து கொண்டு இல்லற வாழ்க்கையை இனிதாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று தான் இன்றைய இளம் பெண்கள் நினைக்கிறார்கள்.

வெகுசிலர்கள் தான் பணியில் நல்ல நிலைமை அடைந்து குடும்பப் பின்னணியும் சாதகமாக இருந்தால் திருமணம் என்ற ஒரு பந்தம் தேவையே இல்லை என்று நினைக்கிறார்கள். தனியாக இருந்தும் வாழ்க்கையில்



பல சாதனைகளைச் செய்யலாம் என்று எண்ணுகின்றனர்.

கொடுத்த கல்வியறிவு இன்றைய இளம் பெண்களின் அறிவை வளர்த்து அவர்களின் எண்ணங்களை அறிவு பூர்வமாக மாற்றி தம் எதிர்கால வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ள ஒரு தொலை நோக்குப் பார்வையை அளித்திருப்பதென்னவோ உண்மை தான்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## தக்காளி தேங்காய் சூப்

***தேவையான பொருட்கள் :-***

தக்காளி - 900 கிராம்
கரட் - 225 கிராம் (பொடிப் பொடியாக நறுக்கவும்)
வெங்காயம் - 2
பூண்டு - 4 அல்லது 5 பல்
வெண்ணெய் - 2 மேசைக் கரண்டி
துருவிய தேங்காய் - 5 மேசைக் கரண்டி
உப்பு, மிளகுத் தூள் - தேவைக்கேற்ப
வெள்ளை நிற சாஸ் - 2 தேக் கரண்டி.

***செய்முறை :-***

தக்காளியை பெரிய துண்டுகளாக வெட்டவும். தேங்காயை துருவிக் கொள்ளவும். வெங்காயத்தை பொடிப் பொடியாக நறுக்கவும்.

பூண்டை நன்கு நசுக்கிக் கொள்ளவும். நறுக்கிய வெங்காயம், பூண்டை, வெண்ணெயை உருக்கி, அதில் வதக்கவும்.

தக்காளி, கரட், தேங்காய் முதலியவைகளைப் போட்டு, 3 கப் தண்ணீர் விட்டு 20 நிமிடம் வேகவிடவும்.

வெந்த காய்கறிகளை மசித்து, தண்ணீர் விட்டு, உப்பு, மிளகுத்தூள் சேர்த்து 10 நிமிடம் மேலும் கொதிக்கவிடவும்.

வெள்ளை நிற சாஸ் சேர்த்து நன்கு கலக்கவும்.

ரொட்டித் துண்டுகளை வறுத்துப் போட்டு சுடச்சுட பரிமாறவும்.

# வீட்டுச் செடிகளின் பராமரிப்பு

**விடுமுறையில்** வெளியூர் சென்று வீடு திரும்பினால், நீங்கள் அருமையாக வளர்த்த செடிகள் காய்ந்து போயிருப்பதைக் காண்பீர்கள். அதைப் பார்க்கும்போது உங்கள் மனம் வேதனை அடையக்கூடும். நீங்கள் சற்று முன்ஜாக்கிரதையோடு நடந்திருந்தால், செடிகளின் பசுமையைப் பாதுகாத்திருக்கலாம்.

எப்பொழுதும், நீங்கள் வெளியூர் செல்லும் போது பாலிதின் பேப்பரால் பூந்தோட்டியுடன் செடிகளை நன்றாக மூடிவைக்கவும்.


செடிகளை அதிக வெளிச்சமில்லாத இடத்தில் மாற்றிவையுங்கள்.

பூந்தோட்டிகளில் நீர் நிறைய ஊற்றி வையுங்கள்.

நீங்கள் ஊர் திரும்பியபின், முதலில் பூந்தோட்டியின் மேல் பக்கத்தில் உள்ள பாலிதீன் பையை சற்றுத் திறந்து நகர்த்தி வையுங்கள்.

மறுநாள் பாலிதீன் பேப்பரை முழுவதுமாக அதிலிருந்து அகற்றிவிட்டு, வழக்கமான இடத்தில் பூந்தோட்டியை வைத்துவிடுங்கள்.

பூந்தோட்டி மேலே தொங்க வைக்கப் பட்டிருந்தால், அத்தொட்டியின் கீழ்ப்பாகத்தில் பாலிதீன் பேப்பர் கட்டிவையுங்கள். அப்போது தண்ணீர் ஊற்றும்போது நீர் கீழே விழுந்து தரையைக் கறைபடுத்தாது.



பெரிய இலைகளைக் கொண்ட செடிகளில், இலைகளைப் பாத்திரங்கள் கழுவும் சோப்பால் கழுவி வைத்தால், உங்கள் செடிகள் பளபளக்கும்.

### பச்சைப் பசேலென வீடு!


மரம், செடி, கொடி என்று வீட்டில் ஒரு தோட்டமே வைக்க ஆசை! ஆனால் சின்ன வீட்டில் அல்லது ஃப்ளாட்டில் தோட்டத்தை எங்கே அமைப்பது?

இந்தக் கேள்விக்கு ஒரே பதில் - வீட்டின் உள்ளே தொட்டிகளில் செடிகளை வளர்ப்பது தான்!

### வீட்டில் செடிகளை வளர்ப்பதின் நன்மைகள்

செடிகளைப் பராமரிப்பது நம் மன நலனுக்குச் சிறந்தது. இது நம் கவலைகளை போக்க உதவுகிறது.

புகையும், மாசும் நிறைந்த சுற்றுப்புற சூழலை இது தூய்மைப்படுத்துகிறது. வீட்டிற்கு இயற்கை அழகைத் தருகிறது.



### எந்தச் செடிகளை வைப்பது?

பெரிய மரங்களாக வளரக்கூடிய செடிகளை தொட்டியில் வளர்க்க முயற்சிப்பதில் நியாயமில்லை. அதிக வெளிச்சமில்லாத இடத்திலும் வளரக்கூடிய செடிகளை வளர்ப்பது நல்லது. இதனால் வெயிலில் வைக்க முடியவில்லை என்றாலும் செடிகள் காயாது.

பூ பூக்கும் செடிகள்தான் வைக்க வேண்டும் என்றில்லை. பூ பூக்காத செடிகளும் அழகாகத் தோன்றும்.

சில செடிகளில் பல வண்ணங்களில் இலைகள் இருப்பதைக் காணலாம். உங்கள் அறையின் நிறத்திற்கு ஏற்ற நிறத்தில் உள்ள இலைகள் கொண்ட செடிகளை வளர்க்கலாம்.

### எங்கே வைப்பது?

வீட்டில் இடமே இல்லை என்று தோன்றினாலும் நன்றாக ஒரு முறை வீட்டைச் சுற்றிப் பார்க்கவும். இந்த இடங்களில் வைத்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவும்.

ஃபிரிட்ஜுக்கு மேல், அறைகளின் மூலையில், பால்கனியைச் சுற்றி, ஜன்னல் விளிம்புகளில் ...மேலும் யோசித்துக் கொண்டே போகலாம்.

கவனம் : செடிகளை குழந்தைகள் போல் கருதி கவனம் செலுத்த வேண்டும். சரியான பராமரிப்பு இல்லையென்றால் அவை வாடி காய்ந்து விடும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

25

பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 25**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல - 1772,**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
13.06.2006

பரிசுப் போட்டி இல - 23
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

சித்தி ஷலீலா,
246/8, ஹிஜ்ரா வீதி, மோதர, மொரட்டுவ.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**நான்** ஏதாவது ஒரு குரலைக் கேட்டாக வேண்டும். குரல் பிடிக்க வில்லையானாலும் பரவாயில்லை. ஏதாவது ஒரு குரல், நான் கேட்டே ஆக வேண்டும்.

எனக்கு உடம்பு சரியில்லை என்று தெரிவித்தேன்.

மனிதர்களைப் பார்க்க விரும்பினேன்



நான். அதில் வெற்றி கண்டுவிட்டேன்!

சில்லென்ற தாழ்வாரத்தில் என்னை முழு நிர்வாணமாக நிறுத்தினார்கள் - சுவரைப் பார்த்தாற் போல். சுவரிலிருந்து மூன்றே அங்குல தூரத்தில் இருந்தது என் மூக்கு. எட்டுப் பேர் கொண்ட வரிசையில் நான் ஏழாமவன். டாக்டரின் முன்னிலையில் செல்வதற்கு என் முறைக்காகக் காத்திருந்தேன்.

எனக்கு அடுத்திருந்தவன் சம்மட்டிக்காரன் என்று அழைக்கப்பட்ட ஜூலட். அவனிடம் இரண்டு வார்த்தை கிசுகிசுத்துவிட்டேன் நான். சட்டாம்பிள்ளை எங்களைக் கவனித்துவிட்டான். அவனுக்கு வந்தது வெறி!

என் மண்டையின் பின்புறத்தில் விட்டான் ஒரு குத்து!

அடி விழப்போவதை நான் எதிர்பாராததால், நேரே சுவரில்போய் மோதியது என் மூக்கு. பீச்சியடித்தது இரத்தம்.

கீழே விழுந்தவன் எழுந்து உடம்பை உதறிவிட்டுக்கொண்டு, என்ன நடந்த தென்பதை உணர முயன்றேன். அப்போது என் எதிர்ப்பைக் காட்டுகிற மாதிரி ஒரு சிறு அசைவு ஏற்பட்டுவிட்டது. அவ்வளவுதான்.

அந்த சட்டாம்பிள்ளை அதற்காகவே காத்துக்கொண்டிருந்தான் போலும்!

அந்த மிருகம் என்னை வயிற்றில் எட்டி உதைத்தது. நான் மல்லாந்து விழுந்ததும், மாட்டுத்தோல் சவுக்கினால் என்னை வீசத் தொடங்கியது. ஜூலட்டுக்குப் பொறுக்க வில்லை. அவன் மீது பாய்ந்து தள்ளினான். கோரமான சண்டை ஏற்பட்டது இருவருக்கும். ஆனால் ஜூலட்டுக்குத் தான் செமத்தியான உதை. ஆகவே வார்டர்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

நான் எழுந்து கொண்டேன். என்னை யாரும் கவனிக்கவில்லை. ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய பொருள் ஏதாவது கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தேன்.

இங்கே என்ன கலாட்டா என்று கவனிப்பதற்காக டாக்டர் தன் நாற்காலியில் சாய்ந்தாற்போல் எட்டிப் பார்த்தார். அதே சமயம், ஸ்டவ்வின் மீது பெரிய எனாமல் வால் டபராவில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. நீராவியின் வேகத்தில் அதன் மூடி குதித்துக் கொண்டிருந்தது. டாக்டரின் அறையிலுள்ள காற்றைச் சுத்தப்படுத்துவதற்காகவே அந்த நீராவி.

ஒரே பாய்ச்சலில் அதன் பிடியைப் பற்றியெடுத்தேன். கையைச் சுட்டது. நான் விடவில்லை. ஒரே வீச்சில் கொதிக்கும் தண்ணீரை அந்த மிருகத்தின் முகத்திலே கொட்டினேன்.

ஜூலட்டை அடிப்பதில் அவன்

*எழுதியது:* **ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

அவ்வளவு முனைந்திருந்ததால் நான் வருவதைக் கவனிக்கவில்லை.

காதைக் கிழிக்கும் பயங்கர அலறலுடன் துள்ளி விழுந்தான் அவன். தரையில் விழுந்து நெளிந்தான். அணிந்திருந்த மூன்று உல்லன் சட்டைகளையும் கழற்றி எறியத் துடித்தான். மூன்றாவது சட்டையைக் கழற்றும் போது தோலும் உரிந்து வந்துவிட்டது. ஏனென்றால், அந்த மூன்றாவது சட்டையின் கழுத்து குறுகலாயிருந்ததால் இழுத்துத்தான் கழற்ற வேண்டியிருந்தது. கழுத்தில் ஓரளவும், கன்னத்தில் மொத்தமுமாக அழன்று போய், உல்லன் சட்டையுடன் கூடவே தோல் ஒட்டிக்கொண்டு வந்துவிட்டது. அவனுடைய ஒற்றைக் கண்ணும் கருகிவிட்டது.

கடைசியில் ஒருவாறாக அவன் எழுந்தான். இரத்தம் கசிந்து வரத் தள்ளாடினான். ஜூலட் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவனுடைய இடுப்பில் விட்டான் ஓர் உதை.

அவன் விழுந்தான் கீழே. வாந்தியும், நுரையும் அவன் வாய் ஓரத்தில் கொப்புளித்தன. நினைவு தவறிவிட்டது.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டு நின்றிருந்த இரண்டு வார்டர்களுக்கும் எங்களை அடக்குவதற்குத் தைரியம் ஏற்படவில்லை. துணைக்கு ஆட்களை வரவழைக்க வேண்டி எச்சரிக்கை மணியை அடித்தார்கள்.

அடுத்த விநாடி, நாலாதிசைகளிலும் ஆட்கள் ஓடிவந்துவிட்டார்கள். தாள முடியாத குத்தும், அடியும் சரமாரியாகப் பொழிந்தார்கள் எங்கள் மீது.

என் அதிர்ஷ்டம் சீக்கிரமாகவே எனக்கு மயக்கம் வந்துவிட்டது. ஆகவே வேதனை வலிகளை அதிகமாய் உணர வில்லை.

கண் விழித்தபோது, இரண்டு தளங்களுக்குக் கீழே, முழு நிர்வாணமாகக் கிடப்பதை அறிந்தேன். வெள்ளம் போல் இருட்டு. மெதுமெதுவே என் உணர்வுகள் திரும்பின. வலிக்கும் உடம்பெங்கும் தடவிப் பார்த்துக் கொண்டேன். மண்டையில் குறைந்தது பதினாலு, பதினைந்து 'முண்டு'கள் தென்பட்டன. மணி என்ன இருக்கும்? சொல்ல முடியவில்லை. இந்தப் பாதாளத்தில் இரவும் கிடையாது. பகலும் கிடையாது. எந்த விதமான வெளிச்சமும் இல்லை.

சுவரில் யாரோ தட்டுவதைக் கேட்டேன். வெகு தொலைவில் தட்டுகிறார்கள்.

தட், தட், தட், தட். இந்தத் தட்டல்தான் கைதிகள் ஒருவருக்கொருவர் செய்திகள் தெரிவித்துக் கொள்ளும் சமிக்ஞை. நான் பதில் சொல்ல விரும்பினால் இரண்டு முறை தட்ட வேண்டும். தட்டுவதா? எதைக் கொண்டு தட்டுவது? அதற்கு உபயோகிக்கக் கூடியதாக அந்த இருட்டில் எதுவும் கிடைக்கவில்லை. முஷ்டியால் தட்டுவது பயன் தராது. ஏனெனில், கூர்மையாகவும், பிசிறில்லாமலும் ஓசை வராது. ஓரிடத்தில் இருட்டு கொஞ்சம் குறைச்சலாயிருப்பது போல் தோன்றியது. அந்தப் பக்கத்தில்தான் கதவு இருக்க வேண்டுமென்று ஊகித்தவனாக அங்கே நகர்ந்தேன். மடேலென்று கம்பிகளின் மீது என் உடம்பு இடித்தது. இருட்டில் அவை இருப்பது தெரியாமல் போய்விட்டது. இருட்டில் துழாவினேன், புரிந்தது. எனக்கு ஒரு கெஜ தூரத்தில் கதவு. மூடியிருக்கிறது. ஆனால் அதை நான் நெருங்கி விடாதபடி இந்த இரும்புக் கம்பிகள் தடுத்துக் கொண்டிருக்கின்றன.

எதற்கு இப்படி?

அபாயகரமான கைதியை வைத்திருக்கிற அறைக்குள் ஒருவர் வரவேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பயமின்றி வரலாம். ஏனெனில், கம்பிக் கூண்டுக்குள் இருக்கிறான் கைதி, அவனுடன் பேசலாம். தண்ணீரை வீசலாம். உணவை எறியலாம். எப்படி வேண்டுமானாலும் இழிவு படுத்தலாம் - துளியும் ஆபத்துக் கிடையாது. ஆனால் கைதிக்கும் ஒரு நன்மை. அவனை அடிக்க முடியாது. அதற்குக் கூண்டைத் திறக்க வேண்டும்.

'தட், தட்' சத்தம் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. என்னைக் கூப்பிடுபவன் யாராயிருப்பான்? பிடிபட்டால் பெரும் அபாயம் என்பதையும் பொருட்படுத்தாமல் தட்டுகிறானே! இங்கும் அங்கும் நகர்ந்தேன். எதுவோ இடறியது. குப்புற விழவிருந்தவன், இடறியது என்னவென்று எடுத்துத் தடவிப் பார்த்தேன். ஒரு மர ஸ்பூன்.

கையில் எடுத்துக் கொண்டு பதில் கொடுக்க ஆயத்தமானேன். சுவரோடு சுவராகக் காதைப் பதிய வைத்துக் கொண்டேன். தட் தட் தட். இடைவெளி. பிறகு தட் தட்.

நான் பதில் கொடுத்தேன். தட் தட். இந்த இரண்டு 'தட்' டுக்குப் பொருள்: 'கேட்டுக் கொண்டிருக்கிறேன் சொல்லு'. தட்டல் மறுபடி ஆரம்பித்தது.

தட் தட் தட் - எத்தனை தரம் தட்டுகிறான் என்று எண்ணி ஏ.பி.ஸி.டி. வரிசைப்படி அது எத்தனையாவது எழுத்து என்று அறிய வேண்டும். 16 முறை தட்டி விட்டு இடைவெளி கொடுத்தான். 'தட்' ஒரு தட்டு பலமாய்த் தட்டினேன். அவன் குறிப்பிடும் எழுத்தைப் புரிந்து கொண்டாயிற்று என்று அர்த்தம்.

அடுத்தடுத்து எழுத்துக்கள் வந்தன.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# அரவாணிகள் எதிர்கொள்ளும் சமூகச் சவால்கள்

**மனித** இனத்தில் ஆண், பெண் தன்மையற்ற மாறுபட்ட பிறப்பாளிகள் அலிகள் என பேச்சு வழக்கில் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் அரவாணிகள் என அறியப்படுகின்றார்கள். கடவுளின் படைப்பில் வஞ்சிக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படும் அரவாணிகள், சமுதாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்தான் எத்தனை? எத்தனை?

உயிரியல் மரபணு பிறழ்வால் உருவான இவர்கள் பிறப்பிலேயே அரவாணிகளாக அறியப்படுவதில்லை. வளர்ந்து வரும் வயதில் விபரம் புரியத் தொடங்கையில் பெண்களினால்



ஒதுக்கப்பட்டும், ஆண்களின் ஏளனத்திற்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாகி மனதளவில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்குவதே இவர்கள் சந்திக்கும் முதற் பிரச்சினையாகும்.

அரவாணிகளின் உருவாக்கத்தை சற்று விபரமாகப் பார்ப்போமானால் மரபணு குழறுபடியால் பிறந்த இவர்கள் (பார்க்க பெட்டிச்செய்தி) பொதுவாக உடல் ரீதியாக ஆணாகவும், உணர்வு ரீதியாக (ஹோர்மோன்களின் ஆதிக்கத்தால்) பெண்களாகவும் காணப்படுவார்கள். வெளி உலகிற்கு தம்மைப் பழக்கப்படுத்துவதற்கு முன்பே வீட்டிலேயே தமது சகோதரிமார்களுடன் நெருங்கிப்பழக அதிக விருப்பமுடையவர்களாக இருப்பார்கள். பெண்களின் உடைகளை அணியவும் பெண்களைப் போல அலங்காரம் செய்யவும் ஈடுபாடு உடைய இவர்கள், அது கைகூடாத போது திருட்டுத்தனமாகக் கூடத் தம்மை பெண்களாக உருமாற்றி திருப்தி அடைந்து கொள்ளுவார்கள்.

சமுதாயத்தில் அரவாணிகளுக்கு உரிய அந்தஸ்து கிடைக்காமையே அவர்கள் ஏனைய அரவாணிகளுடன்



கூட்டுச் சேர்ந்து பிறிதானதொரு வாழ்க்கை வாழவும் சீரழிவான வாழ்க்கை நடாத்தவும் அவர்களை இட்டுச் செல்கின்றது.

ஒருவன்(ள்) தான் அரவாணி என அறியப்பட்ட உடனேயே முதலாவது எதிர்ப்பினை எதிர்நோக்குவது தனது வீட்டிலேயே ஆகும். வெளியாரிடம் தனது மகன், மகள் என முழுமையாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் எந்தப் பெற்றோர்தான் தனது பிள்ளையை அரவாணி என சொல்லிக் கொள்ளுவார்கள்? தமது குடும்பத்தாருடனேயே வசிக்க முடியாத அதாவது தமது குடும்பத்திற்குக் கிடைத்த சாபம் என அவர்கள் கருதும் போது வேறு வழியின்றி வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருப்பதில்லை.

பலர் நினைப்பது போல சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் அல்லது வறியவர்கள் மத்தியில்தான் அரவாணிகள் உருவாகின்றார்கள் என்பது மிகப் பெரியதொரு தப்பபிப்பிராயம் ஆகும். முன்னரே கூறியபடி மரபணு பிறழ்வு என்பது ஏழை, பணக்காரன் - சாதி, சமயம் பார்த்து ஏற்படுவதல்ல. சமுதாயத்தின் எந்தப் பிரிவினரிடமும் அது உருவாகலாம் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அரவாணிகளாக தம்மை அறிந்து கொண்ட அவர்கள், முதலில் செய்யும் காரியம் தான் ஆண் உறுப்பை அகற்றுதல் ஆகும். தாம் முழுமையாக இருப்பதற்கு மிகப்பெரிய தடை ஆண் உறுப்பே எனக் கருதும் அவர்கள், எவ்வகையிலேனும் அதனை அகற்றியே விடுவார்கள். ஏனைய அரவாணிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டால் நான்கு சுவற்றிற்குள் அவர்களின் காரியம் முடிந்து விடும். இது சாதாரண சட்ட விரோத கருக்கலைப்பு போன்ற செயலுக்கு ஈடானது.

இச்செயலின் போது இரத்தப்போக்கு ஏற்பட்டு சிலர் மரணமடைந்த செய்திகள் கூட அவ்வப்போது வருவதுமுண்டு.



மருத்துவ அறிவற்ற முறையில் சாதாரணமாக ஆண் உறுப்பை வெட்டி அகற்றும் அரவாணிகள் அதற்கு மருந்தாக மூலிகைகளையே பயன்படுத்துவதுதான் அதிர்ச்சியின் உச்சக்கட்டம். ஆயினும் 90 சதவீதத்திற்கு மேல் தற்போது சமுதாயத்தில் நடமாடும் அரவாணிகள் மேற்கண்ட முறையிலேயே அரவாணிகளாக மாறுகின்றனர். மறுபுறம் மருத்துவ மனைகளில் சத்திர சிகிச்சை மூலம் ஆண் உறுப்பை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது பரவலாக நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அரவாணிகளில் அநேகர் படிப்பறிவில்லாமல் இருப்பதற்குக் காரணமும் அவர்கள் அரவாணிகளாக இருப்பதுதான். பாடசாலையில் ஆண், பெண் என்போரைத் தவிர, எந்த நிர்வாகமும் அரவாணிகளுக்கு அனுமதி அளிப்பதில்லை.

இதில் ஆரம்பித்து பொது மலசல கூடம் முதல் வேலை வாய்ப்பு வரை அவர்கள் வஞ்சிக்கப் பட்டவர்களாகவே உள்ளனர்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க...)


மருத்துவ விஞ்ஞானத்தின்படி ஆண் உடல் XY எனும் இரு மூலக்கூறுகளையும், பெண் உடலானது XX என்ற இரு மூலக்கூறுகளையும் மட்டுமே கொண்டுள்ளது. கருத்தரிப்பின் போது பெண்ணின் கருமுட்டையில் இருந்து X உம் ஆணின் விந்தில் இருந்து X உம் இணைந்தால் பெண்ணும், கருமுட்டையில் இருந்து X உம் விந்தில் இருந்து Y உம் இணைந்தால் ஆணும் உருவாவார்கள்.

ஆணின் XY உம் பெண்ணின் X உம் இணையும்போது அதாவது XXY என்னும் குழறுபடி நிகழும்போது பெண் தன்மையுள்ள ஆணும், ஆண் தன்மையுள்ள பெண்ணும் பிறப்பார்கள். அவர்களே அரவாணிகள்.

சிரிப்பு 09

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"





அதிக உயரமும், உடல் பருமனும்தான் அதற்குக் காரணங்கள். அவள் பணக்காரி. பொழுதைப் போக்கத் துணையாக அவளுடன் இருப்பது ஒரு நாய், நாயுடன் விளையாடும் பொழுது ஒரு பெரிய கல்லை விட்டெறிகிறாள் அவள், அந்தக் கல்லை நாய் எடுத்துக் கொண்டு திரும்பி வருவதற்காக. ஆனால் அந்தக் கல் சாப்ளினை பதம் பார்க்கிறது. அப்படியே தரையில் சாய்ந்து விடுகிறார். பயந்து போன மாரி அவரைத் தாங்கிக் கொண்டு வீட்டிற்கு அழைத்து வருகிறாள். அவருடைய தந்தை பணக்காரன் என்பது இவருக்குத் தெரியும். அவள் இவருக்காகக் குடிக்கப் பானத்தைக் கொண்டு வரச் செல்லும் பொழுது தந்தையின் பணம் எங்கே இருக்கிறது எனத் தேட ஆரம்பிக்கிறார் சாப்ளின்.



ஒவ்வொரு படத்தின் காட்சியிலும் வைக்கப் பட்டிருக்கும் பொருள்களும் திரைப்பட மொழியில் (Set Property) இதைச் சுருக்கமாக ப்ரப் (Prop) என்று சொல்வதுண்டு. சாப்ளின் தன் படங்களில் அந்த வகையில் காணப்படும் ஒவ்வொரு பொருளையும் வினோதமான முறையில் உபயோகித்துச் சிரிக்க வைப்பார். அதை அவர் ஒரு கலையாகவே வளர்த்தார்.

மாரி பணக்காரி என்பதை அறிந்த இவர், அவளை ஏமாற்றிப் பணம் பறிக்க வேண்டும் என்று திட்டமிடுகிறார். அவளுடன் சரஸமாடத் துவங்குகிறார். அவள் ஒரு கம்பி வேலி மேல் (Fence) உட்கார்ந்திருக்கிறாள். சாப்ளின் நகர வாழ்க்கையைப் பற்றி சைகையாலேயே வர்ணித்து, தன்னுடைய தந்தையின் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி வருமாறு சொல்கிறார். இருவரும் நகரத்தை அடைகிறார்கள். அவளுக்கு அங்கு எல்லாமே புதிதாகத் தோன்றுகிறது. ஓரிடத்தில் சாப்ளினின் காதலி மேபெல் நார்மெண்ட், மாரியை பார்த்து விடுகிறாள். காதலியாக நடித்தவர் அன்றைய பிரபல நகைச்சுவை நடிகை "மேபெல் நக்மெண்ட்" (Mabel Normand) அழகுப் பாவை இவர். (மேக் ஸென்னட்டின் காதலியாக இருந்த மேபெல் பின்னாளில் சாப்ளினின் காதலியானார்).



கோபங் கொண்ட காதலி சாப்ளினை ஓங்கி அறைந்து வீழ்த்துகிறாள். அவரைக் காப்பாற்ற மாரி அவர் முடியைப் பிடித்துத் தரையில் தரதரவென்று இழுத்துச் செல்கிறாள். நினைவற்றுக் கிடந்த சாப்ளினின் நினைவு திரும்புகிறது.



சாப்ளினும், மாரியும் ஒரு உணவு விடுதிக்குச் செல்கிறார்கள். அந்தச் சூழ்நிலை, படாடோபம் எல்லாம் அந்தக் கிராமத்துப் பெண்ணிற்குப் புதிது. நன்றாகக் குடிக்கிறாள். மனிதர்களுடன் மட்டுமல்லாமல் தனியாகவும் நாட்டியமாடுகிறாள். குடி போதையில மயங்கி விழுந்து விடுகிறாள். அவளைத் தூக்கி, நிற்க வைப்பதற்கு ஐந்து பலசாலிகள் தேவைப்பட்டது. மாரியின் பணம் நிறைந்த பையைத் திருட வேண்டும் என்று மேபெல் சாப்ளினிடம் சொல்கிறாள். 'நகரத்தில் பிக்பாக்கெட்டுகள் அதிகம். அதை என்னிடம் கொடு' என்று சொன்ன சாப்ளினை நம்பி, அக் கிராமத்து குண்டோதரி கொடுத்து விடுகிறாள்! மேபெல்லும், அவரும் அதை எடுத்துக் கொண்டு அவளை அம்போ என்று விட்டு விட்டு மறைந்து விடுகிறார்கள்.

பணத்தை இழந்து தனியாக நகரத்தில் அவதிப்படும் மாரி ஒரு உணவு விடுதியில் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்கிறாள். அங்கு மாலைப் பொழுதை இனிதாகக் கழிக்க மேபெல்லும், சாப்ளினும் வருகிறார்கள். தன்னை ஏமாற்றியவரைக் கண்டவுடன் மாரி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறாள்...

சாப்ளினும், மேபெல்லும் ஒரு பூங்காவில் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ஒரு பத்திரிகை அவன் கண்ணில் படுகிறது. அதில் ஒரு சுவையான செய்தி. பெரும் பணக்காரரான மாரியின் மாமா மலையேறும் பொழுது விபத்தினால் இறந்து, தன் சொத்து முழுவதையும் மாரியின் பெயருக்கு எழுதிவிட்டுச் சென்று விட்டார், என்பதே அது. அதைப் படித்த சாப்ளின், பூங்காவிலிருந்து நழுவுகிறார். மேபெல் அவரைத் துரத்தி ஓடுகிறாள்.

அவளை ஏமாற்றிவிட்டு சாப்ளின் மாரி வேலை செய்யும் இடத்திற்குச் செல்கிறார். மாமாவின் சொத்து விஷயத்தைப் பற்றி அறியாத அவள், சாப்ளின் திரும்பி வந்ததைப் பார்த்து சந்தோஷம் அடைகிறாள்.

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

13

## ட்ராகன் ராணி

**சிங்குவாய்** தேசத்து ஆண்களில் பெருமளவிலானோர் படைகளில் இணைந்து விட்ட நிலையிலும், படைகளிலும் பெரும்பகுதியினர் எல்லைப் பகுதியில் நிறுத்தப்பட்ட நிலையிலும் உள்நாட்டில் ஆண்களின் தொகை வெகுவாகக் குறைந்தே காணப்பட்டது. பட்டு உற்பத்தி மற்றும் கைத்தொழில், விவசாயம் என்பவற்றில் பெண்களே நேரடியாக ஈடுபட்டனர். எந்தத் தேவைகளையும் சமாளிக்கக் கூடிய திறனும் ஆற்றலும் சிங்குவாய் தேசத்துப் பெண்களுக்கு இருந்த போதும் அவர்களது பாலியல் தேவைகளைப், பூர்த்தி செய்ய இயலாது வருடக்கணக்கில் தவித்தனர்.

மறுபுறம் எல்லைப் புறத்தில் நிலைகொண்டிருந்த வீரர்களோ தமது குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து பசி, தூக்கம் மறந்து முகாமில் இருந்தாலும் பிரிவுத்துயரோ அல்லது வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணமோ அவர்களுக்கு இருக்கவில்லை. காரணம் - மங்கோலியப் பெண்கள். அரசியல் ஆட்சியோ அல்லது பொருளாதார வளமோ, ஏன் நாகரீக வளர்ச்சி கூட இல்லாத மங்கோலியர்களிடம் குவிந்து கிடந்தது அழகான வாளிப்பான பெண்கள்தான். மஞ்சள் நிற மேனியும், சுமாரான உயரமும் தளதளத்த அங்கங்களுமாக இயற்கை அள்ளிக் கொடுத்த வாளிப்பினைக்கொண்டிருந்த மங்கோலியப் பெண்களைக் கண்டால் முற்றும் துறந்த முனிவரின் மனது கூட சபலப்படும். போர் நடக்கும் சமயங்களில் மங்கோலியப் பிரதேசங்களுக்குள் நுழையும் சிங்குவாய் படை வழூர்கள் முதலில் கைப்பற்றுவது அல்லது பிடிப்பது மங்கோலியப் பெண்களையே. மற்றுமோர் முறையில் சொல்வதாயின் மங்கோலியர்களிடம் கைப்பற்றுவதற்கு அவர்களிடம் வேறு எந்த வளங்களும் இல்லை. வெறுமனே நிலப்பிரதேசத்தைப் பிடித்து ஆட்சி செய்வதிலும் எந்தப் பிரயோஜனமும் இருக்கவில்லை.

இவ்வாறு பிடிக்கப்பட்டு கொண்டு வரப்படும் மங்கோலியப் பெண்கள் சீன - மங்கோலிய எல்லைப் பிரதேசத்தில் பரவலாக முகாமிட்டிருக்கும் படைவீரர்களின் முகாம்களில் பாலியல் அடிமைகளாக வைக்கப்பட்டிருப்பார்கள். தமது வீடு, உறவு, சொத்து, சுகம் அனைத்தையும் துறந்து வருடக் கணக்கில் எல்லைப் பிரதேசத்தில் முகாமிட்டிருக்கும் சிங்குவாய் படை வீரர்களின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யவே இரவு பகல் பாராது மங்கோலியப் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இவை யாவற்றையும் நன்கு தெரிந்து வைத்திருந்த போதிலும் ஒரு பெண்ணாக இருந்த போதும் கூட ஸூ ஷி ராணி அதனைக் கண்டு கொள்ளவில்லை. அவளுக்கு மங்கோலிய பெண்கள் பாலியல் அடிமைகளாக இருப்பதை விடவும் தனது தேசத்தவனே முக்கியமாகப் பட்டிருந்தது.

சிங்குவாய் ராணியாக ஸூ ஷி ஆட்சி புரிந்தாலும் இடையிடையே அவள் தனது நாட்டினை சுற்றிப் பார்ப்பதையும் எல்லைப் பிரதேசங்களுக்குக் குறிப்பாக அடிக்கடி போர் நடைபெறும் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு படையினரை உற்சாகப்படுத்தி வருவதையும் வழமையாகவே கொண்டிருந்தாள். அவ்வாறு அவள் செல்லும்போது அவளுடன் கூடவே பணியாளர்களும் அரண்மனைப் பணிப் பெண்களும்



பரிவாரங்களாகச் செல்வதுண்டு.

ஒருமுறை எல்லைப்புறப் பிரதேசத்தில் ஸீ ஷி ராணி முகாமிட்டு தங்கியிருந்த வேளை, ஓய்வு நேரத்தின்போது உலா வருகையில் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் அவள் கண்ட காட்சி அவளை திடுக்கிட வைத்தது. அரண்மனை பணிப்பெண் ஒருத்தி மங்கோலிய அடிமை ஒருவனுடன் உடல் உறவு கொண்டு இருப்பதினை நேரடியாகக் கண்டுவிட்டாள்.

அந்தக் காட்சியினைக் கண்டு அவள் அதிர்ச்சியடைந்தாலும் அதில் சம்பந்தப்பட்ட பணிப்பெண் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரேயொரு உண்மையினை மட்டும் புரிந்து கொண்டாள். அதாவது பாலியல் தேவைகள் - காம வேட்கைகள் - ஆணுக்கு எவ்வாறு அவசியமோ அவ்வாறே பெண்களுக்கும் அவசியம் என்பதை உணர்ந்து கொண்டாள்.

அந்தக் கால கட்டத்தில் சிங்குவாய் படையினரால் போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த ஏராளமான மங்கோலியர்கள் கைதிகளாகவும் அடிமைகளாகவும் இருந்தனர். சிறையில் கைதிகளாக ஏராளமானோர் இருந்ததை விட மிகுதியானோர் கட்டட நிர்மாணம் மற்றும் கடின வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

பொதுவாகவே மங்கோலிய ஆண்கள் வாட்ட சாட்டமாகவும் நல்ல கட்டுமஸ்தான உடலுடனும் காணப்பட்டனர். இந்நிலையில் ஸூ ஷி ராணியின் மனதில் ஓர் திட்டம் உருவானது. அதன்படி சிறைகளில் கைதிகளாக வெறுமனே இருந்த மங்கோலியர்களை, சிங்குவாய் நாட்டின் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு அதாவது அவர்களின் வீடுகளுக்கு வேலைக்காரர்களாகவும், அடிமைகளாகவும் அனுப்புமாறு உத்தரவிட்டாள். அதாவது தமது கணவன்மார் போர் முனைக்குப் போய்விட்ட நிலையில் பாலியல் ரீதியில் உடல் சுகத்திற்காக ஏங்கிய அவர்களது மனைவிமாருக்கு மங்கோலிய ஆண்கள் மூலம் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மறைமுகமாக நடவடிக்கை எடுத்தாள்.

ஒரு புறம் தனது நாட்டு போர் வீரர்களின் பாலியல் தேவைகளுக்கு அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட மங்கோலியப் பெண்களைப் பயன்படுத்திய ஸூ ஷி, மறுபுறம் போர் வீரர்களின் மனைவிகளுக்கு கைதிகளாகப் பிடிக்கப்பட்ட மங்கோலிய ஆண்களைப் பயன்படுத்துமாறு உத்தரவிட்ட விசித்திரமான ராணியாக இருந்தமையினால் அவள் "டிராகன் ராணி" என வரலாற்றில் அழைக்கப்பட்டாள். தனது தம்பியான குவான்லூவிக்குக் கூட முடி சூட்டாமலும் தானும் திருமணம் முடிக்காமலும் சிங்குவாய் தேசத்தை ஆட்சி செய்த ஸீ ஷி தனது 79 ஆவது வயதில் இயற்கை மரணமடைந்தாள். அதன் பின்னரே அவளது சகோதரனாகிய குவான்லூ தனது 66ஆவது வயதில் சிங்குவாய் ராஜாவாக முடி சூடியதாக வரலாறு கூறுகின்றது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்திய அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினர்




இலங்கை - இந்திய நகல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா, மீண்டும் பழைய சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக் கழிக்க முயற்சித்தார். அதாவது, ஊர்க்காவல் படையைக் கலைப்பதற்கும் அதிரடிப் படையை வாபஸ் பெறுவதற்கும் ரவி ஜெயவர்த்தனா எதிர்ப்புத் தெரிவிக்கிறாரென்று முன்னர் கூறியதையே மீண்டும் சொன்னார். இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குவதற்கும் யாழ். குடாநாட்டில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மத்தியப் பகுதி வரை நிறுவப்பட்ட இராணுவ முகாம்களை மூடுவதற்கும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி எதிர்ப்புத் தெரிவிக்கிறாரென்ற பழைய கதையையே மீண்டும் சொன்னார் ஜே.ஆர். அத்துடன் வடக்குக் கிழக்கு மாகாண சபை நிறுவப்பட்டு ஆறு மாதங்களுக்குள் கிழக்கு மாகாண மக்கள் அதனை ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? என்பதைக் கண்டறிய, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்றும் யோசனை கூறினார் ஜெயவர்த்தனா.

பேச்சுவார்த்தையிலிருந்து பின்வாங்கவோ அல்லது உத்தேச நகல் ஒப்பந்தத்தைப் புதுடில்லிக்கு அனுப்பி வைப்பதைத் தாமதிப்பதற்கோ ஜனாதிபதி முனைவாரானால், பழைய தவறையே அவர் மீண்டும் விடுகிறாரென்று தீக்ஷித் சுட்டிக் காட்டினார். 1984ஆம் ஆண்டு சர்வ கட்சி மாநாட்டில் பின்னிணைப்பு-சி தொடர்பாக அவர் செய்த அதே விடயத்தையே மீண்டும் செய்ய முனைகிறாரென்று தீக்ஷித் சொன்னார். இதேவேளை, யாழ்ப்பாணத்திலோ கிழக்கு மாகாணத்திலோ தமிழ் மக்கள் இலங்கை ஆயுதப்படையினரால் அடக்கி ஒடுக்கப்படுவதை இந்தியா கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது என்றும் சொன்னார்.

ரவி ஜெயவர்த்தனாவையும் லலித் அத்துலத் முதலியையும் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணத்துங்கவையும் மீண்டும் ஒருமுறை சந்தித்துப் பேசுமாறு தீக்ஷித்தைக் கேட்டுக் கொண்டார் ஜெயவர்த்தனா. இதன்படி இவர்களைத் தனித் தனியே சந்தித்துப் பேசினார் தீக்ஷித். லலித் அத்துலத் முதலியைத் தவிர ஏனைய இருவரும் ஒப்பந்தத்துக்கு இணக்கம் தெரிவித்தனர். இதனையடுத்து மறுநாள் ஜனாதிபதியை தீக்ஷித் சந்தித்துப் பேசினார். அப்போதும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றிய பிரச்சினையையே ஜனாதிபதி முன்வைத்தார். 1988ஆம் ஆண்டின் இறுதியில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதென்று நகல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. சர்வஜன வாக்கெடுப்பைப் பின்போடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதால் நாட்டின் நன்மைக்காகவும் இலங்கையின் ஐக்கியத்தைப் பேண தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் ஜனாதிபதி இந்த விதியைப் பயன்படுத்த முடியுமென்றும் தீக்ஷித் சொன்னார். இதன்பின்னர் நகல் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் தீக்ஷித்தும் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தை எடுத்துக் கொண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி புதுடில்லிக்கு விரைந்த தீக்ஷித், அன்றைய தினமிரவே பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

நகல் ஒப்பந்தத்தை வாசித்த இந்தியப் பிரதமர், உடனடியாகவே சம்பந்தப்பட்ட இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டமொன்றினை நடத்தினார். சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. உடனடியாகவே யாழ்ப்பாணத்திலிருக்கும் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்கு அதிகாரி ஒருவரை அனுப்பிவைப்பதென முடிவெடுக்கப்பட்டது. இதன்படி கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரிவு முதலாவது காரியதரிசி ஹல்டிப் பூரி யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனைச் சந்தித்துப் பேசுமாறு பணிக்கப்பட்டார்.

பூரி யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனைச் சந்

(அரசியல் தொடர்)

தித்து வந்தார். நகல் ஒப்பந்தத்தின் விபரங்கள் பற்றி அவர் பிரபாகரனுக்கு விளக்கினார். மேலிடத்து உத்தரவுகளின்படி பூரி ஒப்பந்தத்தைப் பிரபாகரனுக்குக் காட்டவில்லை. மேலோட்டமாக அவருக்கு விளக்கியிருந்தார். தகுதிவாய்ந்த மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் முன்னிலையில் பிரபாகரனுக்கு பின்னர் விளக்குவதென்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. பூரி, பிரபாகரனைச் சந்தித்து விட்டு புதுடில்லி திரும்பியதும் இந்திய அதிகாரிகளுக்கு தனது சந்திப்பின் விபரம் குறித்து விளக்கினார். ஜூலை 19ஆம் திகதி இரு தடவைகள் ராஜீவ் காந்தி இந்திய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், ஜெயவர்த்தனாவுக்கு எழக்கூடிய அச்சுறுத்தல் குறித்தும் குறிப்பாக வன்செயல்களோ சதி முயற்சியோ ஏற்படக்கூடிய சாத்தியங்கள் குறித்தும் ராஜீவ் காந்தி இந்திய அதிகாரிகளிடம் விசாரித்தறிந்தார். வன்செயல்கள் ஏற்படலாமென்றும் சதிமுயற்சிக்கான சாத்தியங்கள் இல்லையென்றும் இந்திய அதிகாரிகள் எடுத்து விளக்கினர். இதனையடுத்து இந்திய பாதுகாப்பமைச்சர் கே.சி.பந்த்துடன் அன்றைய தினம் இரவே ராஜீவ் காந்தி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு ஏற்படக் கூடிய எதிர்ப்புகளைத் தவிர்ப்பதற்கு. இந்திய ஆயுதப் படையினரை தயார் நிலையில் வைக்குமாறு பாதுகாப்பமைச்சருக்கு இந்தியப் பிரதமர் பணித்தார். மறுதினம் இந்தியாவின் கூட்டுப்படைத் தளபதிகளைச் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து பூரி உட்பட இந்திய அதிகாரிகள் இந்திய முப்படைத் தளபதிகளைக் சந்தித்துக் கலந்துரையாடினர். இதேவேளை தமிழக முதல்வர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

எம்.ஜி.இராமச்சந்திரனையும் தமிழகத்திலுள்ள தமிழீழ இயக்கங்களின் தலைவர்களையும் சந்தித்து ஒப்பந்தம் பற்றி விளக்கி ஒப்புதலைப் பெறுமாறு ராஜீவ்காந்தி இந்திய அதிகாரிகளைப் பணித்தார்.

உத்தேச நகல் ஒப்பந்தத்தில் செய்து கொள்ளப்பட்ட முக்கிய திருத்தங்கள் வருமாறு: :-

அ) 1985ஆம் ஆண்டு திம்புவிலும் டில்லியிலும் முன்வைக்கப்பட்ட யோசனைகள் நகல் ஒப்பந்தத்திலிருந்து தவிர்க்கப்பட வேண்டும். இதற்கான கோரிக்கையை ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன் வைத்திருந்தார்.

**பூரி யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனைச் சந்தித்து வந்தார். நகல் ஒப்பந்தத்தின் விபரங்கள் பற்றி அவர் பிரபாகரனுக்கு விளக்கினார். மேலிடத்து உத்தரவுகளின்படி பூரி ஒப்பந்தத்தைப் பிரபாகரனுக்குக் காட்டவில்லை. மேலோட்டமாக அவருக்கு விளக்கியிருந்தார். தகுதிவாய்ந்த மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் முன்னிலையில் பிரபாகரனுக்கு பின்னர் விளக்குவதென்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. பூரி, பிரபாகரனைச் சந்தித்து விட்டு புதுடில்லி திரும்பியதும் இந்திய அதிகாரிகளுக்கு தனது சந்திப்பின் விபரம் குறித்து விளக்கினார். ஜூலை 19ஆம் திகதி இரு தடவைகள் ராஜீவ் காந்தி இந்திய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.**

ஆ) ஒப்பந்தத்துக்கு பின்னிணைப்பொன்று சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஒப்பந்த அமுலாக்கலுக்காக இலங்கை - இந்திய அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் குறிக்கப்பட்டிருந்தது.

இ) யுத்த நிறுத்தத்தைப் பேணுதல், ஆயுதங்களைக் கையளித்தல், தமிழ் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுத்தல் போன்றவை தொடர்பான விபரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

அத்துடன் ராஜீவ்காந்திக்கும் ஜெயவர்த்தனாவுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களைச் சேர்த்துக் கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை




**தங்கப் பாம்பின் வாயில் ஒரு மாணிக்கம் இருக்கிறது. அம் மாணிக்கத்தைக் கைப்பற்றினால் எல்லா வித துன்பங்களும் தீர்ந்து விடும் என்று ஸ்ரீகுமாருக்கு ஸ்ரீதேவி கூறுகிறாள். அதே வார்த்தைகளை ஜயந்தனும் கேள்விப் படுகிறான். இருவரும் அந்த மாணிக்கத்தை எப்படி கைப்பற்றுவது என்று யோசிக்கிறார்கள்.......**

"**இரண்டாவது** வழி நல்லதுதான். ஆனால் அதற்கேற்ற பெண் நமக்கு எங்கிருந்து கிடைப்பாள்? அதே சமயம் அவள் கோயிலுக்குள் நுழையக் கூடியவளாகவும் இருக்கவேண்டும், பன்னிரெண்டு வயது தைரியசாலி இப்படிப்பட்ட பெண் குழந்தை எங்கே இருக்கிறாள்?" ஜயந்தன் தீவிரமாகவே விசாரித்தார்.

"அதற்கு வேண்டுமானால் முயற்சி செய்யலாம். காரியஸ்தர் கிருஷ்ணன் நாயருக்கு ஒரு மருமகள் இருக்கிறாள். கெட்டிக்காரியும் கூட!"

"ஆனால், அதிலும் ஒரு சிக்கல்...." ஜெயந்தன் நெற்றி சுளித்தபடி சொன்னான்.

"என்ன சிக்கல்?"

"நாகமாணிக்கம் நமது கையில் விழுந்த பிறகு அந்தப் பெண் உயிரோடு இருக்கக் கூடாது, அது நமக்கு ஆபத்து."

"ஏன்?"

"நாகமாணிக்கம் நம்மிடம் இருப்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்வார்கள். இப்போதைய சூழ்நிலையில் கோயில் மீது கண்மூடித்தனமான பக்தி வைத்திருப்பவர்கள் அதன் பேரில் ஏதாவது பிரச்சினையைக் கிளப்பலாம். இன்னொரு முக்கியமான விஷயம், கோயில் நம்முடையது அல்ல. குமாருக்குச் சொந்தமானது"

"அப்படியானால் அந்தப் பெண்ணைப் பேச முடியாமல் செய்து விட்டால் போகிறது."

"அது மேலும் சிக்கலாகிவிடும். அதனால் நாம் முதல் வழியையே பயன்படுத்திப் பார்ப்போம். முடியா விட்டால் பிறகு இரண்டாவது வழியைப் பின்பற்றலாம்."

"அந்த அளவுக்கு நேரம் இருக்குமா?"

ஜயந்தன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

கடைசியில் இரண்டாவது வழியையே தேர்ந்தெடுப்பது என்று முடிவானது. அதில் ஒரே ஒரு மாற்றம் ஒரே நேரத்தில் இரண்டு முயற்சியையும் மேற்கொள்வது என்பதுதான் அது.


கருடனும் நாகமும்

**எழுதுவது**
**சிவன்**

ஒன்றுக்கொன்று போராடும்போது நாகத்தின் வாயிலிருந்து விழும் மாணிக்கத்தை, மண்ணில் விழாமல் பெண் குழந்தை கவனித்துக் கொள்ளட்டும். திட்டத்தை இப்படி அமைத்துக் கொண்டதால் எங்குமே எந்தவிதமான தவறும் நடக்க வாய்ப்பில்லை.

அதே நேரம் தேவதத்தனும் குமாரும் நாகமாணிக்கத்தைப் பற்றியே விவாதித்தனர். பிரஸ்னம் பார்த்தபோது மாணிக்கம் இருப்பது உறுதியானது அத்துடன் மற்றொரு செய்தியையும் குறிப்பிட்டார்.

"ஸ்ரீதேவி நினைத்தால் நாகமாணிக்கத்தை எடுக்க முடியும். அவளால் சுலபமாகக் கோயிலுக்குள் நுழையவும் முடியும். நாகம் அவளைத் தீண்டாது. தீண்டினாலும்



அவளுக்கு அதனால் எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது.

ஆனால் பகவதி கோயிலுக்குள் இருக்கும்போது மாணிக்கத்தை எடுக்க வாய்ப்பே இல்லை. தனது கழுத்தில் கிடக்கும் நாகத்தின் வாயிலிருந்து மாணிக்கம் பறிபோவதை அவர் விரும்ப மாட்டார். ஒப்புக் கொள்ளவும் மாட்டார்."

நம்மளோட நோக்கம் மாணிக்கம் எதிராளிங்க கைக்குப் போய்விடக் கூடாதுங்கிறதுதான்" - குமார் நினைவூட்டினார்.

அப்போது நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

குமாரின் மனையின் வராந்தாவில் அமர்ந்துதான் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

பூஜையறை வாசலில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வராந்தாவை ஒட்டியிருந்த உள்ளறையில் அமர்ந்தபடியே ஸ்ரீதேவி அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று முகத்தை நிமிர்த்திய தேவதத்தனுக்கு தெரு வாசற்படியில் யாரோ நிற்பது போலத் தெரிந்தது. அதை மிகவும் ரகசியமான குரலில் குமாரிடம் தெரிவிக்கவும் செய்தார்.

உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த குமார் உடனே தெரு வாசற்படியை நோக்கி ஓடினார்.

அவர் தெருவாசற்படியை நெருங்குவதற்குள் பந்தயத்தில் ஓடுவது போல் யாரோ அவருக்கு முன்னால் ஓடுவது தெரிந்தது.

சட்டென்று மறையவும் செய்தது.

"நீங்கள் சொன்னது உண்மைதான். நான் போய்ச் சேருவதற்குள் அங்கிருந்து ஓடிவிட்டதால் ஆளை அடையாளம் தெரிந்து கொள்ளக்கூட முடியவில்லை", - திரும்பி வந்த குமார் தெரிவித்தார்.

"ஒருவேளை வந்திருந்தது கோவிந்தனாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணிக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்திருக்கலாம் நமது எதிராளிகள்." திருமேனி கூறினார்.

"வந்தவன் கோவிந்தனாக இருந்தால் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகத்தான் அர்த்தம்." -குமார் கூறினார்.

"இதே மாதிரி நமது எதிராளியின் நடவடிக்கையைத் தெரிந்து கொண்டு நம்மிடம் சொல்ல யார் இருக்கிறார்கள்?"

"நான் போகட்டுமா?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

"ரொம்பவும் நல்ல விஷயம்!" -திருமேனி மகிழ்ச்சியுடன் கூறினார்.

ஸ்ரீதேவி உடனே அங்கிருந்து மறைந்தாள். அவள் சந்து நாயரின் தேங்காய் கோடௌனை அடைந்த போது ஜயந்தனும். அவரும் தங்களது பேச்சின் இறுதிக் கட்டத்துக்கு வந்திருந்தனர். அதனால் அவளால் எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இருப்பினும் ஒரு பெண் குழந்தையைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டது கேட்டது.

ஜயந்தன் சட்டென்று பேச்சை நிறுத்தினார்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# ஞானிகள் காட்டும் வழி

**விஞ்ஞான** பூர்வமாக தியானத்தை அறிந்து கொள்ளும் போது 'படித்தவர்'களுக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிறது. நம்பலாம் என்று எண்ணுகின்றனர். விஞ்ஞானம் சுமார் இருநூறு ஆண்டுகளில் வளர்ந்த அறிவு. இதன்மூலம் எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் போதுதான் பலருக்குத் திருப்தி ஏற்படுகிறது.

மனித சமுதாயம் வளர வளர தர்க்கவாத அறிவில் - காரண காரியம் காட்டும் அறிவில் - நாம் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்துவிட்டோம். நியாயமான முறையில் ஆதாரத்துடன் வாதம் செய்பவர்கள் நம்மை ஈர்க்கிறார்கள். ஆனால், நமது முன்னோர்களும் ஞானிகளும் சட்டென்று சில உண்மைகளைக் கண்டார்கள், கடைப்பிடித்தார்கள், பலன் கண்டார்கள். நியாயவாதங்களினால் தங்களது தர்க்கவாத அறிவைத் திருப்திப்படுத்தி விட்டுத்தான் உண்மைகளை அறிந்து கொள்வேன் என்று அவர்கள் வளாவிருக்கவில்லை.

ஒரு விடுகதைக்கு, ஒரு புதிருக்குச் சட்டென்று விடை காண்பதுபோல நமது ஆழ்மனம் சில உண்மைகளை, காரண காரியம் காட்டும் அறிவுலகைத் தாண்டி எடுத்துக் காட்டுகிறது.

அந்தக் காலத்தில் ஹார்ட்வார்ட் பல்கலைக்கழகங்கள் இல்லை. சில பெரியவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் சென்று தெரிந்துகொள்ள விரும்பியவர்கள், தெரிந்து கொள்ள முயன்றார்கள். அந்தப் பெரியவர்கள் சொல்லிக் கொடுத்த பாடம் என்ன? சொல்லிக் கொடுத்த முறைகள் யாவை? இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முயல்வோம்.

தியானமும், யோக முறைகளும் நமக்குச் செய்யும் நன்மைகளை விவரமாகக் கேட்ட பல அமெரிக்க இளைஞர்கள், கலிபோர்னியாவிலிருந்து ஒரு விமானத்தை இதற்கென 'சார்ட்டர்' செய்து இமயமலையின் அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தனர். ஞான மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளப் போகிறோம் என்ற கரை கடந்த உற்சாகத்தில் அவர்கள் இருந்தார்கள். பெரிய மாறுதலையும், ஞானோதயத்தையும் எதிர்பார்த்த வண்ணம் ஞானியை அணுகினார்கள்.



'குருவே! தியான மார்க்கங்களை அறிந்துகொள்ள அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறோம்'' என்று ஆவலை வார்த்தைகளால் வெளியிட்டார்கள். ஞானி கூறினார்: சுவரைப் பார்த்து உட்கார்ந்து எத்தனை மூச்சு விடுகிறீர்கள் என்பதை எண்ணிக் கொண்டிருங்கள், வருகிறேன்'' என்றார்.

வந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாய்ப் போய்விட்டது. 'என்ன இது! எவ்வளவு தொலைவிலிருந்து, எவ்வளவு எதிர்பார்த்து ஆர்வத்துடன் வந்திருக்கிறோம். மனிதர் ஒன்றும் புரிந்து கொள்ளாதவராக இருக்கிறாரே, என்ன ஞானி இவர்!' என்று எண்ணினார்கள்.

பெரிய பிரசங்கத்தின் மூலம், உபமான உபமேயங்களுடன் தர்க்கவாதமாக, நமது ஊர் அரசியல் வாதிகள் போல போதையூட்டும் வண்ணம் எல்லாவற்றையும் விளக்குவார்கள் என்று பலர் எதிர்பார்க்கிறார்கள். அங்கே விளக்க ஒன்றும் இல்லை. அது ஓர் அனுபவம். அது ஒரு சுயமுயற்சி. அதற்குப் பொறுமை தேவை. விடாமுயற்சி தேவை.

ஞானிகள் வெவ்வேறு நாடுகளில் இதை எப்படி அணுகுகிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

தியானம் என்பது புத்தர் காலத்தில் சைனாவுக்குச் சென்று 'சேன்' என்ற பெயரைப் பெற்றது. பின், ஜப்பானுக்குச் சென்று 'சென்' என்று ஆகிறது. இப்போது அதையே 'சென் புத்த மதம் என்று' அழைக்கிறார்கள்.

சென் புத்த மதத்தைச் சேர்ந்த துறவிகள் தங்கள் மாணவர்களுக்குப் போதித்ததைக் குட்டிக் கதைகளாகத் தொகுத்திருக்கிறார்கள்.

அந்தக் குட்டிக் கதைகள் எல்லாம் விடுகதைகளாகப் புதிர்களாக இருக்கின்றன. தர்க்கவாத அறிவின் பயனற்ற தன்மையை வெளிப்படுத்தி, மாணவனை நேரடியாக 'உணர'ச் செய்யும் வழியே சென் மார்க்கமாகும். உணர்கின்ற நிலையை மகாசூன்யம் என்றார்கள். இவ்வுலகமும், இப்பிரபஞ்சமும் உருவாவதற்கு முன்னிருந்த ஒரே பொருள்தான் மாசூன்யம் என்கின்றனர். அந்த நிலையை ஜப்பானிய மொழியில் 'சட்டோரி' என்று கூறுகின்றனர்.

அந்த 'உணர்வு' எதை உணர்த்துகிறது? இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் ஒரே சக்தி உலவி நிற்பதை; இரண்டாவதாக எல்லா பொருள்களும், உயிர்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருப்பதை.

நாம் எல்லாவற்றிலும் இருக்கிறோம் என்பதையும், அந்த எல்லாப் பொருள்களும், நம்மில் வாழ்கின்றன என்பதும்தான் அந்த மகத்தான உண்மையாகும். இதனால் வாழ்க்கை ஓர் இனிமையுடன், அமைதியுடன் இயங்குகிறது. நமது ஆணவம், வறுமை, பயம், வலி, நோய், குறைகள் அனைத்தும் அங்கே அந்த எண்ணத்தில் ஒன்றாகக் கரைந்து மறைந்து விடுகின்றன.

மலையிடத்தும், மண்ணிடத்தும், சிறு குளவியிடத்தும் நாம் அன்பு செலுத்துகிறோம். புல்லும், நுண்ணுயிரும் ஒரே படைப்பின் வேறு உருவங்கள் என்று உணரும்போது நமது மனோபாவமே மாறுகிறது. எதிலும் ஒரு சகிப்புத் தன்மை, அன்பும் நம்மிடை பரவுகிறது. பொங்கி வழிகிறது. செய்யும் வேலையில் உயர்வு தாழ்வில்லை, அது ஓர் இயக்கம் என்று நமது பணிகளில் ஈடுபடுகிறோம். எதிரி என்று யாரும் இல்லை, இப்போது. அறியாதவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுதாபம் காட்டுகிறோம்.

"பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே, பகைவனுக்கருள்வாய்... பகை நடுவினில் அன்புருவான நம் பரமன் வாழ்கிறான்" என்று பாரதியார் பாடும்போது, பாரதியைச் சாதாரணக் கவிஞனாக நான் காண்பதில்லை. சோதியில் சோதியாய் நிற்கும் ஞானியாய், குருவாய் நான் காண்கிறேன். "தின்னவரும் புலி, தன்னையும் அன்புடன் சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே! அன்னை பராசக்தி அவ்வுருவாயினள் அவளைக் கும்பிடுவாய்" என்று அவர் கைகூப்புகிறார்; மேல் நோக்குகிறார். நாமும் கைகூப்புகிறோம். மேல் நோக்குகிறோம்.

நம்மிடம் எழும் ஓர் ஐக்கிய உணர்வினை அறிந்து கொள்ளவும், வளர்க்கவும், நாம் அன்றாட வாழ்வில் உதவும் நினைவறிவுக்கு அப்பால் செல்ல வேண்டும். அதைத்தான் பெரியவர்கள் கூறினார்கள்.

டோயோ ஓர் இள மாணவன். தெரிந்துகொள்ள புத்த சங்கத்தில் சேர்ந்திருக்கிறான். பெரிய துறவி மோக்குராய் அவனுக்கு வழிகாட்டுவார் என்று எதிர்பார்த்து அங்குள்ள மணியை மெதுவாக அடித்து விட்டுத் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, அவர் முன் அமர்ந்தான். ஞானி கண் விழித்தார். "டோயோ! இரு கைகளையும் சேர்த்துக் கொட்டி சப்தம் எழுப்பு" என்றார். டோயோ அப்படியே செய்தான்.

"நல்லது, இப்போது ஒரு கையினால் ஒலி எழுப்பு" என்றார் குரு. டேயோ மௌனமானான். முடிவில் வணக்கத்தைத் தெரிவித்து விட்டு, அது பற்றிச் சிந்தித்துக் கொண்டே வெளியேறினான். மீண்டும் திரும்பி வந்த போது ஒரு கையினால் சென்று மணியைத் தட்டி ஒலியை எழுப்பினான். "அது அல்ல" என்றார் ஞானி. மறுநாள் வந்தபோது ஒரு கையினால் இசைக் கருவியை மீட்டினான். "அல்ல" என்றார் குரு. அடுத்து வந்தபோது, ஒரு கையினால் தண்ணீரைப் பாத்திரத்திலிருந்து கீழே கொட்டி ஒலி எழுப்பினான். "ஹூம். இல்லை" என்றார் அவர். டோயோ பல நாள் முயன்றான். முடிவில் அவரிடம் வருவதை நிறுத்திவிட்டான். ஓராண்டு காலம் எல்லாவற்றையும் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தான். பிறகு ஞானியிடம் வந்தான். வணங்கினான். "குருவே! எனக்கு அந்த சப்தம் கேட்டது. அந்த சப்தமில்லா சப்தத்தை.... ஒரு கை உண்டாக்கும் சப்தத்தை... நான் கேட்டேன்" என்றான்.

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழத்துப் போட்டி 172

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | ■ |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | 26 | ■ | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

#### இடமிருந்து வலம்

1. அகர வரிசை சொற்பொருள் நூல்.
7. சொர்க்கத்தின் எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது).
13. புதுமை என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
21. வட்டத்தின் குறுக்குவெட்டு அல்லது குறுக்களவு (குழம்பியுள்ளது).
29. சிரசு (திரும்பியுள்ளது).
31. குரங்கு (குழம்பியுள்ளது).

#### மேலிருந்து கீழ்

1. பாம்பு (குழம்பியுள்ளது).
2. விரல்களின் அங்கம் அல்லது பங்கு (குழம்பியுள்ளது).
3. பன்றி என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
4. மனஉறுதி அல்லது நிச்சயம் (குழம்பியுள்ளது).
6. அழகிய பேசும் பறவை.
23. பெறுமதி என்றும் கூறலாம்.
24. சுவடு என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
26. பிரபல இசையமைப்பாளர் ஒருவர்.

#### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.06.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-172
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 170க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

அனீஸா அல் ஆஸாத், புன்னைக் குடா வீதி, ஏறாவூர் - 03.

#### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
2. திருமதி. சந்திரா ரவீந்திரன், 'திருவேரகம்', தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
3. எம்.சி.கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05.
4. எம். நடேஸ், பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி.
5. வி. மயூரன், இம்புட்டான தொடர்மாடி, முல்லேரியா.
6. ஆர். கார்த்திகேசு, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
7. ஆர். வினோ, அரசடி வீதி, சாவகச்சேரி.
8. முஸ்தபா அஹமட், அகமட் குடியிருப்பு, வவுனிக்குளம்.
9. ச. நிவேதா, பருத்துறை வீதி, அச்சுவேலி.
10. வி. மாடசாமி, ஹாவ எலிய, நுவரெலியா.

#### குறுக்கெழுத்துப் போட்டி 170 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸி 1 | ல் 2 | ஓ 3 | சி 4 | ■ | ரி 6 |
| தா 7 | டி 8 | ■ | ன் 10 | ய 11 | ந 12 |
| ம 13 | வி 14 | ம் 15 | ற 16 | ■ | ■ |
| க 19 | ■ | ட 21 | ம் 22 | இ 23 | ம 24 |
| ன் 25 | தா 26 | ச 27 | ■ | வி 29 | சு 30 |
| ■ | மா 32 | ■ | வி 34 | ர 35 | மை 36 |

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது றாஹில்

### பசளை

**மனதில்** புயல் முளைக்கிறது.

உன் உணர்வுகள் வெந்நீர் மழை குடிக்கின்றன.

சோகங்களால் நீ அடிக்கடி கொல்லப்படுகிறாய்.

உனது நரம்புகளில் கண்ணீர் ஓடுகின்றது.

கண்ணுக்குத் தெரியா காயங்களால் நீ சுற்றி வளைக்கப்படுகிறாய்.

உன்னை வலை வீசிப் பிடிக்கிறது கவலை.

உனது சந்தோசத்தின் ஆயுள் சில நொடிகளே!

சோகங்களோ உன்னில் தழும்புகளாக நிலைக்கின்றன.

உன்னை நீ பெரு மூச்சுகளால் நிரப்புகிறாய்.

பயத்தின் வாலைப் பிடித்துக் கொண்டு அலைகிறாய்.

பயம் உன்னைப் படிப்படியாகச் சாப்பிடுகிறது.

உனது நாட்களில் நோய் பிடிக்கிறது.

உன் நேரங்களில் முள்தைக்கிறது.

இப்படி கவலைகளால் நீ கைது செய்யப்படுகிறாயா?

நீ பரீட்சைக்குத் தோற்றுகிறாய்

சோகங்களை முழுமையாக அனுபவி!

சோகம்; உன்னை உனக்கே அறிமுகப்படுத்தும் நண்பன் என்று தீர்மானி!

கவலைகளை உடைத்துப்பார்! நீ கிடைப்பாய் உனக்கு.

அனுபவ நீர்ப்பாய்ச்சி நீ உன்னை வளர்க்க வேண்டாமா?

உனது இதய வாசலுக்கு நீ இரும்புக் கதவு போடவேண்டாமா?

கவலை உன்னை செழிப்பாக வளர்க்கும் பசளை.

உனது குளம் சோகத்தால் நிரம்பும் போது ஓடை உண்டாக்கித் திறந்து விடு!

தீர்ந்து போவதுதான் சோகங்களின் சிறந்த பண்பு.

முள் முளைக்கின்றதே என்று ரோஜாச் செடி கவலை கொள்வதில்லை. அது பூவுக்குப் பாதுகாப்பு.

அலையடிக்கிறதே என்று கடல் கவலை செய்வதில்லை.

மழை மேகம் திரள்கிறதே என்று நிலா நினைப்பதுமில்லை.

நீ உனது பயத்தைப் புதைத்துவிடு! அதன் மீது நீ பயணப்படுவதையும் நிறுத்திவிடு!

பயமில்லாத கவலைகளால் நீ பட்டை தீட்டப்படுகிறாய்.

படைத்தவன் பெயரைக் கவலைகள் தான் உனக்குச் சொல்லிக் கொடுக்கின்றன.

இருள்வந்து உனக்குள் அமரும்போது சூரியனைப் பிடித்து வை!

ஒரு புயல் வந்து உனக்குள் மையம் கொள்ளும்போது இறைவனை உனக்குள் நிரப்பி வை!

# தொலைந்து போன வசந்தம்

**அன்று** வெள்ளிக்கிழமை. அவசர அவசரமாக வேலைக்குச் செல்வதற்காக புறப்படத் தயாரான நிலா, வானொலியில் அந்தப் பாடலைக் கேட்டதும் ஸ்தம்பித்துப் போனாள். தன் நிலை மறந்து கண்கள் இரண்டிலும் கண்ணீர் ததும்ப நின்ற நிலாவை "என்னம்மா நிலா எட்டு மணியாச்சே புறப்படலையா?" எனக் கேட்ட தாயின் குரல் கேட்டு வழமைக்குத் திரும்பிய நிலா, கண்களைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வேலைக்குப் புறப்பட்ட நிலாவின் சிந்தனையோ தான் கேட்ட பாடல் பற்றியதாகவே இருந்தது. அப்பாடலில் வந்த "அவன் இருந்த போது ஏற்க மறுத்தாள்; அதுதான் பிடிவாதம். அவன் பிரிந்த போது பார்க்கத் துடித்தாள்; அந்தோ பரிதாபம்." எனும் வரிகள் அவளைப் பெரிதும் பாதித்தன பாடல் சிந்தனையூடே அவளது கடந்த கால சிந்தனையும் சுழன்று கொண்டிருந்தது.


நிலா ஒரு கூலித் தொழிலாளியின் மகள். அவளுக்கொரு தம்பி. நிலா படிப்பில் நல்ல ஆர்வம் கொண்டவள், கெட்டிக்காரி. ஏழையானாலும் தனது பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பது நிலாவின் பெற்றோரின் இலட்சியம். அப்போது நிலா க்.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம்தான் அடுத்த வீட்டு அன்ரியின் உறவுப் பையன் என்று ரவீந்திரன் அறிமுகமானான். ரவி வெளியூர் செல்லும் விடயமாக அவனது உறவினர் வீட்டில் சில மாதங்கள் தங்கியிருந்தான். அவன் அங்கு வருவதற்கு முன்பிருந்தே அடுத்த வீட்டு அன்ரிக்கும் நிலாவுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தது. இருந்தும் ரவி அங்கு வந்ததில் இருந்து நிலாவிற்கு சற்று தயக்கமாகவே இருந்தது.

ரவி, நிலா இருவரும் இனிய நண்பர்களாய் அறிமுகமாகி, பழகத் தொடங்கினார்கள். ரவியோ அன்பாகவும் அமைதியாகவும் நிலாவுடன் பேசலானான். நாட்கள் நகர்ந்தன. அறிமுகம் அரும்பாகி அழகிய மலர்கள் மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு உறவாடினார்கள். அவர்கள் எவ்வளவுதான் நெருங்கிப் பழகினாலும் மனதில் உள்ளதை நேரடியாகக் கூறுமளவிற்கு இருவருக்கும் தைரியம் இல்லை. ஆம், காலப் போக்கில் காதல் எனும் சிறையில் ரவி சிக்குண்டான். கவிதை எனும் மடல் காதல் தூதாய் நிலாவின் கரம் சேர்ந்தது. பிரித்த நிலாவிற்கோ "அடுத்த வீட்டுக் காதலிக்கு" எனும் தலைப்பின் கீழ் "அர்த்தமற்ற உன் புன்னகையால் ஆதாரம் நாடும் இவனுக்கு அன்புப் பதில் ஒன்றை எதிர்பார்க்கிறேன்......" என மடல் தொடர்ந்தது.

ஆம், அம்மடலில் ஒரு வரி "என்னைப் பிடிக்கவில்லையென்றால் இம்மடலை திருப்பி அனுப்பிவிடவும்" என்றிருந்தது, மடலைப் பார்த்த நிலாவிற்கோ ஒரே நடுக்கம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அம்மா, அப்பா, படிப்பு என்றிருந்த நிலாவிற்கு காதலின் அர்த்தம் புரியவில்லை. மடலை பத்திரமாய் ரவியிடம் திருப்பி அனுப்பிவிட்டாள்.

அதன்பின் அன்ரியின் வீட்டிற்குச் செல்வது அவ்வளவு சரியில்லை என நிலா நினைத்தாள்.




ஆனால் அவள் வழமை போல் செல்ல வேண்டும் என்பது நிர்ப்பந்தமாய் இருந்தது. அவள் செல்லாவிட்டால் காரணம் எல்லோருக்கும் கூற வேண்டுமே! ஆனால் ரவியோ அவளுடன் கதைப்பதையோ பழகுவதையோ நிறுத்தவில்லை வழமைபோல் பழகலானான். நிலாவும் யாரிடமும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

ரவி வெளியில் செல்லும் போதெல்லாம் ஏதாவது வாங்கி வருவான். நிலா வாங்கவில்லையானால் ஏதாவது பேசுவான். இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் இருவருக்கும் பழக்கத்தை அதிகரித்தது. காலப்போக்கில் நிலாவின் மனதில் ரவி இடம்பிடிக்க ஆரம்பித்தான். இருந்தாலும் தன் விருப்பத்தை வெளிப்படுத்தத் தயங்கினாள். அவள் மனதிற்குள்ளேயே ஆசைகள் அடக்கப்பட்டன. காலம் கடந்தோடியது. நிலாவின் பெறுபேறும் வந்தது. நினைத்தது போல் எல்லாப் பாடங்களிலும் நிலா சித்தி பெற்றிருந்தாள். எல்லோருக்கும் அளவற்ற ஆனந்தம்.

காலம் காத்திருப்பதில்லை. உயர்தரம் கற்பதற்காய் நிலா பாடசாலை செல்லத் தொடங்கினாள். இவ்வேளையில் ரவியும் வெளியூர் செல்ல ஆயத்தமானான். ஆம் இரண்டே இரண்டு நாட்களில் சென்று விடுவான் ரவி. தன் நிலையை நினைத்து அழுதாள் நிலா. ரவி எத்தனையோ முறை அவன் காதலை வெளிப்படுத்தும் போதெல்லாம் புரிந்தும் புரியாததுபோல் நடித்தாளே. இன்று அவள் நிலையை ரவி புரிந்து கொள்வானா? அவளது வினாவுக்கு விடை அவள் கண்ணீராகவே இருந்தது.

அவளது சொல்லாத காதல், செல்லாத காசாய் மாறிவிடுமா? தவித்தாள், ஏங்கினாள். யாரிடம் சொல்வாள் தன் வேதனையை? ரவி சென்றுவிட்டால் எப்படி மறப்பது அவனை, அவன் செயல்களை? ஆம் மறுநாள் காலை இருவரும் அருகருகாய் நின்று கொண்டிருந்தனர். நிசப்தம் நிறைந்த வினாடியாய் கழிந்தது. ரவி பிரிவுத் துயருடன் விடை பெற்றான். நிலாவோ தன் மனதைச் சொல்லவில்லையே எனும் ஏக்கம், தவிப்பு, வேதனை, அழுகை நிறைந்த மனதுடன் உதட்டோரப் புன்னகையுடன் விடை கொடுத்துவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டாள்.

ரவி வெளியூர் சென்று இன்று இரண்டு, மூன்று வருடங்கள் கடந்து விட்டன. ரவியிடம் இருந்து மடலோ, தொடர்போ நிலாவுக்கு எதுவும் இல்லை. அவளோ அன்றிலிருந்து இன்றுவரை அவனையே நினைத்து தவிக்கின்றாள். கடந்தகால சிந்தனையில் மூழ்கிய நிலாவை, "என்ன நிலா யோசனை பலமா இருக்கு?" என்ற நண்பியின் குரல் வழமைக்கு நிலாவை கொண்டு வந்தது. வேலை முடிந்து தாமதமாகவே நிலா அன்று வீடு சென்றாள்.

வீடு சென்ற நிலாவிற்கோ ஆச்சரியம் காத்திருந்தது. நிலாவின் அம்மா ஒரு மடலை அவள் பெயருக்கு வந்ததாகக் கூறி கொடுத்துவிட்டுப் போனாள். அவசர அவசரமாக பிரிந்த நிலாவிற்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆம், அது ரவியினால் எழுதப்பட்டிருந்தது. "அன்பே நிலா உனக்காக நான் இன்றுவரை காத்திருக்கிறேன். எனக்காக நீ இன்னும் இருப்பாய் எனும் நம்பிக்கையில்" அடுத்த மாதம் நான் இலங்கை வருகிறேன் என ஏழுதப்பட்டிருந்தது. வசந்தம் தொலைந்து போன நிலாவினது வாழ்வின் வெற்றிடம், ஆயிரம் கோடி வசந்தப் பூக்களால் பூரணப்படுத்தப்பட்டது. அவளது கற்பனைகள் அப்பொழுதே... கடல் தாண்டித் தத்தளித்தது.

*(யாவும் கற்பனை)*

# ஏழைக்கும் விடிவுண்டா?

**காலைத்** தென்றல் இனிமையாக வீசிக்கொண்டு இருக்கையில் அதன் அசைவிற்கு ஏற்ற மாதிரி தலையை ஆட்டிக் கொண்டு இருந்தன அங்கு நின்ற மரங்கள். அந்த அசைவையும் அழகையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் கவிதா. தனது வாழ்க்கையும் இப்படித்தானே அசை போட்டது? என நினைத்து மனம் பொறுக்க முடியாமல் அழுதே விட்டாள். கவிதா, ஒரே ஒரு செல்லப்பிள்ளை. மிகவும் சந்தோசமாக இருந்தாள். அந்தச் சந்தோசமான வாழ்க்கை இனியும் வருமா என அவள் மனதில் ஓர் கேள்விக்குறி எழுந்தது. கவிதா அந்தக் கடற்கரை ஓரமாக நின்ற அரச மரத்தடியில் ஒவ்வொரு நாளும் வந்து இருப்பாள். அங்கு வருபவர்கள் எல்லோரும் கவிதாவைப் பார்த்து ஏளனம் செய்வார்கள். ஒரு நாள் அதே மாதிரித்தான் கவிதா மர நிழலில் இருந்து கடலலையை ரசித்துக் கொண்டிருக்கையில், அங்கு வந்திருந்த இரு இளைஞர்கள் கவிதாவைப் பார்த்து ஏளனம் செய்தனர். அதைத் தாங்க முடியாத கவிதா அழுதே விட்டாள். இதையெல்லாம் அவதானித்துக்கொண்டு நின்ற ஒரு பெண், அவளைப் பார்த்து கவலைப்பட்டாள். அவள் ஏன் அழுகிறாள் என்பதை அறிவதற்காக அவள் அருகே சென்று "ஏன் அழுகின்றீர்கள்?" என ஒரு வினாவை தொடுத்தாள். ஆனால் கவிதாவோ ஒன்றுமே கதைக்காமல் இருந்தாள். அப்போது அங்கு சென்ற பெண் தன்னைப்பற்றி அறிமுகம் செய்தாள். "எனது பெயர் பிரியா. என்னை உங்கள் நண்பியாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னவுடன் கவிதா மனதில் சந்தோசம் தோன்றியது. அந்தச் சந்தோசம் முகத்தில் பூவாய் மலர்ந்தது. அதைப் பார்த்த பிரியா சந்தோசப்பட்டாள். அதன் பிறகு கவிதா தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். "எனது பெயர் கவிதா. எனது அப்பா பெயர் சுப்பிரமணியம். அம்மா கல்யாணி. நான் ஒரே ஒரு செல்லப்பிள்ளை. மிகவும் செல்லமாக இருந்தேன். நான் A/L படித்துக்கொண்டு இருக்கையில் ராஜா என்றொருவன் என்னைக் காதலிக்கிறதாக என்னிடம் சொன்னான். ஆனால் அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு நாள் அவன் என்னை இடைமறித்து "ஹலோ பிளீஸ் நான் சொல்வதைக் கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள்" என்று கூறினான். "சரி, சீக்கிரமாக சொல்லுங்க. பாடசாலைக்கு நேரமாச்சு" என நான் கூறியதும், அவன் சொல்ல ஆரம்பித்தான். "எனக்கு உங்களை ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு. கல்யாணம் செய்வதென்றால் உங்களைத்தான் செய்வேன். இல்லாவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாகச்" சொன்னான். அன்றில் இருந்து பாடசாலைக்குப் போகவே எனக்குப் பயமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் அவனின் தொல்லை தாங்க முடியவில்லை. திடீரென்று ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு ராஜாவும் அவனின் பெற்றோரும் வந்தார்கள். எங்கள் அம்மாவும் அப்பாவும் அவர்களை வரவேற்று உட்காரவைத்தார்கள். அப்போது ராஜாவின் அம்மா பேச்சை ஆரம்பித்தார். தங்கள் மகனுக்கு பொண்ணு பார்க்க வந்தோம் எனச் சொன்னார். இதைக் கேட்ட அம்மாவிற்கும் அப்பாவிற்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை.

ராஜா, கவிதாவை மனப்பூர்வமாகக் காதலிக்கின்றான். கல்யாணம் செய்தால் உங்கள் பெண்ணைத் தான் கல்யாணம் செய்வானாம். நீங்க எதையும் யோசிக்காதீங்க. சீதனம் எதுவும் வேணாம். உங்க பெண்ண மட்டும் கொடுத்தால் போதும் என்றார் ராஜாவின் அம்மா. எவ்வளவு தான் சொன்னாலும் எனக்கு சம்மதம் இல்லை. ஆனால் எங்கள் அம்மா எப்படியோ சம்மதம் வாங்கிக் கொண்டார். நான் ஒப்புக் கொண்ட பின் ராஜாவுக்கும் எனக்கும் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டது.




இப்படியாக நாட்களும் நகர்ந்தன; மாதமும் நகர்ந்தது. ஒரு நாள் திடீரென்று அப்பாவிற்கு நெஞ்சு வலி வந்தது. அப்போது நானும் அம்மாவும் அழுது குளறி பக்கத்து வீட்டுக்காரரை அழைத்து அப்பாவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அங்கு தான் விதி விளையாட ஆரம்பித்தது. அப்பாவை கொண்டு போய் ஒரு மணித்தியாலத்தின் பின் அப்பா எங்களை விட்டுப் பிரிந்தார். இந்த வருத்தம் அப்பாவிற்கு பழைய வருத்தம். ஆனால் அன்றைக்குத்தான் தெரியும் எனக்கு அப்பாவிற்கு இப்படி ஒரு வருத்தம் இருக்கிறது என்பது. அப்பா இறந்த பின் நானும் அம்மாவும் தனி மரமாக நின்ற போது யாரும் ஆறுதல் சொல்லவில்லை. இதை நினைத்து நினைத்தே அம்மா அழுவார். அந்தச் சூழ்நிலையில் இருக்கையில், அப்பா இறந்து இரண்டு மாதம் கூட ஆகி இருக்காது. அம்மாவும் அப்பாவை பின் தொடர்ந்துவிட்டார். அம்மா இறந்தது எனக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது மாதிரி இருந்தது. அம்மாவுக்கு செய்யவேண்டிய காரியங்களைச் செய்து விட்டு ராஜா வீட்டிற்குப் போனேன் போய் ராஜாவைக் கூப்பிட்டேன். ராஜா கேட்டான். என்ன பிச்சையா வேணும்" என்று. நான் நினைத்தேன் ராஜா ஏதோ விளையாட்டுக்குத் தான் அப்படி ஒரு கேள்வியை கேட்டான் என்று. உள்ளே போன போதுதான் என் தலையில் இடி விழுந்தது மாதிரி இருந்தது. ராஜா அந்தக் கேள்வியை உண்மையாகவே கேட்டு விட்டான். நான் அழுதேன்; குளறினேன். "என்ன ராஜா இப்படி கேட்கிறாய்? நான் உங்களுக்கு மனைவி ஆகப் போறவள் அல்லவா?" "அதற்கு அவன் மனைவியா? எப்பொழுது மனைவி ஆனாய்? இந்த அனாதைக்கு கல்யாணமா? நான் உன்னை கல்யாணம் செய்ய மாட்டேன்" எனக் கூறினான். அப்போது நான் "கல்யாணம் செய்ய மாட்டீங்க என்றால் ஏன் என்னைக் காதலிச்சீங்க?" "நான் காதலித்தேன். ஆனால் நீ காதலிக்க வில்லையே! உன்னை பழிவாங்கத்தான் நாங்க எல்லோரும் திட்டம் போட்டு பொண்ணு பார்க்க வந்தோம்" எனக் கூறினான். ராஜாவின் அம்மாவிடம் போய் காலைப் பிடித்து கெஞ்சினேன். ராஜாவின் அம்மா தள்ளி விட்டார். அதற்குப் பிறகும் நான் உயிரோடு இருப்பதா என நினைத்துக் கொண்டு ஒரு கிணத்தில் விழுந்தேன். நான் விழுந்ததை ஒரு டாக்டர் கண்டு அவர் தான் காப்பாற்றினார். அவர் வெளி நாட்டில் இருந்து எங்கள் ஊருக்கு டாக்டராக வந்தவர். டாக்டர் கேட்டார் "ஏன் தற்கொலைக்கு துணிந்தீங்க" நான் நடந்தவற்றைக் கூறினேன். டாக்டர் சொன்னார் "ராஜாவுக்கு முன்னால் நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்." நான் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டு வந்தேன். அதற்குப் பிறகு இந்த கடற்கரைதான். தஞ்சம் இதைக் கேட்ட பிரியா அந்த டாக்டரை கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று கூறி அழைத்துச் சென்றாள். கவிதாவைக் கூட்டிக் கொண்டு போய் டாக்டர் சங்கரைப் பார்த்து விசயத்தைச் சொன்னாள். அதைக் கேட்ட சங்கர் சந்தோச வானில் பறந்தான். ஒரு நல்ல நாளைப் பார்த்து அம்மன் கோயிலில் வைத்து கவிதாவின் கழுத்தில் தாலி கட்டினான் சங்கர்.

கவிதா பிரியாவிற்கு நன்றி கூறினாள். இனிமேல் கவிதாவுக்கு எந்த விதக் குறையுமில்லாமல் எந்த நாளும் சந்தோசமாக இருப்பாள். அவளின் அப்பாவும் அம்மாவும் சாந்தி அடைவார்கள் என நினைத்துக் கொண்டு கவிதாவின் வீட்டை விட்டு வெளியேறினாள் பிரியா.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

"கைகளைத் தோளில் போடுகிறான் அதைக் கருணை என்றவன் கூறுகிறான் பைகளில் எதையோ தேடுகிறான் கையில் பட்டதை எடுத்து ஓடுகிறான்" என்றோர் கவிஞன் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. அதன் உட்பொருளை சற்று உன்னிப்பாகக் கவனித்தால் என்ன? என்ற எண்ணமும் தொடர்ந்தது. என்ன கொடுமை! தோழன் என்று நம்பியல்லவா தோள் மேல் கைவைக்கவிட்டேன். ஒரு கையைத் தோளில் போட்டுக் கொண்டு மறு கையால் என் சட்டைப் பையிலுள்ளதைத் தேடி எடுத்து விட்டானே! என்று பொருளைப் பறிகொடுத்தவன் புலம்புமளவிற்கு அவனை ஆளாக்கியது என்ன? அவன் இயல்பை ஆராயாமல் அவனோடு ஏற்பட்ட போலியான நட்புத்தானே? தோழமையின் நோக்கமென்ன? தோழன் என்பவன் யார்? என்ற கேள்வி மனதில் எழுமானால்' உண்மையான தோழனைக் காண்பது அரிதல்ல.

*"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்*
*வீடில்லை நட்பாள் பவர்க்கு"* குறள் - 791.

நன்றாக ஆராயாமல் நட்பு கொள்ளுவது கேடானது. ஆனால் உண்மையான நட்புக் கிடைத்துவிட்டால் அந்த நட்பினின்று விடுபடவே முடியாது.

## சிந்தியா பதில்கள்

**சிறிய விடயங்களுக்கெல்லாம் கோபப்படுபவர்களை என்ன செய்ய லாம்?**

-எம்.ஜே.சியாம், கல்முனை.

பெரிய விடயங்களுக்கெல்லாம் கோபப்படாமல் இணங்கிப் போகிறார் களே என்று ஆறுதல் படலாம்.

**சிந்தியா! உமக்கு அறிவுரை கூறுவது பிடிக்குமா அல்லது அறிவு ரைகளை ஏற்று நடப்பது பிடிக்குமா?**

-ப.கீதா, வந்தாறுமூலை.

கேட்பவருக்குக் கூறுவதும், கூறுபவர் களிடமிருந்து கேட்டுக் கொள் வதும் பிடிக்கும்.

**உம்முடைய நகைச்சுவை கேட்டு நாளாகிறதே?**

-பா.கண்ணன், மட்டக்களப்பு.



*ஒருவன் :-* நம்ம தலைவரிடம் புத்த கத்தை நீட்டினால் மூக்கைப் பிடிக்கி றாரே ஏன்?

*மற்றவன் :-* அவருக்குத்தான் படிப்பு வாசனையே பிடிக்காதே (படித்தது).

**சிந்தியா! தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களில் யாருக்குச் சிறந்த செவாலியே விருது கொடுக்கலாம்?**

-மு.மன்மதராஜன், பண்டாரிக்குளம்.

எல்லோரும் அதற்குத் தகுதி யானவர்கள் தான். ஒருவருக்குக் கொடுப்பது ஓரவஞ்சனையாகி விடும். ஆளை விடுங்கள்.

**எரிக் சொல்ஹெய்ம் இலங் கைக்கு வரும் போதும் சரி, இப்போது ஒஸ்லோவில் நடைபெறும் மாநாடு தொடர்பிலும் சரி அதீத எதிர்பார்ப்பு வேண்டாம் என்று நோர்வே முன் கூட்டியே கூறி வருகிறதே ஏன்?**

-த.காந்தரூபன், வெள்ளவத்தை.

தமது நம்பிக்கையற்ற நடவடிக் கைகளில் அதிசயம் எதுவும் நடந்து விட்டால் பெருமைப்பட்டுக் கொள்ள லாம். மற்றபடிக்கு ஒரு முன் எச்ச ரிக்கை நடவடிக்கைதான்.

**இலங்கை விவகாரத்தில் மத்திய அரசின் நிலைப்பாடுதான் தமி ழகத்தின் நிலைப்பாடும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி கையை விட்டு விட்டாரே...?**

-க.சுரேஸ், குருமண்காடு.

நாம் தான் நாட்டின் இறைமையை மதிப்பதில்லை என்பதற்காக அவரை யும் அந்த வரிசையில் இணைத்து சிந்தித்தது உங்கள் தவறு. வீணாக அவரையேன் நொந்து கொள்கிறீர்கள்.

**'டாவின்சி கோட்' திரைப் படத்தை இலங்கை உட்பட சில நாடு களில் தடை செய்துள்ளார்களே, ஏன்?**

-பி.முகுந்தன், கண்டி.

நீங்கள் சந்தேகத்தோடு கேட்பது போல் அது ஆபாசப்படமில்லை. அப் படி இருந்திருந்தால் "வயது வந்தவர் களுக்கு மட்டும்" என்று ஒரே ஒரு வரியோடு அது அனுமதிக்கப்பட் டிருக்கும். இது ஆன்மீக நம்பிக்கை களை விமர்சிக்கும் படம்.

**இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகளை சமன் செய்து கௌரவத்தோடு நாடு திரும்புகிறதே; அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-ஏ.எம்.பர்ஷான், நிந்தவூர்.

பாராட்டுக்குரியது. தொடர்ந்தால் நல்லது.

**சிந்தியா! என் கனவில் அடிக்கடி ஒரு இனந்தெரியாத முகம் வந்து போகிறது. அநேகமாக உமது முகமாக இருக்குமோ?**

-ஜெ.உஷாந்தி, நல்லூர்.

ஐயோ.... எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டத் தெரியாதே.

**எரிபொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறதே, சமாளிக்க என்ன செய்ய லாம்.**

-க.வைத்தியநாதன், கல்லாறு.

உலகமே எதிர்நோக்கியிருக்கும் பெரும் சவால் இதுதான். சமாளித் துத்தானாக வேண்டும்.

**புலிகளால் தமிழ் மக்களுக்கு கட்டாய ஆயுதப் பயிற்சி வழங்கப் படுவதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?**

-இரா.பாலமுருகன், அக்கரப்பத்தனை.

உண்மைதான். கட்டாயப்படுத்தி!

**படுகொலை நடக்குமளவுக் கும், கிளைமோர் வெடிக்குமளவுக்கும் வசதியான போர் நிறுத்த ஒப்பந் தத்தைச் செய்த ரணில் விக்கிரமசிங்க அரசின் செயலை எதற்கு ஒப்பிடலாம்?**

-கி.நிரோஷன், ரத்மலானை.

தேசத் துரோகம் என்று நான் சொல்வது நன்றாக இருக்காது. யாராவது காவி போர்த்திக் கொண்டு சொன்னால் பொருந்தும். என்னை ஏன் வம்பில் மாட்டி விடப்பார்க்கின்றீர்கள்.

**ஒற்றையாட்சியா, சமஷ்டியா என்ற இழுபறி இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரப்போகிறது?**

-கே.நிலான், உவர்மலை.

இந்தப் பட்டிமன்றம் முடிவுக்கு வரும் வரை.

**சிந்தியா! சிங்கள அரசாங் கத்திடம் பேச்சு நடத்தி அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகிறீர்களா?**

-வை.ஏகாம்பரம், செங்கலடி.

நம்பிக்கையோடும், இதய சுத்தி யோடும் பேசினால் சாத்தியம் என்று தான் நம்புகிறேன்.

**புதுப்பேட்டை பார்த்துவிட்டீர் களா?**

-து.பரிமளா, லிங்கநகர்.

தனுஷை தாதாவாகப் பார்க்க முடிய வில்லையே.

**சிந்தியா! இப்போதைக்கு எத்தனை பேர் மாமனிதராகும் தகை மையைக் கொண்டிருக்கிறார்கள், அண்ணளவாகச் சரி சொல்லவும்?**

-க.பகிரதன், வவுனியா.

ஆ... ஒரு பேராசிரியர், ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளர், ஒரு செய்தி யாசிரியர், மூன்று பத்திரிகாசிரியர்கள், ஒரு ஆலோசகர் என்று பார்த்தால் 21+1+1+1+3+1 = 28. (இது எழுந்தமானமான கணக்குத்தான்).

# அன்பெனும் ஆழ்கடல் நீ!

தருவது **கற்பகன்**

"**அப்பப்பா!...** போதும் நிறுத்துங்கள்."

"நிறுத்திவிட்டால் நீ துடித்துப் போய்விடுவாய்."

"உங்கள் குறும்பு பொறுக்க முடியவில்லை."

"அதிலுள்ள ஆனந்தத்தை மறைத்துவிட்டாயே."

"அழைத்து விடுவேன் ஊரையெல்லாம்."

"அம்பலமாகிவிடும் உன் அந்தரங்கம்."

"மறைத்து விடுவேன் உங்களை என் முந்தானையில்."

"பிடித்துவிடுவேன் இடம் நிரந்தரமாக."

"முகத்தைப் பாருங்கள் அசடுவழிகிறது."

"அது மட்டுமா வழிகிறது? ஆசையுமல்லவா வழிகிறது."

"ஆசை அதிகமானால் ஆபத்தும் அதிகமாகிவிடப்போகிறது."

"உன் அன்பெனும் ஆழ்கடலிலே ஆனந்தமயமான ஆசையலைகள் ஆர்ப்பரிக்கும் வரைக்கும் எந்த ஆபத்தும் அடிபட்டுக் கரை ஒதுங்கி விடும் செண்பகவல்லி!"

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்று நீங்கள் படிக்கவில்லையோ?"

"ஆற்று நீரல்லவே நீ! வெள்ளம் அடித்துச் சென்றுவிடுமென அஞ்சுவதற்கு,"

"அப்படியென்றால் நான் கிணற்று நீராக இருந்து விடவேண்டியதுதானா?"

"ஊரறிய மாலையிட்டு உல்லாசத் தேரில் உன்னை அருகிருத்தி, ஊர்வலங்கள் செல்லத்தான் என் உள்ளமும் துடிக்கிறது செண்பகவல்லி. ஆனால், உத்தமன் என் தலைவன் சத்தியத்தை நிலைநாட்டப் போராடுகிறான். அவன் இலட்சியத்தில் நானும் பங்கெடுக்க வேண்டாமா? என்றாலும் நித்திலமே உன் நினைவலைகள் என் நெஞ்சில் நிறைந்திடும் நேரமெல்லாம் நின்மடியில் நானிருக்கும் கனவுகள்தான் கண்மணி நீ அறியாயோ?" என்றுரைத்த அருள்வர்மன் கட்டியணைத்தான் அவளை.

"கனவுகளைக் கூடக் கவிதையாக் கிவிடுகிறீர்களே! கம்பன் பரம்பரையோ நீங்கள்?"

"காதற் கனவுகளும் கவிதையாய் வருவதற்கு உன் கண்ணசைவே போதுமடி செண்பகவல்லி."

"காதலுக்கும் கவிதைக்கும் கற்பனைதான் காரணமோ?"

"காந்தக் கருவிழியும் பாந்தள் திரிசடையுங் கண்டு ஏங்கி நின்ற நாட்கள்தான் எத்தனையோ. இன்று நீங்கிவிட்ட தேக்கங்கள் ஏன் தெரியுமா? செண்பகவல்லி நீ என் பக்கத்தில்." என்ற அருள்வர்மன் செண்பகவல்லியின் மடியில் சாய்ந்தான்.

"தூங்கிவிடாதீர்கள் அப்படியே. துடிக்கும் இளமை துன்புறுத்தும் என்னை. நான் தொடுத்த பூச்சரங்கள் வாடுவதை அறிவீரோ?"

"ஏங்குதலும் ஏனடியென் இன்பத்திளவரசி உன் மாங்கனிக் கன்னங்கள் மயக்கிடுமே நான் கடித்தால்."

"போங்களத்தான் நீங்கள் என்னைப் புகழ்ந்தது போதுமினி" என்று செண்பகவல்லி, பூவிதழைத் தான் தொடுத்த பூவையவள் தான் மயங்கி பொன் மேனி தான் குளித்தான வேர்வைதனில் மன்னவனும் வாடலுற்றான் போதைகொண்டு.

அருள்வர்மனின் அகண்டு பரந்த மார்பில் செண்பகவல்லி அயர்ந்து கிடந்தாள். அருள்வர்மனின் நிலைமையும், அத்தகையதொன்றுதான்.

அடிவானம் வெளுக்கத் தொடங்கியது.


அரண்மனையில் அசையா மணியின் ஓசை அதிரவைத்தது அவர்களை. அருள்வர்மன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். செண்பகவல்லி அவன் மார்பைப் பஞ்சணை என்று நினைத்து விட்டாளோ? என்று எண்ணத் தோன்றியது அவனுக்கு.

கொஞ்சினான் குனிந்து அவள் உதட்டில். அது குளிர்ந்ததோ அவளுக்கு. பிஞ்சு முகத்தாள் கண்திறந்தாள். ஆனால், பேசவில்லை எதுவும் கெஞ்சியது அவள் முகபாவம் அருள்வர்மனை.

'அத்தான் கொஞ்ச நேரம் பொறுத்து எழுந்தாலென்ன?' என்றது போலிருந்தது அருள்வர்மனுக்கு.

'மிஞ்சிவிடுவாளோ ரதியை இவள்?' என்றெண்ணியவன் கொஞ்சினான் மறுபடியும் அவளுதட்டில். பஞ்சமா அவனுக்கு முத்த மழை! விஞ்சிடுமே அட்சயபாத்திரத்தை?

"கொஞ்சியது போதுமினிச் செண்பகவல்லி" எனக்



கூறிவிட்டு வஞ்சியை விட்டெழுந்து கொண்டான் அருள்வர்மன்.

செண்பகவல்லி எழுவதற்கு முயன்றபோது கைத்தலம் கொடுத்து உதவினான் அருள்வர்மன். மெதுவாக அவன் கையைப் பற்றியவாறே எழுந்தவள் அவன் மார்போடு இணைந்து கொண்டாள்.

"அத்தான், மறுபடியும்..." என்று கேட்க நினைத்தவளுக்கு வார்த்தை வெளிவரவில்லை; நா எழவில்லை. கண்களில் நீர்கோர்த்து நின்றது. அருள்வர்மன் மெல்ல அவள் நாடியைத் தொட்டு தன் முகத்துக்கு நேரே நிமிர்த்திய பொழுது அவள் கண்களில் தோன்றிய முத்துக்கள் கணப்பொழுதில் அவனைக் கதிகலங்கச் செய்துவிட்டன. சுதாகரித்துக் கொண்டு, "செண்பகவல்லி! ஏன் இந்தக் கலக்கம்? இன்னும் சிறுபிள்ளையல்லவே! ஒரு போர் வீரனின் வருங்கால மனைவி என்பதை மறந்து விட்டாயா?" என்று கேட்டதுதான் கேட்டான். "போதும் போங்கள்" என்று அவனைத் தள்ளிவிட்டாள். ஏதும் புரியாதவனாய் விக்கித்து நின்ற அருள்வர்மனைச் செண்பகவல்லி நெருங்கி வந்தாள். "ஏன் விழிக்கிறீர்கள்? நான் வருங்கால மனைவி என்றால், இப்போது என்னவாம்?" என்றவள் மறுபக்கம் திரும்பி நின்று கொண்டு கண்களைத் துடைப்பவள் போலப் பாசாங்கு செய்தாள்.

கதிரவனைக் கண்ட பனி அகல்வது போல் அருள்வர்மனின் மனதில் தோன்றிய கலக்கம் மறையத் தொடங்கிவிட்டது என்பதற்கு அறிகுறியாக அவன் முகம் இலேசாக மலரத் தொடங்கியது.

"ஓகோ! இவ்வளவுதானா விடயம்? இதற்காகவா இத்தனை கோபம்" என்றவன் தாவி அவள் கையைப் பிடித்தான்.

"என்னைத் தொடாதீர்கள். நான் மனைவியான பின் வேண்டுமென்றால்" என்று முடிப்பதற்கு முன், "செண்பகவல்லி என்று உன்னைக் கண்டேனோ அன்றே என் இதயத்தில் இல்லை, இல்லை என் இதயம் என்னும் இல்லத்தில் அரசி ஆக்கிவிட்டேன் உன்னை" என்றான் அருள்வர்மன்.

"அப்படியென்றால் வருங்கால மனைவி என்று கூறும்பொழுது மயக்கத்திலா இருந்தீர்கள்? ஏன் விழிக்கிறீர்கள்?" என்றவள், அருள்வர்மன் காணாதபடி மறுபக்கம் பார்த்துக் கொண்டு இலேசாக முறுவலித்தாள். அந்த விசமச் சிரிப்பை அருள்வர்மன் காணவில்லை. அதனால் அவளைச் சமாதானப்படுத்த வேண்டுமாயின் சரணடைவதை விட வேறு வழி அவனுக்குத் தென்படவில்லை.

"செண்பகவல்லி! தவறுதான். ஏதோ வாய் தடுமாறிவிட்டது. தவறுக்கு மன்னிப்புக் கேட்கட்டுமா?" என்று கேட்ட பொழுது, அவன் தொனியில் கெஞ்சல் இழையோடியதைச் செண்பகவல்லி பயன்படுத்திக் கொண்டு, "மன்னிப்பளிக்கத்தக்க குற்றமா இவையெல்லாம் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உங்களுக்குப் புத்தி வரும்" என்றாள் கடுகடுப்பாக.

'என்னடாயிது வாய் தவறிக் கூறினால் கூட வம்பாகிவிடுகிறதே!' என்று மனதுக்குள் எண்ணியவன், "தண்டனையா? அப்படி என்ன தண்டனை தருவதானாலும் உடனே நிறைவேற்றிவிடு. நாழிகை ஆகிறது" என்று அவசரப்படுத்தினான் அருள்வர்மன்.

"நான் இப்போது தரப்போகும் தண்டனை நீங்கள் என்றுமே மறக்க முடியாததாயிருக்க வேண்டும். என் அருகில் வாருங்கள்" என்று அதட்டினாள் செண்பகவல்லி.

செய்வதறியாது அருள்வர்மன் அவளை நெருங்கினான். அவன் எதிர்பாராத வண்ணம் அவன் முகத்தை தன்பக்கம் இழுத்தவள், அவன் கழுத்தைத் தன் இரு கைகளாலும் அணைத்தவாறு அருள்வர்மனின் உதட்டில் முத்தமிடுவதற்குப் பதிலாக அவன் உதட்டைக் கடித்துச் சுவைத்து விட்டாள். கணப்பொழுதில் தன்னை விடுவித்துக் கொண்டவன், மோசக்காரி, திருடி என்றவனைத் தள்ளி விட்டு விட்டு, அப்பால் சென்றவள் "ஏமாந்தீர்களா?" என்று மேலும் சீண்டினாள். "உன்னை..." என்றவாறு தாவிய அருள்வர்மனிடமிருந்து லாவகமாகத் தப்பிக் கொண்டாள் செண்பகவல்லி.

"இன்றைய வெற்றி உனக்குத்தான், மறுமுறை இதற்கு வட்டியும் முதலுமாகப் பெற்றுக்கொள்கிறேன்" என்றவன், "வரட்டுமா செண்பகவல்லி?" என்ற கேள்வி யோடு தன் புரவியின் மேல் தாவியேறியதும் புழுதி யைக் கிளப்பிய வண்ணம் புயலெனப் பறந்தது புரவி.

புரவி கிளப்பிவிட்ட புழுதி அடங்கும் வரை அவன் சென்ற பாதையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த செண்பகவல்லியின் நெஞ்சி லெழுந்த துயரம் நெடுமூச்சாக எழுந்து தணிந்தது. அரண்மனையை நோக்கிச் சென்று கொண் டிருந்த அருள்வர்மனுக்கு செண்பகவல்லியின் செயல்கள் நெஞ்சில் நிழலாடிய வண்ணமிருந்தன.


***"வேட்ட பொழுதின் அவையவை போலுமே***
***தோட்டார் கதுப்பினாள் தோள்"***

(அதிகாரம் : 111 - குறள் : 1105)


# 2006 கிண்ணம் யாருக்கு?

FIFA WORLD CUP
GERMANY
2006

**கால் பந்து** இரசிகர்களின் திருவிழா ஒன்பதாம் திகதி ஆரம்பமாகிறது. 32 நாடுகள், 64 போட்டிகள், 300 கோடி இரசிகர்கள் என ஆரவாரமாக 2006ஆம் ஆண்டிற்கான உலகக்கோப்பை கால் பந்துப்போட்டி ஜேர்மனியில் நடக்கவுள்ளது. உலகிலுள்ள 7




கண்டங்களில் அந்தாட்டிக்காவைத் தவிர மற்ற எல்லாக்கண்டங்களிலும் கோடிக்கணக்கான இரசிகர்கள் இருக்கின்றனர். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இப்போட்டியானது இரண்டாம் உலகப்போரின் காரணமாக தடைப்பட்டிருந்தது. பின்னர் 1954ம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடந்த போட்டிகளில் பிரேஸில் ஐந்து தடவையும், இத்தாலியும் ஜேர்மனியும் தலா மூன்று தடவையும், ஆர்ஜன்டீனா இரண்டு தடவையும், இங்கிலாந்தும் பிரான்ஸும் தலா ஒருதடவையும் உலகக் கோப்பையை வெற்றியீட்டியிருக்கின்றனர்.




வெற்றிபெறக்கூடிய வாய்ப்புகள் கொண்ட அணிகளாக ஆறு அணிகள் எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்தியுள்ளன. பல சூப்பர் ஸ்டார் வீரர்களைக் கொண்ட பிரேஸில் அணி முதலிடத்தை வகிக்கின்றது. றொனால்டோ றொனால்டினோ ராபாட்ரோ கார்லஸ், இவர்களோடு கப்டன் கபு ஆகியோரோடு, யானை பலத்தோடு களமிறங்குகிறது பிரேஸில் அணி. இங்கிலாந்து அணிக்கு கப்டன் டேவிட் பெக்காமும,மைக்கல் ஓவனும் தான் நம்பிக்கை நட்சத்திரங்கள். இன்னொரு நட்சத்திரமான ரூனிக்குக்கு கால் முறிந்து சிகிச்சை பெற்றுவருவதால் இங்கிலாந்து அணிக்கு இலேசான



தடுமாற்றம் உண்டு.

போட்டிகளை நடாத்தும் ஜேர்மனி அணி கோப்பைக் கனவோடு களமிறங்குகின்றது. இதுவரை நடந்த உலகக்கிண்ணப்போட்டிகளில் எட்டுத் தடவை இறுதிப்போட்டிக்கு தெரிவான ஒரே அணியாகும். அவர்களின் வெற்றிக் கனவுக்கு பலம் சேர்ப்பவர் ஜேர்மணி அணியின் கோல்கீப்பர் ஒலிவர்கான். சென்ற உலகக்கோப்பை இறுதியாட்டத்தில் பிரேஸிலும் ஜேர்மனியும் மோதிய போது இரண்டு கோல்கள் போடுவதற்குள் பிரேஸில் வீரர்கள்




தலையால் தண்ணி குடிக்க வேண்டியதாயிற்று. இதற்காகவே இறுதியில் மிகச் சிறப்பாக விளையாடும் வீரருக்கு வழங்கப்படும் தங்க கால்பந்து விருது 2002ல் ஒலிவர்கானுக்கு வழங்கப்பட்டது. முதன்முதலில் கோல்கீப்பர் ஒருவருக்கு இவ்விருது வழங்கியது அதுவே முதல் தடவையாகும்.

1998ஆம் ஆண்டு உலகக்கோப்பையை கைபற்றிய

## ஸ்போர்ட்ஸ்


ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

பிரான்ஸும் நம்பிக்கையோடு தன்னைத் தயார் படுத்தி வருகிறது. பிரான்சின் அதிரடி வீரரான ஜினடின் ஜிடேன் களமிறங்குகிறார். அனேகமாக அவர் விளையாடும் கடைசி உலகக் கோப்பைப் போட்டி இதுவாக இருக்கும். இவர் தவிர கென்ரிதியரி, லிவியன்துாரம், ஆகியோர் பிரான்ஸ் இரசிகர்களின் நம்பிக்கைகுரியோர். பிரான்ஸ் அணியில் இருக்கும் இன்னொரு அதிரடி வீரர் ∴ பேபியன் பர்தேஷ் அணியின் கோல்கீப்பரான இவர் உலக சாதனை வீரராவார். கோல்கீப்பர் ஒருவர் எதிரணிக்கு எதிராக கோல் அடித்ததே இவரது சாதனையாகவுள்ளது.

மேற்படி சூப்பர் வரிசை அணிகளில் இடம் பிடித்தாலும் இரண்டாந்தர அணிகளாக பார்க்கப்படும் ஆர்ஜென்டீனாவும், இத்தாலியும் உள்ளனர். சேவியர் சவோலோ எனும் இளம் வீரர் மட்டுமே ஆர்ஜென்டீனாவின் நம்பிக்கைகுரிய வீராக இருக்கின்றார். மரடோனாவுக்குப் பின்னர் ஆர்ஜென்டீனா




அணி பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பிரான்ஸிக்கோ டோட்டி, அலெக்ஸ்சான்ரோ டெல்பியரோ ஆகிய இருவர் மட்டுமே இத்தாலி




அணிக்குப் பிரகாசம் சேர்க்கிறார்கள். நடக்கப்போகும் கால்பந்து வீரர்களின் திருவிழாவிற்கு நாமும் தயாராவோம்.

**🍷 இம்மாதம் 9 ஆம் திகதி நடக்கவுள்ள 18 ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரேஸில் அணியே வெற்றி பெறும் என 3000 கோடிகளுக்கு மேல் பந்தயங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.**

**🍷 இம்முறை உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் பயன்படுத்தியுள்ள பந்துகள் விளையாடுவதற்கு சிரமாக இருக்கும் என பிரேஸில் நாட்டு வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

**🍷 உலகக் கிண்ண கால் பந்தாட்ட போட்டிகள் நடைபெறும் வேளையில் பார்வையாளர் பகுதியில் இருக்கும் ரசிகர்களோ வேறு எவருமோ கலவரத்தில் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்படும் என ஜெர்மன் நாட்டுப் பொலிஸார் எச்சரித்துள்ளார்.**





## அரவாணிகள் எதிர்கொள்ளும்......

16 ஆம் பக்கத் தொடர்ச்சி...

**தம்மை** காப்புறு செய்யக்கூட அரவாணிகளுக்கு உரிமை இல்லை என்பதுதான் வேதனையின் உச்சக்கட்டம். எந்தக் காப்புறுதி நிறுவனமும் அரவாணிகளை அங்கீகரிக்க தயாரில்லை.

இத்தனைய புறக்கணிப்பே அரவாணிகளை பாலியல் சீர்கேட்டில் ஈடுபடவும் விபச்சாரத்திற்கும் தள்ளுகின்றது. சில வக்கிரமான பாலியல் தேவைகளை, விலை மாதுக்களிடம் பெற்றுக்கொள்ள முடியாத ஆண்கள் அரவாணிகளையே அணுகுகின்றனர். உதாரணமாக வாய் மூலமாக (Oral Sex ) பாலியல் உறவு போன்றன.

இந்தியாவில் தற்போது ஒரு தனியினமாக அரவாணிகள் ஏற்றுக்கொள்ளப்படும்



நிலைமை உருவாகின்ற போதிலும் இலங்கையிலும் அதற்குரிய சூழ்நிலை ஏற்படவில்லை. இந்தியாவில் அரவாணிகளுக்கு என்று அமைப்புகளும் சங்கங்களும் கூட உண்டு. அரவாணிகளுக்கு என்று இருக்கும் கூத்தாண்டவர் கோயில் கூட தமிழ் நாட்டில் உண்டு. வருடந்தோறும் நாடு முழுவதிலும் இருந்து அங்கு திருவிழாவிற்கு அரவாணிகள் கூடுவது அனைவரும் அறிந்ததே.

இலங்கையில் குறிப்பாக கொழும்பில், லேக்ஹவுஸ் சுற்றுவட்டப்பகுதி கோட்டை புகையிரத நிலையப் பகுதி, மருதானை மேம்பாலப்பகுதியில் அரவாணிகளை தற்போது சர்வசாதாரணமாக எவரும் காணக்கூடியதாக உள்ளது. சமுதாயத்தில் வேறு வழியின்றி தமது வயிற்றுப்பிழைப்பிற்கு பாலியல் தொழில் நடத்துபவர்களாகவே அரவாணிகள் காணப்படுகின்றனர் என்பது கண்கூடு.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 5, கூட்டெண் - 5

**5,14,23,** போன்ற திகதிகளில் பிறந்து, திகதி மாதம் வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால், இவர் பூரண புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவார். இவர்கள் பார்ப்பதற்கு நடுத்தர உயரமானவர்களாகவும், கவர்ச்சியான தோற்றமுடையவராகவும் காட்சியளிப்பர். பேரறிவும் பெரும் செல்வமும் கொண்ட மனிதர்களாக வாழும் பாக்கியமுடையவர்கள். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று துரிதமாகச் செயல்படுவர் இவருடன் இருப்பவர்கள் சிறிது கவனக்குறைவுடன் இருந்தாலும் கடுமையாகக் கண்டிப்பர்.

எப்பொழுதும் பிறருக்கு உதவ முன்வருவதால், பலருடைய ஆதரவு இவருக்கு கிடைக்கும். பலருக்கு அறிவுரை கூறும் திறமை படைத்தவராக விளங்குவதால் இவர்களை எல்லோரும் மதிப்பர். கலை நுணுக்கத் திறன் கொண்ட இவர்களுக்கு எங்கு சென்றாலும் வர வேற்பு இருக்கும். இவர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விட்டால் நாட்டின் மிக முக்கியமான மனிதர் களாக விளங்கும் வாய்ப்பு வந்துவிடும். ஆனால், மோச மான பலன் கொடுக்கும் எண்களில் பெயர் அமையு மேயானால் நேருக்கு மாறான பலனை அடைந்து திறமை இருந்தும் வாழ்க்கை சோதனை நிறைந் ததாகிவிடும்.

இவர்கள் சிந்தனை மின்னல் வேகத்தில் செல்லக் கூடியது. எதையும் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டுமென எண்ணுவர். மற்றவர்கள் தாமதமாக காரியங்கள் செய் தால் உடனே இவர்களுக்கு கோபம் வந்துவிடும் யார் எதைச் சொன்னாலும் உடனே கிரகித்துக் கொள்ளும் தனித்தன்மை படைத்தவர்கள். இவர்கள் சொல்லுகின்ற காரியத்தை மற்றவர்கள் செய்யவில்லை என்றால் கடுமையாக நடந்து கொள்வர். இவர்களைப் போன்று இவர்களைச் சார்ந்திருப்பவர்களும் சுறுசுறுப்புடன் இருக்க வேண்டும் என நினைப்பர். பிறருக்கு பல நாள் சிந்தித்து புரியாத ஒரு காரியத்தை உடனே சிந்தித்து கண்டு பிடிக்கும் ஆற்றல் இருப்பதால் எங்கு சென்றாலும் பிறர் மதிக்கும் மனிதராக வாழ்வர். முன் கோபம் வராதபடி பழகிக் கொள்வது சிறப்பாகும்.

சில நேரங்களில் குழந்தை போன்று பழகும் இவர் கள் தன் மனதில் உள்ளதை மறைக்காமல் வெளியிடுவர். இவர்கள் காதல் விவகாரங்களைக் கூட சுற்றியுள்ள வர்கள் அறிந்திருப்பர். ஆனால் அதைப் பற்றி கவலை படாது நடந்துகொள்வர். நுண்ணறிவு படைத்த இவர்கள் எதையும் எளிதில் புரிந்து கொண்டு அதை எளிதில் செய்ய முற்படுவார்கள். பல இடங்களை சுற்றிப் பார்ப் பதிலும், ஒவ்வொரு இடங்களிலும் என்ன பொருள் விளைகிறது, கிடைக்கிறது என ஆராய்ச்சியிலும் ஈடுபடுவார். வெளி நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்று அறியவும் ஆசைப்படுவர். விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் போன்ற துறைகளில் அதிக நாட்டம் உடையவர்களாக இருப்பர். இவர்களுக்கு எப்போதும் வருவாய் வந்து கொண்டிருக்க வேண்டும். எண்ணம் அதிகம் இருப்பதால், பல்வேறு வழிகளில் சென்று பொருளீட்டுவர்.

***தொழில்:***

கமிஷன், கண்ட்ராக்ட், ஏஜென்சிஸ், வாகனம், இரும்பு சம்பந்தமான தொழில், மருத்துவம், எழுத்துத் துறை, போன்றவற்றால் பொருளீட்டுவர்.

***நோய்:***

இவர்களுக்கு இரத்த அழுத்தம், மூட்டுவலி, முதுகு வலி, பல்வலி போன்றவை வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

புதனின் பூரன பலன் கொண்ட இவர்கள் புதன் ஆதிக்கத்திலும் செவ்வாய் ஆதிக்கத்திலும் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77 செவ்வாய் ஆதிக்கமான 27, 36, 45 ஆகிய எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண்: 5, 9.

யோகமான திகதி: 3, 5, 9, 12, 14, 18, 21, 23, 27, 30.

யோகமான மோதிரக்கல் : வைரம், ஜிர்கான்

யோகமான நிறம் :
சாம்பல் (எல்லா நிறமும் உகந்தவையே)

ஆகாத நிறம் : இல்லை

ஆகாத திகதி : இல்லை

அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 6 பற்றிப் பார்ப்போம்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

**உலகை வியக்க வைத்தவர்கள்**

சென்றவாரத் தொடர்ச்சி

**இளம் டி—வேர்** அவரது உயர்குடிப் பிறப்பின் உயர் தகுதிக்கேற்ப செசிலின் குடும்பத்தில் ஓர் உறுப்பினராகவே மதிக்கப்பட்டார். (ஒரு மர்மமான நிகழ்ச்சியில், செசிலின் பணியாட்களில் ஒருவனை டி-வேர் கொன்று விட்டதாகவும், அந்த வழக்கு செசிலின் செல்வாக்கினால் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை என்றும் கூறுவர்). அவர் தம் குமரப் பருவத்தின் பிற்பகுதியில் அரசவையில் அறிமுகப்படுத்தப்பட்டார்; அங்கு அரசியார் உட்பட அரசவைப் பிரமுகர்கள் அனைவரையும் அவர் சந்தித்தார். அவர் அறிவுத்திறன் மிக்கவராக விளங்கினார்; கவர்ச்சிமிக்க அழகிய இளைஞனாக எல்லோருடனும் சுமுகமாகப் பழகினார். இப்பண்புகள் காரணமாக இவர் அரசியாரின் செல்லப்பிள்ளைகளில் ஒருவரானார்.

இவர் தமது 21ஆம் வயதில் தம் காப்பாளரின் மகள் ஆனி செசிலை (Anne Cecil) மணந்து கொண்டார். அவர்கள் இருவரும் இளைமையிலிருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள். அதனால், அவள் அவருடைய 'தங்கை' போன்றே கருதப்பட்டாள். அவர்களிடையே திருமணம் நடந்தது. அப்போது மரபு மீறியதாகக் கருதப்பட்டது. (சிம்பெலின் (Cymbelin) என்ற நாடகத்தின் நாயகன் பாஸ்துமஸ் லியோனாட்டஸ் (Pothumsus Leonatus) அரசவைக் காப்பாண்மையில் வளர்ந்தவன்; அவனும் தம் காப்பாளரின் மகளை மணந்து கொண்டான்; அவன் கதைக்கும் டி-வேரின் வரலாற்றுக்குமிடையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன).



டி-வேர் தம் 24 ஆம் வயதில் ஐரோப்பா முழுவதும் நீண்ட பயணம் மேற்கொண்டார். பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கும் சென்றார். இத்தாலியில் 10 மாதங்கள் தங்கியிருந்தார். பின் பிரான்ஸ் வழியாக இங்கிலாந்து திரும்பினார். அவர் திரும்பி வருகையில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும்போது, அவரது கப்பலை கடற்கொள்ளையர்கள் தாக்கினார்கள். அவரைப் பணயக் கைதியாகப் பிடித்து வைத்துக்கொள்ள அவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், எலிசபெத் அரசியாருடன் தமக்குள்ள நெருங்கிய நட்பு குறித்துக் கொள்ளையரிடம் டி-வேர் தெரிவித்தார். பணயத் தொகை கேட்காமல் அவரை விடுவித்து விடுவதே அறிவுடைமை என்று கொள்ளையர்கள் முடிவு செய்தனர். (இதே போன்றதொரு அனுபவம், 'ஹேம்லெட்' நாடகத்தில் கதாநாயகனுக்கு ஏற்படுகிறது).

இதற்கிடையில், இவருடைய மனைவி ஆனி, ஒரு மகளுக்குத் தாயானாள். இங்கிலாந்தை விட்டு டி-வேர் புறப்பட்ட எட்டு மாதங்களுக்குப் பிறகே இந்தக் குழந்தை பிறந்திருந்தது. எனினும், இக்குழந்தை தமக்குப் பிறந்தது இல்லை என்று டி-வேர் வாதிட்டார்; ஆனி நடத்தை கெட்டவள் என்று பொய் குற்றச் சாட்டுகள் கூறப்படுவதை மிகச் சாதாரணமாகக் காணலாம். (எடுத்துக்காட்டாக, "நன்மையில் முடிவதெல்லாம் நன்மையே" (All's Well Thats Ends Well) "சிம்பலின்", "குளிர் காலத்தை" (Cymbeline the Winter 's Tale) "ஒத்தெல்லோ" (Othello) ஒவ்வொரு நேர்விலும், பாதிக்கப்பட்ட மனைவி தன் கணவனை மன்னித்துவிடுகிறாள்).

மனைவியிடமிருந்து பிரிந்து வாழ்ந்த ஐந்தாண்டுகளின் போது, அரசவைப் பெண்மணி ஒருத்தியுடன் டி-வேர் தொடர்பு கொண்டிருந்தார். இதனால், அவள் கருவுற்றாள். இதனால் கோபங்கொண்ட எலிசபெத் அரசியார், இவரைக் கைது செய்து, லண்டன் கோபுரச் (Tower of London) சிறைச் சாலையில் அடைத்தார். சில மாதங்களுக்குப் பிறகு இவர் விடுதலையானார். ஆனால், இவரது நடவடிக்கையினால், ஆத்திரமடைந்திருந்த அந்த இளம் பெண்ணின் நண்பர் ஒருவர், டி-வேரைத் தாக்கினார்; அதனால் இவர் படு காயமடைந்தார். இதைத் தொடர்ந்து இரு குடும்பத்தினருக்கும் இடையில் தெருச் சண்டைகள் சிறிது காலம் அடிக்கடி நடந்தன. இறுதியில், இந்தச் சண்டைகளை நிறுத்தாவிட்டால், அவர்கள் அனைவரையும் சிறையிலடைத்துவிடப்போவதாக எலிசபெத் அரசியார் அச்சுறுத்திய பிறகே இச்சண்டைகள் ஓய்ந்தன. (இது, "ரோமியோ-ஜூலியத்" நாடகத்தில் வரும் தெருச் சண்டைகளை நினைவுபடுத்துகிறது).

டி-வேர் தம் மனைவியுடன் மீண்டும் வாழத் தொடங்கிய பிறகு, அவர்களுக்கு மேலும் நான்கு குழந்தைகள் பிறந்தனர். மொத்தத்தில் அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் இருந்தனர். அப்போது ஆனிக்கு 32 வயதுதான். அந்த வயதில் ஆனி திடீரெனக் காலமானாள். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு டி-வேர் மறுமணம் செய்து கொண்டார். அவருடைய இரண்டாம் மனைவி, அவருக்குப் பின்னரும் உயிர் வாழ்ந்தாள்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



வணக்கமுங்கோ!

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

**நாட்டு** நடப்புகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டு போகுது. மறைந்திருந்து சுடுறது, பிறகு கைக்குண்டு வீசிறது, பிறகு கிளைமோர் வெடிக்க வைக்கிறது எண்டிருந்தது - இப்ப நேரடியா சமர் செய்யிறதெண்டு நாலாம் கட்ட ஈழப் போர் நடந்து கொண்டிருக்கு. உள் நாட்டில நிலைமை உப்பிடியெண்டால், வெளிநாடுகளில நிலைமை தலைகீழா இருக்குது. பயங்கரவாதத் தடை எண்ட விசயம் பயங்கரமா அமுல்படுத்தப்பட்டிருக்குது. உப்பிடியே போனால் கடைசியில எந்தப் பக்கமும் தலைக் கறுப்பைக் காட்ட முடியா தெண்ட நிலை தான் வரும் போல கிடக்கு.

எங்கட மக்களின்ர வரலாறு தெரிஞ் சவையும், தொடர்ந்து போராடிக் கொண் டிருக்கிறவையும் குறிப்பிட்டுச் சொல்லுற விசயம் என்ன தெரியுமோ, எங்கட மக்களின்ர விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடத்தை விட்டும், நோக்கத்தை விட்டும் திசை மாறி, அவரவரின்ர இருப்புக்காகவும், தலைமை வெறிக்காகவும் தான் இப்ப நடத்தப்பட்டுக் கொண்டிருக்குதெண்டதுதான். உந்த தீர்க்க தரிசனமான கருத்தை மீண்டுமொருக்கால் நிருபிக்கிற விதமாகத்தான் உந்த பயங்கரவாதத் தடையும் எண்டு சொல்லினம். இதுபோக இன்னொண்டு தெரியுமா, எங்கட சனத்தை சில பேர் பார்க்கேக்க, ஏதோ பயங்கரவாதியைப் பார்க்குமாப்போலதான் பார்க்கினமாம். அவை அப்புடிப் பார்க்கிறதுக்கு ஒரு காரணம் இருக்கு. தமிழ் மக்கள் தான் புலிகள், புலிகள் தான் தமிழ் மக்களெண்டு இயக்கம் செய்த பிரசாரத்திலதான் பிழையிருக்கு. முன்னம் ஒரு காலத்தில சிங்கள ஆமிக்காரன் யாரைப் பாத் தாலும் 'கொட்டியா' என்று சிங்களத்தில விளிச்ச மாதிரித்தான் இப்பவும் பாக்கினம் போலை. பிறகு எங்கட சனம் நாங்கள் கொட்டியா இல்லை; கொட்டியா காட்டுக்குள்ள இருக்கினம். போய்ப் பிடியுங்கோ எண்டு ஆமிக்காரர்களுக்கு விளக்கப் படுத்தினமாதிரி இப்பவும் தமிழரெல்லாம் பயங்கரவாதி களில்லை; அவை அரசின்ர கட்டுப் பாட்டுக்கு அங்காலை இருக்கிற பகுதிகளுக்குள்ள இருக்கினம். போய்ப் பாருங்கோ எண்டு சொல்ல வேணும் எண்டு சனம் சொல்லினம். சனத்தின்ர உந்தக் குழப்பத்தில இருந்து என்ன தெரியு தெண்டால் உந்த விடுதலைப் போராட்டம் இன்னும் எத்தனை காலத்துக்குப் பிறகு தன்ர இலக்கை அடையுதோ தெரியாது. ஆனால் இதுவரையான போராட்டத்தில எங்கட தமிழ் சனத்தை வாழவும் விடயில்லை. நரக வேதனையில்லாம சாகவும் விடயில்லை எண்ட பெருங் கவலையும் இன்னும் எங்கட சனத்துக்கு ஒரு ஏக்கமாகவே இருக்குது.

பாதுகாப்போடை இருக்கிறவை நியாயம், அநியாயத்தைப்பலத்திக் கதைக்கினம். பாது காப்பு இல்லாதவை என்ன நம்பிக்கையில கதைக்கிறது? ஏண்டாப்பா சோலி எண்டு தங்கட வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கினம். உதை தெரிஞ்சுகொண்டுதான் இயக்கம் தான் செய்யிற எல்லா வன்முறைக்கும், தாக்கு தல்களுக்கும் மக்கள் தான் காரணம் எண்டினம். சரி ஒரு கதைக்குப் பார்த்தால், சிங்களப் படைகள் தமிழ் மக்களுக்கு எதிராக ஏதாவது செய்யினம் எண்டால், அதுக்கு எதிராக மக்கள் தாக்கினம் எண்டால், இவை இயக்கம் என்ன செய்யினம்? அவை சும்மாவே இருக்கினம். மக்களை மக்கள் பார்த்துக் கொண்டால் இவைக்கு என்ன வேலை இருக்கு? ஒண்டுமில்லையே! உதாரணத்துக்கு உந்த ஐரோப்பிய தடை அறிவிக்கப்பட்ட தெல்லோ அதைப் பற்றி அவர் சு.ப.தமிழ் செல்வனிட்டச் செய்தியாளர்கள் கேட்டதுக்கு அவர் சொல்லுறார்... தமிழ் மக்கள் தடையை ஏமாற்றமாகப் பாக்கினமாம், அவையை சர்வதேச சமூகம் பாரபட்சத்தோடு பாக்குது எண்டு கவலைப்படுகினமாம், என்ன கேட்ட துக்கு இவர் என்ன பதில் சொல்லுறார். மக்கள் என்ன நினைக்கினம் எண்டு இவரிட்ட யாரும் கேக்கயில்லையே. உவரே வலிய மக்களைப் பற்றி இழுக்கிறார். மக்கள் என்ன நினைக்கினம் எண்டது ஒரு பக்கமிருக்கட்டும். நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டுதான் சனம் கேக்க நினைக்குதுகள். உந்தக் கேள்வியை மக்கள் சார்பாக ஒரு ஊடக வியலாளனாவது கேட்டால் அண்டைக்குத் தெரியும் சு.பா.வின்ர சுய புத்தி. தொட்டதுக்கெல்லாம் மக்கள்தான் அப்புடி நினைக்கினம். மக்கள் தான் இப்புடி நினைக் கினமெண்டால் உங்களுக்கு சூடு சொரணை இல்லையோ, நீங்கள் சொந்தமாக ஒண்டையும் சிந்திக்க மாட்டியளோ. சனம் சிங்களப் படை யோட சண்டை பிடிக்கு தெண்டால் நீங்கள் மேல் மட்டத்தில கை கொடுப்பியள், கட்டிப் பிடிப்பியள், பார்ட்டி நடத்துவியள், கேட்டால் பேச்சுவார்த்தை, சமாதானம் எண்டுவியள். உப்பிடித்தானே முன்னம் சொல்லிக் கொண்டு திரிஞ்சியள். கடைசியில என்ன நடந்தது. ரணில் ஏமாற்றிப்போட்டார், மஹிந்த ஏமாற்றிப்போட்டார் எண்டு புராணம் பாடினியள். உருப்படியா நீங்கள் என்ன செய்யுறியள்? எண்டதைப் பத்தி இண்டைக்கு வரைக்கும் மூச்சுக் காட்டாம இருக்கிறியள். உப்பிடியெல்லாம் சனங்கள் கதைக்க வெளிக்கிட்டினம். அதுவும் மன்னாரில அகதியா இருக்கிற சனம் பயபக்தியில்லாம ஓப்பினாப் பேசினமாம். திருகோணமலையில இருந்து ஓடிவந்து மன்னாரில அகதியா இருந் தாப் போல உயிருக்குப் பாதுகாப்பு எண்டு நினைக்கினமாக்கும். அக்கரைக்கு இக்கரைப் பச்சை எண்ட மாதிரி, இந்தியாவுக்குப் போனவை நாட்டுக்கு வந்தால் நல்லது எண்டி னமாம். நாட்டில இருக்கிறவை இந்தியாவுக்குப் போனால் நல்லம் எண்டினம். யுத்தம் வரப் போகுதெண்டு சனத்தை விரட்டினவை, நோர் வேக்குப் போயிட்டு வந்துதான் மிச்சத்தை யோசிக்க வேணுமெண்டும் சொல்லிக் கொண்டிருக்கினமாம். உப்பிடியே நாட்டு நடப்பு போனால் கடைசியில எதில போய் முடியப் போகுதோ?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.06.2006 தொடங்கி 14.06.2006 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன். மிதுனம் - புதன். கர்க்கடகம் - சனி, செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. மேடம் - வெள்ளி.
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு, பிர யாண மிகுதி, பணவரவு கஷ்டம், உறவினர் உபத் திரம், குடும்ப மேன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், மனப்பயம், வீண் பிரயாசம், வெளியிட வாழ்க்கை, கடன் சுமை, கௌரவக் குறைவு, குடும்ப பகை, உத்தியோக நன்மை, பதவிகளின் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, குடும்ப கலக்கம், செலவு மிகுதி, உத்தியோக சிரமம், வீண்துயர், மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் அலைச்சல், பணியாளர் தொல்லை, மனக்கலக்கம், தேகசுகக் கஷ்டம், வெளியிட பிரயாணம், உறவினர் உபத்திரம், உத்தி யோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கவலை, செலவு மிகுதி, கடன்படல், பிரயாண மிகுதி, உறவினர் உபத்திரம், வெளியார் உதவி, மனப்பயம் நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், மன மகிழ்ச்சி, அன்னியர் சகாயம், பெரியோர் உதவி, குடும்ப பாரம், உத்தியோக சிறப்பு, மாணவர் கல்வி மந் தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் பலிதம், செலவதிகம், கடன் தொல்லை, உறவினர் உதவி, எதிர்பாரா பிரயாணம், குடும்ப சுகம், உத்தி யோக மாற்றம், மக்கலக்கம், மாணவர் கல்வி மந் தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் கெடுதி, பணியாளர் தொல்லை, மறைமுக எதிர்ப்பு, வீண்குறை கேட்டல், பெரியோர் உதவி, இனசன மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் சிறப்பு, காரியானு கூலம், கடின உழைப்பு, பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி, குடும்ப சுமை, உத்தியோக பகை, பதவி மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் பலிதம், பணவிரயம், எதிர்பாரா செலவு, உறவினர் தொல்லை, தூர இடப்பயணம், இனசன மகிழ்ச்சி, உத்தியோக சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் சிக்கல், காரியக் கெடுதி, வீண்துயர், புதிய முயற்சி, கடிக உழைப்பு, குடும்ப பொறுப்பு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியார் தொல் லை, தேகசுகக் கஷ்டம், வைத்தியச் செலவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

**தினமும்**

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல — 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## பெரிசு......

**தற்போது** இளைஞர்களின் முக்கிய உணவாக இருப்பது ஹொட் டோக் எனப்படும் வீசேட வகையான அமெரிக்க உணவு வகை. இவ் ஹொட் டோக்கில் ஏதாவது சாதனை படைக்க வேண்டுமென எண்ணிய தென்னாபிரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கிட்டத்தட்ட 10.5 மீற்றர் நீளமுடைய உடைக்கப்படாத ஸொசேஜஸ் ஒன்றினைத் தயாரித்து 2002இல் சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இவ் ஸொசேஜஸ் கிட்டத்தட்ட சாதாரண ஸொசேஜஸை விட 60 மடங்கு நீளம் கூடியது. இதற்கான பானை பேக் பண்ணுவதற்கு தாங்களே ஒரு நிலக்கரி வெதுப்பகம் ஒன்றினை தயாரித்தனராம்.

## பார்க்க மட்டும்



## தலைகவிழ பாய்வோம்

**கரணம்** தப்பினால் மரணம் நிச்சயம் என்பது இவ்விடயத்தில் உண்மையாகி விடும் போல்தான் இருக்கிறது. மெக்ஸிக்கோவில் இருக்கும் கடற்கரையொன்றில் குத்துப் பாறைகள் அதிகமாகவுள்ளது. இப்பாறைகளில் இருந்து தலைகீழாக கடலுக்குள் பாய்வதென்பது ஒரு விளையாட்டாகவே இருக்கிறது. கடலுக்கு அடியிலும் கூட இப்பாறைகள் உள்ளது. எதற்கும் பயப்படாமல் சாதனை செய்வது என்று முடிவு எடுத்துவிட்ட இந் நபர், 35 மீற்றர் உயரத்திலிருந்து தலைகுப்புற கடலுக்குள் பாய்ந்தாராம். பாய்ந்த போது இவர், கடல் நீருக்குள் 3.65 மீற்றர் உள் தாழ்ந்தாராம். கொஞ்சம் பிசகியிருந்தாலும் தலை சிதறியிருக்கும் என்கிறாராம் இச் சாதனையாளர்.






## விற்பனையில் சாதனை

**அமெரிக்க** கறுப்பினத்தைச் சேர்ந்தவரான பொப்பிசை மன்னர் என வர்ணிக்கப்படும் மைக்கல் ஜாக்சன் தற்போது சில வழக்குகளில் திண்டாடி வருவது தெரிந்ததே. ஆயினும் இவர் செய்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை. இவரின் பொப்பிசை அல்பமான த்ரீல்லர் எனப்படும் மிகப் பிரபல்யமான பொப் பாடல்கள் அடங்கிய இசை அல்பம் 1982ஆம் ஆண்டு 51 மில்லியன் பிரதிகள் விற்கப்பட்டு இசையுலகில் இன்னும் முறியடிக்கப்படாத சாதனையாக உள்ளது.

இதற்கடுத்ததாக கோஷ்ட் எனப்படும் அல்பமும் அதிக விற்பனையில் சாதனை படைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.





## உல்லாசப் பிரயாணம்


**உல்லாசப்** பிரயாணத்துறை வளர்ச்சிக்கு சில முக்கிய இடங்கள் பிரசித்திப்பெற்றவை. உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படும் ஈஃபிள் கோபுரம் அந்த வகையில் பிரசித்திப் பெற்றது. பிரான்ஸில் அமைந்திருக்கும் இக் கோபுரத்தினை 2003ஆம் ஆண்டு மட்டும் 75 மில்லியன் மக்கள் பார்வையிட வந்தனராம். உயரமும், அழகும் நிறைந்த ஈஃபிள் கோபுரம் அனைவராலும் பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதான்.



## அதிஆழம்

**நீருக்குள்** ஆழத்துக்குச் செல்ல செல்ல அமுக்கம் அதிகரிக்கும் என்பது விஞ்ஞானம். அதேபோல் ஆழத்துக்குச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல் கூட நீர் அமுக்கத்தைத் தாங்கும் வகையில்தான் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இங்குள்ள நீர்மூழ்கிக் கப்பலும் அதிக ஆழம் மூழ்கி செல்லக் கூடிய தன்மை கூடியது. இக் கப்பலுக்கு சைங்காய் 6500 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது கிட்டத்த 6526 மீற்றர் ஆழம் சென்று வந்ததாம். மூன்று பேர் செல்லக்கூடிய இக் கப்பல் 2.7 மீற்றர் அகலமும் 9.5 மீற்றர் நீளமும் 3.2 மீற்றர் உயரமும் உடையதாம். இது இன்னும் பாவனையில் உள்ளதாம்.

## 1, 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்



யோகராசா றெஜிதா தம்பதிகளின் அன்புப் புதல்வர்கள்.
1. யோபிதன் 14.05.2006 இல் இரண்டாவது பிறந்த தினத்தையும்
2. யோபிகன் 03.06.2006 இல் முதலாவது பிறந்த தினத்தையும் கன்டோன் கிளாறஸ் (Glarus) சுவீஸில் வெகு வீமரிசையாக கொண்டாடுகிறார்கள்.
இவர்களை அன்புடன் வாழ்த்துபவர்கள் :-
அப்பா, அம்மா,
தாத்தா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ராமார், மச்சான்மார். மச்சினிமார், அண்ணாமார், அக்காமார் உற்றார், உறவினர் ஆகியோர் மட்டுவில், நெல்லியடி பிள்ளையார் அருள் பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**யோபிதன்** (14.05.2006 இல் இரண்டாவது பிறந்த தினம்)
**யோபிகன்** (03.06.2006 இல் முதலாவது பிறந்த தினம்)